# பசுந்துளிர்

இதழ் 5



பிரதேச செயலகமும், கலாசாரப் பேரவையும், மற்றும் கலாசார அதிகார சபையும், பச்சிலைப்பள்ளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுந்துளிர்

## இதழ் ~ 5

பிரதேச செயலகமும், கலாசாரப் பேரவையும்
மற்றும் கலாசார அதிகார சபையும்
பச்சிலைப்பள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் :
பசுந்துளிர் – இதழ் –5
வெளியீடு :
பிரதேச செயலகமும், கலாசாரப் பேரவையும்
மற்றும் கலாசார அதிகார சபையும், பச்சிலைப்பள்ளி
பதிப்புரிமை :
பிரதேச செயலகம்,
பச்சிலைப்பள்ளி.
நிதியனுசரணை :
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
வடமாகாணம்
பக்கம் :
xvi + 108
பிரதிகள் :
150
வெளியீடு :
தை 2017
அச்சுப்பதிப்பு :
சிவகஜன் பதிப்பகம்,
கொடிகாமம்.
அட்டைப்படங்கள் பிரதிபலிப்பவை :
கரந்தாய்க் குளமும்,
பச்சிலைப்பள்ளி தென்னந் தோட்டங்களும்.
அட்டைப்பட உதவி :
K . ஸ்ரீஸ்கந்தராசா, மு. தமிழ்ச்செல்வன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமென திகழ்பரத கண்டமிதில்
தக்க சிறு பிறைநுதலும் தரித்த நறுந் திலகமுமே
தெக்கணமும் அதில் சிறந்த திராவிட நல் திருநாடும்
அத்திலக வாசனை போல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழணங்கே

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்து துடைக்கினுமோர்
எல்லையறு பரம் பொருள் முன்னிருந்த படி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாள முந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்று பல ஆயிடினும்
ஆரியம் போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே.

*மனோன்மணியம் பெ.சுந்தரம்பிள்ளை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலைப்பள்ளிக் கலாசாரப் பேரவைக் கீதம்

**பல்லவி**

பச்சிலைப்பள்ளி கலை கலாசாரம்
மெச்சி வளர்க்கும் பேரவை வாழி

**அனுபல்லவி**

இச் செகத்தினில் கலை இலங்கிட என்றும்
எழுந்து முயன்றிடும் இனியவோர் சங்கம்

**சரணம்**

கத்தும் கடல் சூழும் பச்சிலைப்பள்ளி
முத்தமிழ் ஓங்க முகிழ்ந்து நெஞ்சள்ளி
சித்தம் மகிழ்கலை படைத்திடும் பள்ளி
வித்தகர் திறன் கண்டு ஆடும் நிதம் துள்ளி

கமத்தொழில் கைத்தொழில் கடந்றொழில் காத்திடும்
எமக்கெல்லாம் உதவியே வளர்ச்சி வழங்கிடும்
நமக்கெனும் கலாசாரக் கலையை உயர்த்திடும்
நாடகமும் நடனமும் நம் புகழைப் போற்றிடும்

இயற்றமிழ் நற்றமிழ் உயர உழைத்திடும்
கற்றவர் போற்றிட கலையின்பம் காட்டிடும்
இற்றரைப் பண்பு பண்பாட்டை நிமிர்த்திடும்
உற்ற கலை வகை உயரச் செதுக்கிடும்

தெய்வ பக்தி குருபக்தி தேசபக்தியைக் கூட்டும்
தெங்கு நிறை சோலை என்றும் மங்களமே காட்டும்
உயர்வு நிலை மாந்தருக்கு நித்த நித்தம் ஊட்டும்
உன்னத மக்கள் சேவை இங்கு நிலை நாட்டும்.

இயற்றியவர் :
பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறத்தி அம்மன் தேவஸ்தான பிரதம குரு வழங்கிய ஆசிச் செய்தி



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் கலாசார அதிகாரசபையும் இணைந்து நடாத்தும் வருடாந்த கலாசார விழாவில் வெளியிடப்படும் பசுந்துளிர் இதழ் 05 நூலுக்கான ஆசிச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகிறேன்.

பசுமை நிறைந்த பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் பண்பாடு, கலை, கலாசாரம் மக்களின் வாழ்க்கை முறைகளைத் தாங்கி வெளிவருவதுடன் பிரதேசத்தின் வரலாற்றை எதிர்காலத்திற்கு எடுத்தியம்பும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை இந்நூலினை வருடாந்தம் சிறப்பாக செயற்படுத்தி வரும் பிரதேச செயலர், கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலாசாரப் பேரவையினர் எழுத்தாளர்கள் அனைவரையும் மனதாரப் பராட்டி வாழ்த்தி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

**''என்றும் வேண்டும் இன்ப அன்பு''**

**சிவஸ்ரீ ந.பிரபாகரக் குருக்கள்**
**அறத்தி அம்பாள் திருக்கோயில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலோப்பளை பங்குத்தந்தை அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கலாசார துறையினரால் ஆண்டு தோறும் வெளியிடப்படும் பசுந்துளிர் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்

தொடர்ச்சியான நீண்ட பண்பாட்டு பாரம்பரியத்தை உடைய எமது பிரதேசத்தின் தொன்மையையும், பண்பாட்டையும், வாழ்வினையும் ஆவணப்படுத்தும் வகையில் இச்சஞ்சிகை ஐந்தாவது ஆண்டிலும் காலடி எடுத்து வைத்து வீறுநடை போடுவது பாராட்டத்தக்கது.

இளம் சந்ததியினரிடையே வாசிப்புப் பழக்கம் குறைவடைந்து வரும் நிலையில் இது போன்ற முயற்சிகள் தொடர்ந்ததும் எம் மக்களின் கலை கலாசார சமய வாழ்வுக்குத் தேவையான புனித தேடலாக இம் முயற்சி அமைய நல்லாசி வழங்கி நிற்கிறேன்

**அருட்திரு.அ. சில்வேஸ்ர்தாஸ்**
**பங்குத்தந்தை**
**புலோப்பளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் வழங்கிய வாழ்த்துச் செய்தி



"நீண்டு பயன்விளைக்கும் இலக்கியச் சுரங்கமே
பசுந்துளிராய் நின் பணி தொடர்க"

எழில் கொஞ்சும் இயற்கை அழகும், தென்னை வளமும், நீர்ச்சுனைகளையும் தன்னகத்தே கொண்டதுமான வளம் கொழிக்கும் பிரதேசம் வரலாற்றில் யாழ்ப்பாணத்திற்கும், கிளிநொச்சி மாவட்டத்திற்கும் இடையில் பண்பாட்டுத் தொடர்ச்சியினாலும், குடும்ப உறவமைப்பினாலும் இணைப்பு பாலமாக திகழ்ந்திருக்கிறது. வரலாற்றுப் புகழ் கொண்ட வணக்கஸ்தலங்களையும், தொல்லியல் மையங்களையும் தன்னகத்தே கொண்டு கிளிநொச்சி மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் பிரதேசமாக விளங்கி வருகின்றது. தற்பொழுது மேற்கே எழுதுமட்டுவாளையும் கிழக்கே ஆனையிறவையும் வடக்கே கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, செம்பியன்பற்று வரையும், தனது எல்லைகளாகக் கொண்டமைந்திருக்கும் இப் பிராந்தியத்தின் பின்புலத்தினை மையமாகக் கொண்டு வருடந்தோறும் நடாத்தப்படுகின்ற கலாசார விழாவில் வெளியிடப்படவுள்ள பசுந்துளிர் ஐந்தாவது மலராய் மலர்ந்து இப் பிரதேசத்தின் வளங்களையும், அடையாளங்களையும் ஆவணப்படுத்தியிருக்கிறது என்பதையிட்டு பெருமை கொள்வதோடு என் மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உணவு மட்டும் தேவையாகவிருந்த ஆதி மனிதனுக்கு காலப்போக்கில் இரசனைகளும், தேவைகளும் அதிகரிக்கத் தொடங்கின. தான் வாழ்ந்த குகைகளில் சிற்பங்களை உருவாக்கினான். ஓவியங்களை வரைந்தான். இசையை மீட்கலாயினான். ஆடலிலும், பாடலிலும் தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடுத்தினான். இவற்றினடியாக மொழிகளும், கலைகளும் தோற்றம் பெற்றன. இவை படிப்படியாக இன்றைய உன்னத நிலையை அடைந்தன.

இவ்வாறு பரிணாம வளர்ச்சி கண்ட கலைகளையும், பண்பாட்டினையும் தற்போதைய நவீன காலத்தில் நம்மவர்கள் கண்டு கொள்ளாதவர்களாக தொலைக்காட்சியினுள்ளும், இணை யத்தினுள்ளும் மூழ்கியுள்ளனர். பாரம்பரிய கலைகளையோ அன்றி இலக்கியங்களிலோ ஈடுபடுவதென்பது அருகி வரும் சூழ்நிலையில் பசுந்துளிர் கலைஞர்களுக்கும் படைப்பாளிகளுக்கும் களம் அமைத்துக் கொடுக்கும் பண்பாட்டேடாக வெளிவருவது மனங்கொள்ளத்தக்கது. இதனை நாம் அனைவரும் தக்க முறையில் பயன்படுத்திக் கொள்வது எமது கலை முயற்சிகளை மேன்மேலும் மேன்மையடையச் செய்வதற்கு உந்துசக்தியாக அமையும் என்பதில் ஐயமில்லை. அந்த வகையில் பசுந்துளிர் தொடர்ந்து வெளிவருவதற்கு முழுமூச்சுடன் உழைத்து வரும் பிரதேசசெயலாளர், கலாசார உத்தியோகத்தர் மற்றும் மலர்க்குழுவினருக்கும் என் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சுந்தரம் அருமைநாயகம்,**
**அரசாங்க அதிபர்/மாவட்ட செயலாளர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வழங்கிய வாழ்த்துச் செய்தி



**"கேடறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா நாடென்ப நாட்டின் தலை"**

என்கின்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க பகைவரால் கெடு தலை அறியாததும் கெட்டு விட்ட காலத்தில் வளம் குன்றாத தாய் உள்ள நாடே நாடுகள் எல்லாவற்றிலும் தலைமையானது. அவ்வகையில் வற்றாத நீர்வளமும் நிலவளமும் கொண்டு தென்னஞ்சோலைகளால் அழகுறக் காட்சியாய் கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேசம் விளங்குகின்றது. இப்பிரதேசத்தின் ஊற்றாக கலாசாரப் பேரவையினால் வெளியிடப்படுகின்ற பசுந்துளிர் இதழ் 5 இற்கான வாழ்த்துச் செய்தி தெரிவிப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

கலைகள் காலத்தின் கண்ணாடி என்பதனால் அக் காலத்தின் கலாசாரம், பண்பாடு மற்றும் சமூக விழுமியங்களினை உயிர்ப்புடன் வெளிக்காட்டி நிற்கின்றது. இவை உணர்வுகளின் ஊடாக ஆழ்ந்த அவதானிப்பின் அடிப்படையிலேயே இரசித்து வெளிப்படுத்தக் கூடியதொன்று. கலைகளும் அவற்றினை வளர்த்தெடுக்கும் கலைஞர்களினதும் மற்றும் கலாமன்றங்களினதும் பங்களிப்புக்கள் அளவிட முடியாதவை. பச்சிலைப் பள்ளியில் ஒப்பீட்டளவில் அதிக கலாமன்றங்கள் இருப்பது அவர்கள் கலைகள் மீது மிகுந்த பற்றுடையவர்கள் என்பதனை எடுத்துக் காட்டுகின்றது.

இளம் தலைமுறையினரிடையே மறைந்து வரும் கலைகளும் அதனோடிணைந்த கலாசார நெறிமுறைகளும் காலத்தால் அழியாது வளர்த்தெடுப்பதற்குரிய பாலமாக பச்சிலைப்பள்ளிப் பிரதேச வாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர்களுக்கு இப் பசுந்துளிர் இதழ் கிடைக்கப் பெற்றமை ஒரு வரப்பிரசாதமே. இதனை தக்க முறையில் பயன்படுத்துவது படைப்பாளிகள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

பசுந்துளிர் இதழ் திறம்பட வெளிவர அயராது சேவை செய்த பிரதேச செயலர் மற்றும் கலாசாரப்பேரவையின் அர்ப்பணிப்பு மிக்க சேவையினைப் பாராட்டி கலாசார விழா சிறப்புற நடைபெற வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சி.சத்தியசீலன்,**
**மேலதிக மாவட்ட செயலர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தால் வெளியிடப்படவுள்ள பசுந்துளிர் இதழ்-5 மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு பெரு மகிழ்வடைகின்றேன். பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகமும் பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து கலாசார விழாவை நடாத்துவதும் இதனை முன்னிட்டு மலர் ஒன்றினை வெளியிடுவதும் மனமகிழ்வுக்குரிய செய்தியாகும். பிரதேசத்தின் கலை பண்பாட்டினை வளர்க்கும் வகையில் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆண்டு தோறும் நிதியுதவி யினை வழங்குவதன் மூலம் இவர்களது ஊக்கமும், ஆக்கமும் மேலும் வளர்ச்சி பெறும் என்பதில் எள்ளளவேனும் சந்தேகமில்லை. இவை யாவும் எதிர்காலத்தில் ஒரு வரலாற்றுப் பெட்டகமாக திகழ வேண்டும்.

இந்த வகையில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் கலை வடிவங்களான நாட்டுக் கூத்து, இசை நாடகம், நடனங்கள் உள்ளிட்ட கலைவடிவங்கள் ஆவணப்படுத்தப்பட்டு எதிர்கால சந்ததிக்கு கையளிக்கும் அளப்பரிய பணியை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலரும் அவருக்கு துணையாக இருக்கும் அலுவலர்கள், பிரதேச மக்கள், அனைவரும் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும். என்பதை தெரிவிப்பதுடன் பசுந்துளிர் நூல் சிறப்பாக வெளிவர எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

*வனஜா செல்வரட்ணம்*
*பணிப்பாளர்,*
*பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,*
*வடமாகாணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி

தமிழர்களின் பண்பாட்டையும், இருப்பையும் வாழ்வியலையும் தன்னகத்தே கொண்டுள்ள பாரம்பரியமான பிரதேசமே பச்சிலைப்பள்ளி ஆகும். இப்பிரதேசம் எமது வாழ்வியல் நெறிகளை வெளிக்காட்டும் தமிழர்களுடைய அடையாளப் பிரதேசம் ஆகும். இவ்வாறு சிறப்பு மிக்க தனித்துவமான வாழ்வியல் அடையாளங்களை பேணுவதற்காகவும், ஆவணப்படுத்தும் முயற்சியாகவும் வருடாந்தம் வெளியிடப்படும் பசுந்துளிர் நூலானது திகழ்ந்து வருகின்றது.

வருடாந்தம் நடாத்தப்படும் கலாசார விழாவின் போது வெளியிடப்படும் இப் பசுந்துளிர் நூலானது இவ்வருடம் ஐந்தாவது இதழாக வெளிவருவது சிறப்பம்சமாகும். இப்பிரதேசத்தின் தனித்துவ அடையாளங்களை ஆவணப்படுத்தி எதிர்கால சந்ததியினருக்கு கையளிக்கும் முயற்சியாக இந்நூல் அமைந்திருப்பதுடன் ஒவ்வோர் வருடமும் புது மெருகோடு வெளிவருவது குறிப்பிடத்தக்கது. கலாசார பேரவையினதும் அதிகாரசபையினதும் தலைவர் என்ற வகையில் இந்நூலானது இலைமறை காயாக ஒழித்திருக்கும் படைப்பாளர்களை வெளிக் கொண்டு வருவதுடன் அவர்களுக்கு களம் அமைக்கும் ஓரிடமாக இந்நூல் அமைந்துள்ளது என்பதில் ஐயமில்லை.

இவ்வருடமும் கலைத்துறைக்கு அரும்பணியாற்றிய கலைஞர்கள் கௌரவிக்கப்பட இருப்பதுடன் இவ்வருடம் இலங்கையின் கலை இலக்கிய உயர் விருதான கலாபூசணம் விருது பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞரும் கௌரவிக்கப்பட உள்ளார். இந்நூல் சிறப்புடன் வெளிவர ஆக்கங்களை தந்துதவிய அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இனிவரும் காலங்களில் பசுந்துளிர் பல வெற்றிப்படிகளுடன் நீண்டு துளிர்க்க எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ப.ஜெயராணி**
**பிரதேச செயலர்,**
**பச்சிலைப்பள்ளி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலகம், பச்சிலைப்பள்ளி

ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය පච්චිලෛපල්ලිය

Divisional Secretariat, Pachchilaipalli



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசார அதிகார சபை

பச்சிலைப்பள்ளி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

01. இலங்கை திருச்சபையும் சி.சி.த.க பாடசாலைகளும் 01
02. பச்சிலைப்பள்ளியில் 400வது ஆண்டில் தடம் பதிக்கும் பாடசாலை 06
03. மாசார் கிராமமும் அதன் ஆரம்ப காலங்களும் 10
04. மூவினமும் கூடி புதுநாடு அமைப்போம் 17
05. கிராமிய இசையும் அதன் தனித் தன்மைகளும் 20
06. கருவிப் பாவனைகளின் மாற்றங்களே கலைகளின் தோற்றமாகும் 25
07. பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் மீள் குடியேற்றத்தின் பின்னரான அபிவிருத்தி 34
08. வட இலங்கையின் அரசாங்க அதிபர் வில்லியம் துவைனம் ஒரு வரலாற்றுப் பார்வை 46
09. இத்தனையும் வேண்டும் 54
10. மனித வாழ்வில் மகத்தான விழுமியங்கள் 56
11. அலுவலக கலாசாரம் 58
12. இனி என்றும் ஆனந்தமே 52
13. அன்றாட வாழ்க்கையில் தொழில்நுட்பம் ஏற்படுத்தும் தாக்கங்கள் 69
14. நான் தமிழன் 73
15. பசுமை மிகு பச்சிலைப்பள்ளி தெங்குத் தோட்டம் ஓர் வரலாற்று நோக்கு 77
16. நம்பிக்கைகள், ஆசாரத்தொடர்புகள் தொடர்பான விஞ்ஞானத் தெளிவு 82
17. தீட்சை 89
18. தமிழ் பண்பாட்டை சிதைக்கலாமோ 92
19. திருக்கோயில் பண்பாட்டின் மருத்துவம் 94
20. பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் ஆதிகாலச் சிறப்புக்கள் 98
21. கலாபூசணம் செ.தனபாலசிங்கம் அவர்களுடன் ஓர் நேர்காணல் 103
22. கலைத்தென்றல் 2016 விருது பெறுவோர் 105



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக கலாசார பேரவை உறுப்பினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் திருச்சபையும் சி.சி.த.க. பாடசாலைகளும்

கி.பி 1505ல் போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றிய பின்னர் அவர்களது மதமான றோமன் கத்தோலிக்க மதத்தை இலங்கையின் கரையோர மக்கள் முதலில் ஏற்றுக்கொண்டனர். இதேபோன்று கி.பி 1796ல் ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றியதும் அங்கிலிக்கன் எனப்படும் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம் இலங்கையில் பரவியது. கிட்டத்தட்ட இதேகாலத்தில் மெதடிஸ்த மிசன், அமெரிக்க மிசன் என்பவனவும் மிஷனரிமாரால் கொண்டு வரப்பட்டது.

மிசனரிமாரால் கொண்டுவரப்பட்ட பாடசாலைகளுள் கத்தோலிக்க மிஷனரிமாரால் றோ.க.த.க. பாடசாலைகளும் அங்கிலிக்கன் மிசனரிமாரால் சி.சி.த.க பாடசாலைகளும் மெதடிஸ்த மிசனரிமாரால் மெ.மி.த.க பாடசாலைகளும் அமெரிக்க மிசனரிமாரால் அ.மி.த.க பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டன.

1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்ததும் ஆங்கிலேயர் நாட்டைவிட்டு சென்ற பின்னர், முன்பு மிசன் பாடசாலைகள் என அழைக்கப்பட்ட அங்கிலிக்கன் பாடசாலைகள் சுதேசிகளால் பெயர் மாற்றம் செய்யப்பட்டு இலங்கைத் திருச்சபை தமிழ்க்கலவன் பாடசாலைகள் என அழைக்கப்பட்டன. இலங்கைத் திருச்சபையின் ஆங்கிலப் பதமான Church of Ceylon என்ற சொற்களில் முதல் ஆங்கில எழுத்தான C (Church) C (Ceylon) நேரடியாக தமிழிலும் சி.சி என அழைக்கப்பட்டு சி.சி.த.க. பாடசாலை என வழங்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி 1815ல் இலங்கை முழுவதையும் கைப்பற்றிய ஆங்கிலேயர் 1820ம் ஆண்டளவில் நல்லூரில் சென்ஜோன்ஸ் கல்லூரியையும் அதனைத் தொடர்ந்து சுண்டுக்குளி மகளிர் கல்லூரியையும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியையும் ஆரம்பித்தனர். சில ஆண்டுகளின் பின்னர் இப்பொழுது நாம் அழைக்கும் சி.சி.த.க. பாடசாலைகளை ஆரம்பித்தனர்.

கி.பி 1845ம் ஆண்டளவில் பளைப்பகுதிக்கு வருகை தந்த ஆங்கிலேய மிசனரிமார் தற்போதைய பிரதேச செயலகத்திற்கும் அரசினர் வைத்தியசாலைக்கும் மத்தியில் தேவாலயம் அமைந்துள்ள இடத்தில் சிறிய குடிசையொன்றில் தமது சுவிசேச வேலைகளை ஆரம்பித்தனர். இக்காலத்தில் யாழ்.கச்சேரியில் அரசாங்க அதிபராக சேர் ருவைணம் துரை அவர்கள் கடமையாற்றினார். இவர் குதிரை மீது பளைப் பகுதிக்கு வருகை தருவார் எனவும் நிர்வாக கடமைகளையும் மிசன் கடமைகளையும் கவனித்து வந்தார் எனவும் அறிய முடிகின்றது.

எழுதுமட்டுவாள் தொடங்கி போக்கறுப்பு, தட்டுவங்கொட்டி வரையான பகுதி அவர்களின் நிர்வாகப் பரப்பாக காணப்பட்டதால் இவ்விடங்களில் அவர்கள் பாடசாலைகளை நிறுவினர். 1850ல் உடுத்துறை மிசன் பாடசாலையும் 1872 அளவில் வேம்பொடுகேணி மிசன் பாடசாலையும் பின்னர் எழுதுமட்டுவாள் வடக்கு, எழுதுமட்டுவாள் தெற்கு, அல்லிப்பளை, பளை நகர சிறிய பாடசாலை, சோரன்பற்று, கோவில்வயல், ஆழியவளை, போக்கறுப்பு. தட்டுவங்கொட்டி ஆகிய இடங்களில் அங்கிலிக்கன் மிசன் பாடசாலைகளை ஆரம்பித்தனர்.

பளையில் தலைமை அலுவலகத்தையும் உடுத்துறையில் உப அலுவலகத்தையும் 1850ம் ஆண்டளவில் ஆரம்பித்தனர். பளை அலுவலகத்தின் கீழ் எழுதுமட்டுவாள் வடக்கு, எழுதுமட்டுவாள் தெற்கு, வேம்பொடுகேணி, அல்லிப்பளை, பளை நகரம், சோரன்பற்று, கோயில்வயல் ஆகிய ஏழு பாடசாலைகளை நிர்வகித்தனர். உடுத்துறைக்குச் செல்வதற்கு வீதி இருக்கவில்லை. ஆரம்பத்தில் தம்பகாமம் ஊடாக சென்று ஆற்றை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீந்திக் கடந்து உடுத்துறையை அடைந்தனர். பின்னர் இயக்கச்சிக்கும் குறிஞ்சாதீவு, வன்னியம்பாலைக்கும் இடையேயுள்ள தோவண்டை என்னுமிடத்திலிருந்து வயல் பரப்பு, கோயில் வயல், போக்கறுப்பு ஆழியவளை, ஊடாக உடுத்துறை உப அலுவலகத்தை அடைந்தனர். உடுத்துறைக் கிராமத்தை இரண்டாகப் பிரித்து சிறிய குடியிருப்பு, பெரிய குடியிருப்பு என அழைத்தனர். தோவண்டை எனும் குறிச்சி போருக்கு முன்னர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் முள்ளிப்பற்று உப அலுவலகம் அமைந்திருந்த பகுதியாகும். இச்சபை 1972க்கு முன்னர் முள்ளிப்பற்று கிராமச்சங்கம் என அழைக்கப்பட்டது.

## வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலை

பளை மணியகாரன் பிரிவில் ஆங்கிலேயரால் 1878ல் ஆரம்பிக்கப்பட்ட இரண்டாவது பாடசாலை இது என அறிய முடிகிறது. இப்பகுதியிலிருந்து கல்வி கற்பதற்கு முதன் முதலில் ஆங்கிலேயரால் உடுத்துறைக் கிராமத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட சிதம்பரியார் சின்னத்தம்பி என்பவர் இப்பாடசாலைக்கு முதலாவது ஆசிரியராக நியமிக்கப்பட்டார். சில வருடங்களின் பின்னர் அன்னம்மா என்ற பெண் ஆசிரியை நியமிக்கப்பட்டார். நீண்டகாலமாக இவர்கள் இருவரும் இங்கே கடமையாற்றினார். இவர்களுக்கு மாதச் சம்பளமாக ஒரு ரூபா வழங்கப்பட்டது. இது சம்பந்தமான கூட்டக்குறிப்பும் நல்லூரில் அவர்களது தலைமை அலுவலகத்திலிருந்து எடுத்து வரப்பட்டு இப்பாடசாலையின் தளத்திற்கு போடப்பட்டது.

1998ம் ஆண்டு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக ஏற்பாட்டில் யாழ் அரசாங்க அதிபரால் RRAN அமைப்பிலிருந்து நிதி ஏற்பாடு செய்யப்பட்டு புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டது. பின்னர் 2000ம் ஆண்டு முற்றாக அழிக்கப்பட்டது. 125 வருடங்களின் பின்னர் தற்பொழுது இப்பாடசாலை பழைய இடத்திற்கு அருகாமையில் இயங்குகின்றது.

## அல்லிப்பளை சி.சி.த.க. பாடசாலை

இப்பாடசாலையில் ஆரம்பகாலத்தில் எழுதுமட்டுவாளைச் சேர்ந்த ஆசிரியர்கள் கடமையாற்றினார். இவர்களில் வல்லிபுரம் ஆசிரியர் என்பவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டகாலமாக தலைமை ஆசிரியராக கடமையாற்றினார். அக்காலத்து ஆசிரியர்களின் வேதன விபரம் தரப்பட்டுள்ளது. இப்பாடசாலை 97ம் ஆண்டில் பளை றோ.க.த.க. பாடசாலையில் இயங்கியது. பின்னர் 2003ம் ஆண்டில் மீண்டும் அல்லிப்பளையில் இயங்க ஆரம்பித்தது.

## பளை நகர சி.சி.த.க. பாடசாலை

இப்பாடசாலைக்கு ஆரம்ப காலங்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களும் எழுதுமட்டுவாளைச் சேர்ந்தவர்களும் ஆசிரியர்களாகக் கடமையாற்றினர். இப்பாடசாலை மூடப்பட்ட காலத்தில் இப்பகுதியைச் சேர்ந்த திரு.சேனாதிராசா அவர்கள் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றினார்.

## சோரன்பற்று சி.சி.த.க. பாடசாலை

இப்பாடசாலை புதுக்காட்டுச் சந்தியிலிருந்து 300 மீ. தூரத்தில் தாழையடி வீதியில் அமைந்திருந்தது. தற்பொழுது இவ் விடத்தில் பழைய கிணற்றை காண முடிகின்றது. 1880ம் ஆண்டளவில் இப்பாடசாலை ஆரம்பித்த காலத்தில் உடுத்துறை கிராமத்தை சேர்ந்த E.P. இளையதம்பி ஆசிரியராக நியமிக்கப்பட்டார். ஆரம்பத்தில் ஒரு ஆசிரியர் மட்டும் கடமையாற்றினார். இந்துப் போட் இராசரட்ணம் அவர்களின் ஏற்பாட்டில் சோரன்பற்று கணேசா வித்தியாலயம் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் நடந்தபோது இப்பாடசாலை பேராலை கிராமத்திற்கு 1947ல் மாற்றப்பட்டது. அப்பொழுது மருதங்கேணியைச் சேர்ந்த யோசப் சின்னத்துரை தலைமை ஆசிரியராக கடமையாற்றினார். பின்னர் இன்றுவரை பேராலை கிராமத்தில் இயங்கி வருகின்றது.

## கோயில்வயல் சி.சி.த.க. பாடசாலை

இப்பாடசாலை 1890 ல் ஆண்டளவில் ஆரம்பித்தபோது உடுத்துறையைச் சேர்ந்த கந்தப்பர் யோசேப் என்பவர் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். பின்னர் எழுதுமட்டுவாளைச் சேர்ந்த வல்லிபுரம், பருத்தித்துறையைச் சேர்ந்த ஆழ்வாப்பிள்ளை, உடுத்துறை A.K.இராசேந்திரம் வத்திராயன் மு.சிற்றம்பலம் ஆகியோர் தலைமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களாக கடமையாற்றினர். இடப்பெயர்வு காரணமாக சிலகாலம் சொந்த இடத்தில் இப்பாடசாலை இயங்கவில்லை. தற்பொழுது கோயில்வயலில் இப்பாடசாலை இயங்குகின்றது.

ஆரம்ப காலங்களில் அங்கிலிக்கன் என அழைக்கப்படும் இலங்கைத் திருச்சபையைச் சேர்ந்தவர்களே இப்பாடசாலைகளில் ஆசிரியர்களாகக் கடமையாற்றினார்கள்.

இவ்வாறாக இலங்கையின் வரலாற்றில் மேற்கு நாட்டவரின் பாதிப்புக்களுக்கு எமது நாடு உட்பட்டு இருந்தபோது அதன் தாக்கங்கள் எம்மிடையே பரவலாக பரவியிருந்தது. அதன் ஒரு பகுதியே வட இலங்கையில் பளைப் பகுதியே திருச்சபைகளும் அதனோடு இணைந்த கல்வி நடவடிக்கைகளும் எனலாம். நூற்றாண்டுகள் பல கடந்தும் அதனை இன்றும் நாம் காண்கின்றோம்.

(ஆதாரம் விடிவெள்ளி க.பே.முத்தையாவின் உடுத்துறை சபையின் சரிதம், இலங்கைத் திருச்சபையின் ஏடுகள், நேர்காணல் திருமதி.சின்னத்தம்பி செல்லம்மா சோரன்பற்று (92 வயது) ஓய்வுநிலை அதிபர் திரு.தாமோதரம்பிள்ளை பேராலை.)

**கலாநிதி.எஸ்.புத்திசிகாமணி**
**உதவி அரசாங்க அதிபர். (ஓய்வுநிலை)**
**பச்சிலைப்பள்ளி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலைப்பள்ளியில் 400 ஆவது ஆண்டில் தடம் பதிக்கவுள்ள பாடசாலை

தமிழ் மக்களின் அழியாச் சொத்தான கல்விச் செல்வத்தை வழங்குகின்ற வடமாகாணத்தின் தோற்றம் பெற்ற முதலாவது தமிழ் பாடசாலையின் வரலாற்று பொக்கிசத் தேடல் மூலம் கிடைத்தமையூடாக தமிழரின் கல்வித் தொன்மையும் எமது மூதாதையினர் காலம் காலமாக பச்சிலைப்பள்ளிப் பகுதியில் வந்துள்ளமையும் உலகிற்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை காலமும் மறைந்திருந்த வரலாற்று உண்மை ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

ஈழத்திருநாட்டின் வடபுலத்தில் யாழ்குடா நாட்டிற்கு கீழ்திசையிலிருந்து வந்தோரை வரவேற்கும் நுழைவாயிலாகத் திகழும் கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலர் பிரிவுகளில் ஒன்றான பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் அமைந்துள்ள வரலாற்றுத் தொன்மைமிக்க பளை நகரத்திற்கு அண்மையில் A9 வீதியில் உள்ள புலோப்பளை வீதியிலிருந்து 2 கிலோமீற்றர் தொலைவில் நீர்வளமும், நிலவளமும் சூழ்ந்திருக்கும் கிராமமான கிறிஸ்தவப் பாரம்பரியத்தைக் கட்டிக்காத்த பெருமைக்குரிய புலோப்பளையில் கிளிநொச்சி மாவட்டத்தில் முதலில் உதயமான தமிழர் கல்விப் பாரம்பரியத்தைப் பாதுகாத்து தன்னிகரில்லாத தொண்டாற்றி பழம்பெரும் பாடசாலையாக கிளி/பளை றோ.க.த.க பாடசாலை விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கேயருடைய ஆட்சிக்காலத்தில் புலோப்பளை தமிழ்ப்பாடசாலை என்னும் நாமத்துடன் புலோப்பளை, தர்மக்கேணி, ஆழியவளை, பெரியபளை, சோரன்பற்று முதலிய ஐந்து கிராம மாணவர்களும் கல்வி கற்கும் பாடசாலையாக விளங்கியுள்ளது. இப்பாடசாலையில் 1627ம் ஆண்டு காலப்பகுதியில் 300 மாணவர்கள் கல்வி பயின்றுள்ளனர். பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில்2270 கிறிஸ்தவர்கள் வாழ்ந்ததாகவும் இப்பாடசாலை யேசுசபை குருமாரின் பராமரிப்பில் இருந்ததாக யேசுபிற் இன் சிலோன் என்ற நூலில் எஸ்.ஜி பெரேரோ (Jesuits in Ceylon - Father S.G Perera) குறிப்பிட்டுள்ளார்.

போர்த்துக்கேயர் வசமிருந்த சகல தேவாலயங்களையும், பாடசாலைகளையும் ஒல்லாந்தர் தமதாக்கி கொண்டனர். அதே போல இப்பாடசாலையும் தமக்குரியதாக மாற்றி உள்ளூர் மொழி புகட்டும் சுதேச மொழிப் பாடசாலையாக அவர்களின் ஆட்சிக்காலத்தில் திகழ்ந்தது. ஏறத்தாழ 300 வரையான மாணவர்கள் கல்வி பயின்று வந்தனர். 600 பேர் பிரசங்கம் கேட்டு வந்தார்கள் என்பதையும் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் தோற்றம் பெற்ற முதலாவது கத்தோலிக்க தேவாலயமும் பாடசாலையும் இது என்பதை அறிய முடிகின்றது. அப்பொழுது தற்போதைய பளை நகரம் பிரபல்யமடையவில்லை. இக்காலத்தில் பாடசாலையும், தேவாலயமும் இணைந்திருந்ததாகவும் மண்ணாலும், மரத்தாலும் கட்டப்பட்டு எதிரிகளின் தாக்குதலை சமாளிக்கும் வகையில் திட்டமிட்டு அமைக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். டிஸ்ரிப்சன் சிலோன் பிலிப் பால்டேஸ் Description of the Great and most famo Isle of Ce philip Baladaeus - Philip 162 இந்நூலில் குறிப்பிட்டுள்ள தேவாலயம் தற்போது பேதுறுவானவர் ஆலயமாக புகழ் பெற்ற விளங்குகின்றது பாடசாலையும் அதே வளாகத்தில தனியாகப் பிரிந்து பிற்காலத்தில் கிளி/பளை றோ.க.த.க பாடசாலையாக மாற்றமடைந்துள்ளது.

18ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் வாழ்ந்த மூதாதையர்கள் கல்வியைக் கற்று எழுத்தறிவு உடையவர்களாக வாழ்ந்தமைக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரங்களும் காணப்படுகின்றது. 18ம் நூற்றாண்டு ஆரம்ப காலத்தில் எழுதப்பட்ட உறுதிப்பத்திரத்தில் தெளிவான முறையில் (உ+ம் : நாகன், புணணியா) சிறந்த சான்றாகும். ஏனைய பகுதிகளில் 19ம் நூற்றாண்டு காலப்பகுதியில் கூட கைநாட்டு வைக்கும் பழக்கமுடையவர்கள் இருந்துள்ளமை யாவரும் அறிந்த விடயமாகும்.

* இப்பாடசாலை 1960 ஆம் ஆண்டு அரசினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது
* 1994 ஆம் ஆண்டு இப் பாடசாலை தரம் 11 நிலைக்கு உயர்த்தப்பட்ட நிலையில் பல இடப்பெயர்வுகளைச் சந்தித்து 2009 ஆம் ஆண்டு மீள சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்த இப்பாடசாலை பல அரிய சாதனைகளை நிலை நாட்டியுள்ளது. கல்வி இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் கோட்ட வலய மாவட்ட மாகாண தேசிய ரீதியாக இடம் பிடித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இனிவரும் காலப்பகுதியில் ஒரு கல்லூரியாக பரிணமிக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை. தற்போது இப்பாடசாலை 250 ற்கு மேற்பட்ட மாணவர்களையும் 17 ஆசிரியர்களையும் கொண்டு வளர்ச்சிப்பாதையில் வெற்றி நடை போடுகின்றது பாடசாலையின் வரலாற்றுப் பெருமையை நினைவு கூரும் வகையில் பரிசளிப்பு விழாவை இப்பாடசாலையில் ஆரம்பித்த பெருமைக்குரியவர் திருவாளர். வ. ஜீவரத்தினம் அதிபர் அவர்கள் ஆவார். இவரது சேவைக்காலத்தில் ஒவ்வொரு வருடமும் தொடர்ச்சியாகப் பெருந்தொகை மாணவர்களுக்கு உயர்தரம் கற்பதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. பளைக் கோட்டத்தில் இரண்டாவது பெரிய பாடசாலை என்னும் முத்திரையையும் பதித்துள்ளமை அனைவரும் அறிந்த விடயம். கல்விப் பாரம்பரிய பூமியான யாழ்ப்பாணத்தில் 1811ம் ஆண்டு முதலாவது பாடசாலையாக யாழ் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி பெருமைப்பட்டுள்ளது.

ஆனால் கிளி/றோ.க.த.க பாடசாலை யூனியன் கல்லூரியின் தோற்றத்திற்கு ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே தோற்றம் பெற்ற பெருமைக்குரியதாக விளங்குகின்றது. 1984 ஆம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் உள்ளடங்கப்பட்ட இப் பாடசாலை 1984 முதல் கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கி கல்வி கற்கும் சமூகத்தினரை அரவணைத்து எண்ணற்ற கல்விமான்களையும், அறிஞர்களையும் ஆக்கத்திறன் படைத்தோர்களையும் உருவாக்கும் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கலாசார பண்பாட்டுக் கூடமாக இப் பாடசாலை தடம் பதித்துள்ளது என்றால் மிகையாகாது இதுவரை காலமும் பாடசாலை வளர்ச்சிக்கு உழைத்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றியை தெரிவிக்கும் இவ்வேளையில் கிளிநொச்சி வலயத்தில் எண்ணற்ற சாதனைகளுடன் முன்னணிக் கலைக் கூடமாகவும் மிளிரப் போகும் பாடசாலை, காணி, கட்டுமான வசதிகள் மட்டுமன்றி மாணவரின் உடற்திறன் விருத்தி, மொழி விருத்தி சமூகத்திறன், விருத்தி, தொழிற்பயிற்சி சார்ந்த திசைமுகப்படுத்தல் வறிய மாணவர்களின் நலன்களை மேம்படுத்த வேண்டிய தேவைகளுடன் உதவிக்கரம் நீட்டி உன்னத வளர்ச்சி நிலையில் கிளி/றோ.க. த.க அன்னை நானூறாம் நூற்றாண்டு விழாவை நோக்கி வெற்றி நடைபோடும் நிலையில் வடமாகாணத்தில் தோன்றிய முதற் பாடசாலையாக அடையாளப்படுத்தி 388 வது ஆண்டு விழாவை சென்ற ஆண்டு கொண்டாடியதில் பச்சிலைப்பள்ளி சமூகத்தினர் பெருமையும் பெருமிதமும் அடைந்துள்ளனர்.

**S.விஜயகரன்**
**ஆசிரியர்**
**கிளி/றோ.க.த.க.பாடசாலை**
**பளை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசார் கிராமமும் அதன் ஆரம்ப காலங்களும்

பரந்தாமன் பள்ளி கொண்டதனால் பச்சிலைப்பள்ளி என நாமம் வரப் பெற்ற பச்சிலைப்பள்ளியிலே சைவ நன்நெறிகள் தளைத்தோங்கி வாழும் மக்களைக் கொண்ட கிராமம் மாசார். முற்காலத்தில் அரசர்களின் ஆட்சிக்காலத்தில் அவர்களுடைய படைக்கலங்களுக்கான குதிரைத் தொழுவங்களை அமைத்த இடமாதலால் மாசார் என பெயர் வந்ததாக கர்ண பரம்பரைக் கதைகளினுடாக எமது முதியோர் சொல்லக் கேட்டிருக்கின்றோம். இக்கிராமத்தின் எல்லைகளாக தற்போது மேற்கு சோறன்பற்று கிராம உத்தியோகத்தர் பிரிவும் (புதுக்காடு, தாளையடி வீதி ஒருபகுதியும்) தெற்கு சோறன்பற்று கிராம உத்தியோகத்தர் பிரிவும் (நீலாம்பிகை வீதியும்) கிழக்கு முகாவில் கிராம உத்தியோகத்தர் பிரிவும் (முருகந்த நகர் மயான வீதி, ஊர் எல்லை ஐவினை வாய்க்காலும்) வடக்கு களி ஆறு (களிக்கரை) எல்லைகளாக அமைந்தது மாசார் கிராமம். இக்கிராமத்தில் ஆதிகாலத்தில் குறிப்பிடக்கூடிய சில குடும்பங்கள் மட்டும் வாழ்ந்ததாகவும் அவர்கள் சரசாலை, வரணி, இடைக்காடு, வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் இருந்து வந்து குடியேறியதாகவும் எமது முன்னோர் சொல்லக் கேட்டிருக்கின்றோம். (தற்போதும் மேற்குறிப்பிடும் கிராம மக்களுக்கான உறவுகளும் தொடர்புகளும் உள்ளன.)

இக்கிராமம் ஆதிகாலம் தொட்டு சோறன்பற்று கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குட்பட்ட கிராமமாக இருந்தது. 1972 ம் ஆண்டு காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமான கரந்தாய் தென்னந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டக் காணியை அப்போது உதவி அரசாங்க அதிபரினால் காணி இல்லாத மக்களுக்கு ஒரு ஏக்கர் வீதம் வழங்கப்பட்டு அங்கே மக்கள் குடியேறியதால் கரந்தாய், மன்னவுண்டான் என இரண்டு கிராமங்கள் உருவாகியது. அதன் பிற்பாடு 1985ம் ஆண்டு காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமான மாசார் தோட்டம் என்னும் 38 ஏக்கர் காணியை அப்போது உதவி அரசாங்க அதிபராக இருந்த திரு.முருகையா என்பவரால் காணி அற்ற மக்களுக்கு ஒரு ஏக்கர் வீதம் வழங்கப்பட்டு அக்காணிகளில் மக்கள் குடியேறியதால் முருகந்த நகர் மாதிரிக் கிராமம் என்னும் பெயருடன் இன்னுமோர் குடியேற்ற கிராமம் உருவாகியது.

அக்காலப் பகுதியில் சோறன்பற்று கிராம உத்தியோகத்தர் பிரிவு ஐந்து சிறிய கிராமங்களைக் கொண்ட ஓர் பெரிய கிராம உத்தியோகத்தர் பிரிவாக காணப்பட்டது. (குடும்பங்களின் தொகையும் கூடுதலாக காணப்பட்டது) அதன் காரணத்தினாலோ என்னவோ 1986 ம் ஆண்டிற்கு முன்பு ஏழு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளாக இருந்த பச்சிலைப்பள்ளிப் பிரதேசம் 1987ல் இன்னும் மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் சேர்க்கப்பட்டு கிராமங்கள் பத்தாக விரிவடைந்தது. 1989ம் ஆண்டில் 10 கிராம உத்தியோகத்தர் பிரிவாக இருந்த பச்சிலைப்பள்ளி மீண்டும் 8 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் பிரிவிடுதல் செய்யப்பட்டு தற்போது மொத்தம் 18 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இயங்கி வருகிறது. (மாசார், தருமக்கேணி, முல்லையடி, அரசர்கேணி, வேம்பொடுகேணி, புலோப்பளை மேற்கு, அல்லிப்பளை, கச்சார்வெளி, உருவாகிய 9 கிராமங்களாகும்)

இவற்றுள் ஒன்று மாசார் கிராம உத்தியோகத்தர் பிரிவாகும். இக்கிராம உத்தியோகத்தர் பிரிவில் இரு கிராமங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. 1-மாசார் 2-முருகந்த நகர் இங்கு வாழும் மக்கள் அனைவரும் இந்துக்களாகவே வாழ்கின்றனர். இவர்களுடைய தொழிலாக நெற்பயிர்ச் செய்கை, மேட்டு நிலப் பயிர்ச் செய்கை, கால்நடைவளர்ப்பு, வர்த்தகம், சுயதொழில் ஆகியவற்றில் கூடுதலான மக்களும் குறைந்தளவானோர் அரச உத்தியோகம் செய்பவர்களாகவும் உள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கிராமத்தில் தற்போது 182 குடும்பங்களைச் சேர்ந்த 528 அங்கத்தவர்கள் வாழ்கிறார்கள். 1990ம் ஆண்டிற்கு முன்பு இப்பகுதியில் உள்ள கூடுதலான மக்கள் ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு உப்பளங்களில் நிரந்தர, தற்காலிக ஊழியர்களாக வேலை செய்தார்கள். 1990ம் ஆண்டு யூலை மாதம் ஆனையிறவில் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக இரண்டு உப்பளங்களும் மூடப்பட்டு அனைத்து தொழிலாளர்களும் வேலையிழக்க நேரிட்டது.

இக் கிராமத்தில் குளங்களைப் பெயராகக் கொண்ட தாழ்வான வயல் நிலங்கள் பல உண்டு. மாசார் குளவயல், சிறுமாசார் குளவயல். மட்டுக்கோட்டை குளவயல், நுணுவில் குளவயல், பாணாவில் குளவயல், அடம்பன், பெரிய அங்குவில் குளவயல், சின்ன அங்குவில் குளவயல் அதைவிட நீரை தேக்கி வைக்கக் கூடிய குளங்களாக வேவில் குளம், யாவில் குளம், கரவிளான் குளம், வீராணன் குளம், வெட்டுக்குளம், சன்னி வெட்டுக்குளம், நாவல் பள்ளக்குளம் எரியாய்குளம் ஆகிய குளங்கள் காணப்படுகிறது.

இங்குள்ள வயல்களில் கோடை காலத்தில் சிறுதானியப் பயிர்ச் செய்கையிலும் மக்கள் ஈடுபடுவதுண்டு. தென்னந் தோட்டங்களும் அதிகமாகவே காணப்படுகின்றது. இதில் கூடுதலான தோட்டங்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தனவந்தர்களுக்கு சொந்தமானதாகவே காணப்படுகின்றது. நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக அதிகளவான தோட்டங்கள் முற்றாகவும், பகுதியளவிலும் அழிவடைந்தாலும் தற்போது சில தோட்டங்கள் புதுப் பொலிவு பெற்று மீள்நடுகை மூலம் புதிய தோட்டங்களாக மாறி வருகின்றது. சில தோட்டங்கள் கை மாற்றப்பட்டு புதிய உரிமையாளர்களால் திருத்தப்பட்டு புதிய தோட்டங்களாக மாறி வருகின்றது.

இப்பகுதி மண்வளம் தென்னைப் பயிர்ச் செய்கை, மற்றும் மேட்டுநிலப் பயிர்ச் செய்கைக்கு உகந்த மண்ணாகவே காணப்படுகின்றது. பனையின் வருமானத்தைக் கொண்டு வாழும் குடும்பங்களும் அதனைச் சார்ந்து வாழும் குடும்பங்களும் பல பேர் இக்கிராமத்தில் வாழ்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் தற்போது கம்பீரமான காட்சி தரும் மாசார் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை விளங்குகின்றது. அப்பாடசாலை 1981ஆம் ஆண்டு அப்போதைய பொதுப் பணியாளர்களினால் (குறிப்பாக வினாசித்தம்பி இராமலிங்கம்) ஓலை கொட்டில் அமைக்கப்பட்டு ஒரு தொகைப் பிள்ளைகளுடன் அப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அதற்குப் பின்பு உள்ள பிள்ளைகள் சோறன்பற்று பாடசாலையில் கல்வி கற்றதாக எமது முதியவர்கள் கூறியிருக்கிறார்கள்) 1981 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அப் பாடசாலை எப்போது அரசுடைமையாக்கப்பட்டது என்பதைக் குறிப்பிட முடியவில்லை.

அக்காலப் பகுதியிலேயே அப்பாடசாலையில் ஒரு நிரந்தரக் கட்டடமும், ஆசிரியர்கள் தங்கும் விடுதியும் அமைக்கப்பட்டு போக்குவரத்து சிரமம் காரணமாக ஆசிரியர்கள் தங்கி நின்று கல்வி நடவடிக்கை தொடர்ந்தது. யுத்த காலங்களில் இரண்டு முறை அழிவடைந்த இப் பாடசாலை தற்போது 2010ம் ஆண்டு மீள் குடியமர்வின் பின்பு மூன்றாவது முறையாகவும் அடுக்கு மாடிக் கட்டடங்களைக் கொண்டதும், சகல வசதிகளையும் கொண்டதுமான பாடசாலையாக தற்போது கம்பீரமாக காட்சி தருகிறது. இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை கா.பொ.த. சாதாரணதரப் பரீட்சைகளில் கூடுதலாக சித்தியடைந்துள்ளனர். அதேபோல உடற்கல்வி நிகழ்வுகளிலும் திறமைசாலிகளாகவே உள்ளனர். இப்பாடசாலையின் விளையாட்டு மைதானத்திற்கு அருகாமையிலுள்ள தோட்ட உரிமையாளரான A.R சுப்பிரமணியம் என்பவர் இரண்டு ஏக்கர் காணியை 2015ம் ஆண்டில் தர்மசாதனமாக வழங்கியுள்ளார்.

இக்கிராமத்தில் பிரசித்தி பெற்ற ஆலயங்கள் பல உண்டு. அவற்றுள் மாசார் பிள்ளையார் ஆலயம், பாணாவில் சித்தி விநாயகப் பிள்ளையார், கல் ஒழுங்கை கல்லடி வைரவர் ஆலயம், பாலையடி வைரவர் ஆலயம், வாணாண்பதி அம்பாள் ஆலயம், என்பன குறிப்பிடத்தக்க ஆலயங்களாகவும், இவைகளை விட தங்கள் காணிகளில் மர நிழல்களில் வைத்து வழிபடும் ஆலயங்களாக பிள்ளையார், அண்ணமார், பெரியதம்பிரான் போன்றனவும் தங்கள் வீடுகளில் குல தெய்வங்களாக வைத்து வழிபடும் ஆலயங்களும் பல உண்டு. கிராமத்தின் பிரதான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதிக்கு அருகாமையில் பச்சிலைப்பள்ளி ப. நோ.கூ சங்க கிளைகளையும் உப தபாற்கந்தோரும் அமைந்திருப்பது மக்களின் அன்றாட தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்யக்கூடியதாகவுள்ளது. இப்பகுதி மக்களுக்கான இந்து மயானம் ஆரம்ப காலத்தில் மாசார் இராவணன் வெட்டு குளத்திற்கு அருகாமையில் மக்கள் குடியேறியதன் காரணத்தினால் நீண்ட காலங்களின் முன்பு சுமார் 1970ம் ஆண்டு காலப்பகுதியில் முடங்குதீவு ஆற்றங்கரையோரம் அமைக்கப்பட்டு இருக்கிறது. இம் மயானத்திற்கு தற்போது எமது கிராமத்தைச் சேர்ந்த அமரர் வேலுப்பிள்ளை மகேந்திரரின் ஞாபகார்த்தமாக அவருடைய சகோதரரால் பொதுக்கிணறு ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

இக் கிராமத்தின் மத்தியில் மாசார் கிராம அபிவிருத்திச்சங்கம், ,கலைமகள் சனசமூக நிலையம், நாமகள் முன்பள்ளி, நாமகள் கலாமன்றம் என்பன இயங்கி வருவதுடன் மத்தியில் பொதுமண்டபம் ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் கிராம உத்தியோகத்தர் அலுவலகம், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், அலுவலகம், பொது வாசிகசாலையும் அமையப் பெற்று மக்களுக்கு பல சேவைகளையும் ஆற்றி வருகின்றது. கமக்காரர் அமைப்பு இரண்டு கிராமங்களும் இணைந்ததாக விவசாயிகளுக்கு சேவை செய்து வருகின்றது.

2010 ம் ஆண்டு மீள் குடியமர்வின் பின்பு கமநல சேவை நிலையங்களூடாக 2012ம் ஆண்டு மாசார் களிக்கரை உவர்நீர் தடுப்பணை, 2014ம் ஆண்டு முகாவில் மல்வில் குளம் சீமேந்து கொங்கிறீட் கட்டும், படிக்கட்டும் 2012ம் ஆண்டு பட்டுக்கோட்டைக் குளம் மண் அணைக்கட்டும், வடிகால் அமைப்பும், 2014ம் ஆண்டு கரவிளான் குளம் மண் அணைக்கட்டு, 2016ம் ஆண்டு பாணாவில் குளம் சீமேந்து கொங்கிறீட் கட்டும், மண் அணைக்கட்டும், வடிகால் அமைப்பு போன்ற பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்து செயல்படுத்துவதுடன் மக்களுக்கும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது.

அதே போன்று இரண்டு கிராம அபிவிருத்திச் சங்கங்களும் வீதிகள் புனரமைப்பு, மற்றும் பொது வேலைத்திட்டங்களில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது. இங்கு 1985இல் 2 ஏக்கர் காணி பொதுப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்பாட்டிற்காக முன்பள்ளி, கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூகநிலையம், பொதுவிளையாட்டு மைதானம் போன்ற தேவைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 1985 ம் ஆண்டு காணிகள் வழங்கப்பட்ட காலப்பகுதியில் மாதிரிக்கிராமம் என்னும் பெயருடன் அப்போது ஜனாதிபதியாக இருந்த திரு.ச.பிரேமதாசா அவர்களின் 10 லட்சம் வீட்டுத்திட்டத்தின் கீழ் இக்கிராம மக்களுக்கு வீடு அமைப்பதற்காக 7500 ரூபா வீதம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நிதி வழங்கப்பட்டது. இப்போது அதற்குப் பெறுமதியான வீடுகள் அமைக்கப்பட்டிருந்தது.

2000ம் ஆண்டில் இப்பகுதியில் ஏற்பட்ட யுத்த சூழ் நிலையால் முழு வீடும் அழிக்கப்பட்டது. தொடர்ந்து 2006ம் ஆண்டு 2010, 2011ம் ஆண்டுகளில் நேப் நிறுவனம், பல கிபிறேட் நிறுவனம், சுவிஸ் நிறுவனம் ஆகிய நிறுவனங்களினால் மீண்டும் மாசார், முருகந்த நகர் மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டது. இன்னும் குறைந்தளவான மக்களுக்கே வீடுகள் தேவையாகவுள்ளது. இக்கிராமத்தின் பெயர் வந்த காரணத்தை எடுத்துக்கொண்டால் காணிகள் வழங்கப்பட்டு வீட்டுத்திட்டங்கள் முடிவடைந்தவுடன் அப்போது கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராக இருந்த திரு. செந்தில்நாதன் அவர்கள் இக்கிராமத்திற்கு வந்து திறப்பு விழா நிகழ்வு நடைபெற்றது. இந் நிகழ்வில் அவர் உரையாற்றுகையில் இக்கிராமத்தை தொடக்கி வைத்தவர் உதவி அரசாங்க அதிபராக இருந்த திரு.முருகையா எனவும் (இவர் இடையில் மாற்றலாகி செல்லவே) இத்திட்டத்தை முடித்து வைத்தவர் உதவி அரசாங்க அதிபர் திரு.கந்தசாமி எனவும் இருவரும் இணைந்து செயல்படுத்த படியால் இருவரின் பெயர்களையும் இணைத்து வைப்போம் எனக்கூறி முருகந்தநகர் என்னும் பெயரைச் சூட்டினார்.

இக்கிராமத்தில் தற்போது சுமார் 52 குடும்பங்கள் வாழ்கிறார்கள். கிராமத்தின் மத்தியில் சுரவிளான் குளம் என்னும் பெயரில் மண் அணைக்கட்டுக்களுடன் கூடிய குளம் கிராமத்தின் நீரூற்றையும், அழகையும் தருகின்றது. இக்கிராமத்தில் பொது அமைப்புக்களாக கிராம அபிவிருத்திச் சங்கம், விஷ்ணு சனசமூக நிலையம், தவக்குமார் முன்பள்ளி என்பன இயங்கி வருகிறது. முன்பள்ளிக்கு நிரந்தர கட்டடம் 2011ம் ஆண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள் எழுச்சி திட்டத்தினால் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. 1985ம் ஆண்டு காலப்பகுதியில் பச்சிலைப் பள்ளி பிரதேச சபையினரால் அமைத்து கொடுக்கப்பட்ட விஸ்ணு சனசமூக நிலைய மண்டபம் யுத்த சூழ்நிலை காரணமாக முற்றாக அழிக்கப்பட்டு அத்திவாரம் மட்டும் காட்சி தருகிறது. இக் கிராமத்தின் பொது அமைப்புக்களின் கூட்டங்களை முன்பள்ளி முற்றத்தில் செயல்படுத்தி வருகின்றனர்.

**சி.கனகசிங்கம்,**
தலைவர்,
நாமகள் கலாமன்றம்,
மாசாார், முருகந்தநகர்.பளை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக கலாசார அதிகார சபை உறுப்பினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூவினமும் கூடி புதுநாடு அமைப்போம்

யாதும் நம் ஊரே
யாவரும் நம் உறவுகளே
தீது வரமுன் தீர்வு பெற முயல்வோம்
போர் தந்த வடுக்களை சீர் செய்வோம்
காலம் கடந்த ஞானம் தான் இருந்தும்
கருத்தில் கொள்வோம்
யார் வந்து நமக்கு தீர்வு சொல்வது
யாம் எல்லோரும் ஒரு தாய் ஈன்ற
மக்களன்றோ!

மனித இனம் ஒன்று
மானத்தில் பேர் போன குணம் ஒன்று
தாய்மை ஒன்று
தரமான பண்புகள் ஒன்று
தெய்வ நம்பிக்கை உண்டு
திருமணம், பிரசவம்,
வேலை, வேதனை,
இழப்பு, இறப்பு
இதயத்துடிப்பு என்று
எல்லாமே ஒன்றான போது
இனத்தை மொழியை நிலை நிறுத்தி
ஏன் இந்தப் போராட்டம்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணங்கள் பலதால்
கை கோர்த்தோம்
பாகுபாடு பார்த்து
பகைமை பாராட்டினோம்
கொலைகள், கொள்ளைகள்
எண்ணிலடங்கா சித்திரவதைகள் - என
சிந்திய குருதிகளால்
என்ன சுகம் கண்டோம்.

சிறுபான்மை பெரும்பான்மை
ஒழிய வேண்டும்
சகபாடி வாழ்வியற்றும்
முறைமை வேண்டும்
படுபாதகப் போதனைகள்
மறைய வேண்டும்
பரிசுத்த குணங்களே எங்கும்
ஓங்க வேண்டும்

சிறைச்சாலை சித்திரவதை முகாம்
அகல வேண்டும்
சிங்கள தமிழ் மொழிகளிடையே
சமத்துவம் வேண்டும்
ஒரே நாடு ஒரே ஆட்சி
உண்டு - அது
இனங்கள் ஒதுக்கப்படாத
தன்மையில் மலர்வதே சிறப்பு

பிறக்கும் போது எதனூடாக
பிறக்கவில்லை
இறக்கும் போதும் எதையும் கொண்டு
இறக்கப் போவதும் இல்லை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் போது வாழும்
வாழ்வதனை
இனிமை உடையதாய் மாறச் செய்வோம்
கசக்கும் போர் இனபேதம்
இனியும் வேண்டாம்

கறைபடிந்த பூமியை
பூமரங்கள் நிறைக்கட்டும்
கழுகு வல்லூறுகள் சிறகு விரித்த
காலம் தொலையட்டும்
வெண்புறாக்கள் கூட்டம்
விண்ணை நிறைக்கட்டும்
விந்தை மாற்றம் உருவாகி
நம் மக்கள் கூட்டம்
சிந்தை குளிர வாழட்டும்

எங்கள் காலம் முடிந்தாலும்
எதிர்காலம் சிறக்கட்டும்
இயற்கை இறப்பு இன்னலற்ற வாழ்வு
இனபேதமற்ற கரங் கோர்ப்பு
இயற்கைப் பசுமை
இனிதான வாழ்க்கை - என்று
ஒரு நாடாய் ஒரே மக்களாய் - எம்
இறையாண்மை நிலை நாட்ட
உடன் முயல்வோம்
தொடர்வோம்.

**செ.கஜானன்**
**புலோப்பளை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய இசையும் அதன் தனித்தன்மைகளும்

கிராமிய இசை நமது கிராமத்து மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த ஒன்றாகக் காணப்படுகிறது. நாகரீகம் வளராத எளிய மக்களால் இது மிகவும் எளிதாகப் பாடக்கூடிய வகையில் அமைந்துள்ளது. இது மிகவும் எளிதாகப் பாடக்கூடிய வகையில் அமைந்துள்ளதால் இது படிப்பறிவில்லாத கிராமத்து மக்களின் தினசரி வாழ்க்கை முறையை பிரதிபலிக்கின்ற ஒன்றாகக் காணப்படுகின்றது. இவ் இசையானது மக்களைப் பரவசப்படுத்தி அவர்களைத் தம்மால் ஈர்க்கும் கலை இரசனையைக் கொண்டுள்ளது.

எனவே கிராமிய இசையில் உணர்ச்சி, ஓசை, இன்பம், தாளக்கட்டு, சொல் அழகு ஆகியவை எல்லாம் நிறைந்திருக்கின்றமையைக் காணலாம். பயிற்சி பெறாத குரல்கள் பாடுவதற்கு ஏற்ற வகையில் கிராமியப் பாடல்கள் அமைந்திருப்பதை நாம் காணலாம். எளிமையான இப்பாடல்களில் ஒரு கவர்ச்சி இருப்பதையும் நாம் உணர முடிகின்றது. இப்பாடல்கள் வழியாக கிராமத்து மக்களின் கற்பனைத் திறனையும் நகைச்சுவையும் உள்ள உணர்ச்சிகளையும் நாம் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

கிராமிய பாடலை நாம் கிராமிய இசை, நாட்டுப்புறப்பாடல், பாமர பாடல், செவிவழிப் பாடல் என்றெல்லாம் சிறப்பித்து அழைக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமிய பாடல்கள் பலவகை உண்டு அவை "தொட்டில் பழக்கம் சுடு காடு" வரை பாடப்படும் பாடல்களாகும். இந்த வகையில்

தாலாட்டுப்பாடல், குழந்தைப் பாடல், காதல் பாடல், தொழில் பாடல், கொண்டாட்டப் பாடல், மணவாழ்த்துப் பாடல், பக்திப் பாடல், ஆட்டப்பாடல், கும்மிப் பாடல் ஒப்பாரிப் பாடல் என பத்து வகையாக அமைந்துள்ளதை நாம் அறியலாம்

இவை தவிர ஒழுக்கப்பாட்டு, பழமொழிப்பாட்டு போன்றவையும் ஓய்வு காலங்களில் பாடப்படும். புதிர்பாட்டு, கோமாளிப்பாட்டு போன்றவையும் குறிப்பிட்ட காலங்களில் பாடப்படும். ஆராத்திப் பாட்டு, சடங்குப் பாட்டு போன்றவையும் வேலை செய்யும் போது பாடப்படும். ஏற்றப்பாட்டு, தெம்மாங்கு போன்றவையும் சில சந்தர்ப்பங்களிற்கென்று பாடப்படும். மழைப்பாட்டு பிரார்த்தனைப் பாட்டு போன்றவையும் கிராமியப் பாடல்களில் ஒருவகையாக அமைந்திருக்கிறது.

மேலும் கொண்டாட்டங்களில் வரும் மணவாழ்க்கைப் பாடல்களான திருமணப்பாடல், நலங்குப் பாடல், வளைகாப்புப் பாடல் போன்றவற்றை சமூகப் பாடல்களாகவும் கொள்ளப்படுகிறது. நாட்டுப்புறங்களில் வாழும் எழுத்தறிவில்லாத மக்களால் பாடப்படுபவையே நாட்டார் பாடல்களாகும். நாட்டார் இசையில் கவர்ச்சியும் கட்டுப்பாடின்மையுமே அதன் சிறப்பம்சங்களாகும் திறந்தவெளியிலியே இவை பாடப்படுகின்றன. இதன் மொழி அமைப்பு இலகுவானதாகவும் பேச்சு வழக்கிலே அமைந்ததாகவும் காணப்படும்

நாட்டார் பாடல்களை இயற்றியவர் பெயர் தெரியாது வாய் மொழியாகவே இன்று இவை எமக்கு கிடைத்துள்ளன. சந்தர்ப்பம் சூழல் நோக்கி தேவைக்கேற்ற வகையில் இயைபுபடுத்தப்படுகின்றன. நாட்டார் பாடல்களில் சொல்லும் பொருளும் திரும்பத் திரும்ப வரும் அமைப்பும் சிறப்பம்சமாகும் இப் பண்பு பாடல்களுக்கு அழகுணர்ச்சி ஊட்டுவதோடு பாடற் பொருளுக்கமைய உணர்ச்சி நிலையையும் ஏற்படுத்துகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டாரிசை மரபில் ஒத்திசைவு நயம் மிகவும் இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது. ஒத்திசைவு நயத்துடிப்பு பாடகரையும் கேட்போரையும் பாடலோடு ஒன்று படச் செய்கின்றது. நாட்டுப்புறப் பாடல் கலைஞர்களும் குரலை ஏற்றி இறக்கிப் பாடுவதில் திறமை பெற்றுள்ளனர். அடுத்து நாட்டாரிசைக்கு சந்த இசையமைப்பு முக்கிய அம்சமாகும்.

உ+ம் :- கும்மி

தானா தன்னை தான தன்னை
தானா தன்னை தானா தன்னை

ஏலேலோ ஐலசா என்னும் ஓசை அமைப்பு மீனவப் பாடலிலும் ஆராரோ என்னும் ஓசை அமைப்பு தாலாட்டுப் பாடலிலும் தில்லாலங்கடி என்னும் ஓசை அமைப்பு தொழிற்பாடலிலும் நாம் காணலாம். கிராமிய இசையில் பல்வேறு மெட்டுக்களைக் காண்கின்றோம். அவற்றில் முக்கியமானவை ஆனந்தக்களிப்பு, சிந்து, ஓடம், காவடிச்சிந்து, வண்டிச்சிந்து எனப் பல வகைப்படும்.

கிராமியப் பாடல்களின் தாளம் சாதாரண நடையில் திஸ்ர கதியில் அநேகமாக சம எடுப்பில் அமைந்திருக்கும். பிரதி மத்திமம் தவிர மற்றைய எல்லா ஸ்வரஸ்தானங்களும் கிராமியப் பாடல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். சாதாரணமாக மெட்டுக்கள் ஒரு ஸ்தாயி எல்லைக்குள்ளேயே இருக்கின்றது. சில மெட்டுக்கள் 3/4 ஸ்வரங்களுக்குள்ளேயே அமைந்திருக்கும். இதற்கு எடுத்துக் காட்டாக எங்களது திருநாடு என்ற குறத்திப் பாட்டினைக் கூறலாம்.

கிராமியப்பாடல்கள் அதிகமாக ஆனந்த பைரவி, நீலாம்பரி, புன்னாகவராளி குறிஞ்சி, நவரோஜ் ஆகிய ராகங்களில் இயற்றப்பட்டிருக்கும். எல்லா மொழிகளிலும் இப்பாடல்கள் உள்ளன. மலை வாழ் மக்களின் இசையில் கல்யாணி இராகமே இடம் பெறுகின்றது. இசை மேதைகளாகிய தியாகராஜா கோபால கிருஸ்ண பாரதியார், இராமசாமி சிவன் முதலியோரும் கிராமிய இசைப் பாடல்களை இயற்றி உள்ளனர். என்பதனை நினைவில் கொள்ள வேண்டும். கிராமியப் பாடல்களுக்கு எடுத்துக்காட்டாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சக்தி வாய்ந்த தீவனூர் பிள்ளையார் மீது பாடப்பட்ட பாடல்
2. தாலாட்டுப்பாடல்
3. வண்டிக்காரன் தெம்மாங்குப் பாடல்
4. சுண்ணம் இடிக்கும் பாடல்
5. தெருக் கூத்துப் பாடல் போன்றவற்றைக் கூறலாம்.

இக் கிராமியப் பாடல்களானவை ரூபகம், ஆதி, ஏகம், சாபு ஆகிய தாளங்களில் அமைந்திருக்கும்

கிராமிய இசைக்கருவிகளானது பண்படுத்தப்பட்டதாக இருக்கிறது. அதிலும் தாள வாத்தியமே அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. இது தவிர தந்தி வாத்தியம், காற்றுக் கருவி, தாளவாத்தியம், உலோகத்தலான வாத்தியம், மரத்தர்லான வாத்தியம் போன்றவை பயன்டுத்தப்படுகின்றன.

கிராமிய இசை பாடும் முறையாக

1. தனித்து ஒருவர் பாடுதல்
2. பலர் சேர்ந்து குழுக்களாகப் பாடுதல்
3. தலைவன் பாட மற்றவர் சேர்ந்து பாடுதல்

இரண்டு பிரிவினராகப் பிரிந்து மாறி மாறிப் பாடுதல் போன்ற வகையில் அமைந்துள்ளது. நாட்டார் இசைக் கருவிகள் கிராமிய சூழலில் கிடைக்கப்பெறும் பொருட்களாலேயே ஆக்கப்பட்டுள்ளன. மிகவும் எளிமையான வடிவமைப்பைக் கொண்ட இக்கருவிகள் மிகவும் இலகுவாக வாசிக்கக் கூடியவையாகவும் கிராமத்து மக்கள் பாடலைப் பாடும் போது அப் பாடல்களுக்கு பக்க வாத்தியமாகவும் வாசிக்கப்படுகின்றன.

இக்காலத்தில் நாட்டார் வழக்காற்றியல் தனிப்பட்டதோர் கல்வித்துறை என்ற தகுதியைப் பெற்றுள்ளது பல்கலைக்கழக மட்டத்திலிலும் பலர் நாட்டாரியலில் பல ஆய்வுகளை மேற் கொண்டு வருகின்றனர் இத்துறையில் கா.சிவத்தம்பி, பேராசிரியர் அ.சண்முகதாஸ் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை, காரைசுந்தரம்பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களக உள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையுலகிலும் நாட்டரிசையிலுள்ள இசை வடிவங்கள், தாள அமைப்புக்கள் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாய்வுகளின் பயனாக வழக்கொழிந்திருந்த பல நாட்டார் பாடல் தேடி எடுக்கப்பட்டு பதிப்பிக்கப் படுகின்றன. நாட்டார் வழக்காற்றியல் சம்பந்தமாக பல மாநாடுகள் இலங்கையில். நடைபெறுகின்றன தொலைக்காட்சி, வானொலி போன்ற வெகுசனத் தொடர்பு சாதனங்களினால் நாட்டார் பாடல்கள் ஒலிபரப்பப்படுவது வரவேற்கத்தக்கது.

சில வருடங்களுக்கு முன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினரால் இலங்கையில் வழக்கிலுள்ள நாட்டார் பாடல்கள் நேரடியாக ஒலிப்பதிவு செய்யப்பட்டு ஒலித்தட்டாகவும் ஒலிப் பேழையாகவும் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கவை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பவள விழாவின் போது காமன் கூத்து, காத்தவராயன்கூத்து, சங்கிலியன் நாடகம் போன்ற நாட்டார் இசை வடிவங்கள் இறுவட்டுக்களாக வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சும் தங்கள் பிரதேசத்தில் உள்ள பல வகையான நாட்டார் பாடல்களை நேரடியாகப் பெற்று அவற்றைத் தொகுத்தது மட்டுமல்லாது ஒரு சிலவற்றை முதலாவது தொகுதி ஒலிப்பேழையாகவும் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாறாக கிராமிய இசையும் அவற்றின் தனித் தன்மைகளும் போற்றுதற்குரிய சிறப்பம்சங்களாகக் கொண்டு விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**சி.ஜெயதர்ஜினி**
பிரதேச செயலகம்,
பச்சிலைப்பள்ளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவி பாவனையின் மாற்றங்களே கலைகளின் தோற்றமாகும்

இப் பிரபஞ்சத்தில் மனித நடமாட்டத்தின் ஒரு வெளிப்பாடாக கலைகள் அமைந்துள்ளதைக் காணலாம். மனிதன் தோற்றம் பெற்ற காலத்திலிருந்து மனித வாழ்வுப் பிரமாணங்கள் வளர்ச்சியடைந்து வந்த நிலை செயற்பாடுகள் அனுபவங்கள் பிற சமூகங்களுடன் கொண்ட தொடர்புகள் ஆகியவற்றுடன் கொண்ட தொடர்பாக கலைகள் அமைந்துள்ளன. சமுதாய உருவாக்கத்தின் பின்னணியில் கலைகள் தோற்றம் பெற்றன. சூழலை மாற்றியமைக்கும் மனித முயற்சிகளின் வெளிப்பாடுகளில் ஒன்றாகக் வடிவங்களும் கோட்பாடுகளும் காணப்படுகின்றன. கருவிகளின் பண்பாடும், பட்டறிவும், பண்டைய மனித முயற்சிகளுக்கு வலுவூட்டின கருவிகளைப் பயன்படுத்தும் திறனோடு கைகளின் ஆட்சி மேலோங்கத் தொடங்கியது. மனித மயமாக்கலுக்கு கைகளே பெரிதும் துணை நிற்கின்றன அதுவே பண்பாட்டு வளர்ச்சியின் மேலோங்கிய உறுப்பாயிற்று கைகள் புலன்களின் இணைப்பு சிந்தனை என்பவற்றின் ஒன்றிணைந்த தொடர்புகள் உற்பத்தி ஆக்கத்திலும் கலை ஆக்கத்திலும் சிறப்பாக ஈடுபட்டன கைகளின் சிறப்பார்ந்த பிரயோகங்கள் ஏனைய விலங்குகளிலும் மனித செயல்களை மேலோங்கச் செய்தன. தொடர்ச்சியான உழைப்பும் சிந்தனையும் கைகளின் ஆட்சிக்கு வலுவூட்டின. மனித சிந்தனைகளின் வளர்ச்சி கைகளின் ஆற்றல் பெருக்கம் கருவிகளின் பயன்பாடு முதலியவை மனிதனின் உள்ளமைந்த வலுவை எல்லையற்றதாக மாற்றியது காலப் போக்கில் கருவிப் பாவனைகளில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களே கலை வடிவங்களிலும் கோட்பாடுகளிலும் ஏற்பட்ட மாற்றங்களாயின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவிகளாலும், உழைப்பாலும், வலிமையாலும் புறவுலகை மாற்றும் செயல்முறையானது மாய விந்தையோடு தொடர்பு படுத்தப்பட்டது. செயல் ஒன்றை பாவனை செய்வதால் வலிமையையும், ஆற்றலையும் பெருக்கலாம் என்ற மனிதரின் நம்பிக்கையானது பாவனை நடனங்களின் வளர்ச்சிக்கு உற்சாகமளித்தது. கலை என்றால் என்னவென்று வியாக்கியானப்படுத்துவதற்கு தத்துவவியலாளர்கள் மெஞ்ஞானிகள், விஞ்ஞானிகள் ஆய்வாளர்கள் பலரும் விளக்குவதைக் காணலாம் இவ்வாறான விளக்கங்கள் பன்முகத்தன்மை கொண்டதைக் காணலாம். உலகப் பொதுமை வாய்ந்த கலைக்கோட்பாடே இன்னமும் உருவாக்கப் படாமலே இருந்து கொண்டிருக்கிறது மானுட சமூகத்தின் எண்ணக்கருக்கள் செயல் வடிவம், பொருள் வடிவம் பெறும் போது ஏற்றி உருவகித்து சொல்லப்படும் வியாக்கியானங்கள் ஒரே சீராக அமையாமையே காரணம் எனலாம். வாழ்க்கையின் இலக்குகள் காலத்திற்கு காலம் மாற்றமடையும் போது அதன் பொருள் அடிப்படையிலும் வடிவமைப்பிலும் மாற்றமடைவதைக் காண்கின்றோம்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இற்றை வரைக்கும் கலைகள் மாற்றமடைந்துள்ளன. சாதாரண உணவுக் கலையில் இருந்து இரண்டாம் உலகப்போர் முடிவடைந்த காலம் வரையான ஹிரோசிமா, நாகஷாகி வரை கலைப்படைப்புக்கள் உருவாக்கம் பெற்றுள்ளன. ஆனால் அவை அனைத்தும் ஒரே நோக்கில் அமையவில்லை. காலந்தோறும் மாற்றமடைந்து வந்த சமுதாய பொருளாதார முகிழ்ப்புக்களுள் வந்ததைக் காண்கிறோம்.

பழைய கற்கால கலைஞர்களால் படைக்கப் பெற்ற மனிதர், விலங்கு பற்றிய கோட்டு ஓவியங்களும் வர்ண ஓவியங்களும் குறிப்பிடத்தகக கொம்பு வேலைப்பாடுகளும் கல் செதுக்கங்களும் பழைய கற்கால மனிதர்கள் வாழ்ந்த பிரெஞ்சு, சுவிஸ் குகைகளில் கண்டு பிடிக்கப் பெற்றுள்ளன கர்நூல் மாவட்டத்தில் பில்லா சர்க்கம் குகையில் காணப்பட்ட பற்களால் செய்யப் பெற்ற தொங்கட்டான் தவிர இத்தகை கலைப்படைப்புக்கள் வேறு இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இத்தகைய கோட்டு ஓவியங்கள் இந்தியர்களாலும் படைக்கப்பட்டிருக்கக்கூடும். பல மனிதக் கலைப்பொருட்களை அழித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் நிறைந்தள்ள அழிப்பான்கள் ஆன எகிப்திய கல்றைகளில் இருந்த மனித எலும்புகளையே தாக்கி அழித்தவை என்று அறியப்பட்ட கறையான்களால் இவையும் அழிக்கப்பட்டிருக்கும். இவ்வாறான செயற்பாடுகளால் மனிதர்களால் எலும்பிலும் தந்தத்தாலும் செய்யப்பட்ட கலை வேலைப்பாடுகள், ஓவியங்கள் ஆகியன அழிந்து போயின.

கருவிப்பாவனைகளில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களே காலப் போக்கில் கருவிப் பாவனையுடன் கலைகளில் மாற்றங்களை ஏற்படுத்த பழைய கற் காலத்திலிருந்து அன்று வரை இதனை நோக்க முடியும் பழைய கற்கால கருவிகள் முதன்மையாக தென்னிந்தியாவிலே கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. கர்நூல் மாவட்டம் பழைய கற்கால கருவிகளின் எச்சங்களைப் பேரளவில் தந்துள்ளது குண்டூர், நெல்லூர் மாவட்டங்களின் கடற்கரைப் பகுதியின் பல்வேறு இடங்களில் மனிதனின் கை வேலைப்பாடுகளுக்கான நினைவுச் சின்னங்களைக் கொண்டுள்ளன. செங்கற்பட்டு வட ஆற்காடு மாவட்டங்கள் எண்ணற்ற பழைய கற்கால தொழிற் கருவிகளை வழங்கியிருக்கின்றன.

ஐரோப்பாவின் பழைய கற்கால ஊழி, கீழைப் பழைய கற்காலம், மேற் பழைய கற்காலம் எனவும், மேலும் இவை ஏழு உட்பிரிவு காலங்களாகவும் பிரிக்கப்பெற்றுள்ளன.

1. செல்லியன்
2. அச்சூலியன்
3. மோஸ்டீரியன்
4. ஆரிக்னேசியன்
5. சொலூற்றிளன்
6. மக்தலேனியன்

என அந்தக் கால கட்டத்திற்குரிய பண்புகளைக் கொண்ட கருவிகள் கண்டுபிடிக்கப்பெற்றுள்ள இடங்களின் பெயரால் அழைக்கப்படுகின்றன. உயர் பழைய கற்காலம் தொடங்கியபோது கல் வேலை மற்றும் புதிய வகையான கருவிகள் செய்யும் முறையில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. இதன் விளைவாக பல்வேறு கைவினைப்பொருட்களின் உற்பத்தியின் எண்ணிக்கை மிகுந்தது. தொழிற்கருவிகள் செய்ய எலும்பு, தந்தம் போன்ற புதிய பொருட்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தப்பட்டன. கல்லில் சிற்பம், பழைய கற்கால மனிதனின் கலை உணர்ச்சியும் கோட்பாடுகளும், உயர் நிலையை அடைந்தன. பழைய கற்கால கலைப் பொருட்களான பிளக்கும், தாக்கும், தோண்டும் கருவிகள், வடக்கு, தெற்கு ஆபிரிக்கா, மைய அமெரிக்கா, ஐரோப்பா, ஆகியவற்றில் மிக முந்திய கற்காலத்தில் கிடைத்துள்ள தொழிற்கருவிகளோடு பெரிதும ஒத்துள்ளன. திரு.ஜே.காக்கின் பிரௌன் அவற்றை 3 வகையாக பிரிக்கிறார். ஆங்கில செல்ட் உடன் தொடர்புடைய 'பவுச்சர்ஸ்' அவற்றுடன் கோடல், கோடரி மற்றும் பிளத்தல் போன்ற கருவிகளான பழங் கற்கால கருவிகள் தட்டு வடிவங்கள் என 3 வகையாக பிரிக்கின்றார்.

1) 1. கூரிய முட்டை வடிவம்
2. முட்டை வடிவம்
3. சதுர முனை வடிவம் கொண்டது
4. கில்லட்டின் வகை
5. சாய்ந்த முனை கொண்டது

2) 1. ஈட்டிகள்
குறுகிய வகை
அகலமாய் அமைந்தது.

3) கடின கூழாங்கல் முனையுடைய தோண்டும் கருவிகள்
4) வட்ட வடிவ தொழிற் கருவிகள்
5) ஒருபக்கம் மட்டும் வெட்டும் கருவி
6) நீண்ட மெலிந்த கத்தி மாதிரியான கருவிகள்
7) உரசித் தேய்க்கும் கருவிகள்
8) கோர்ஸ்
9) சுத்தியல் கத்திகள்
10) கிழிகடைக்கோல்

இவ்வாறு பல்வேறு நோக்கங்களுக்காக தெளிவாக வடிவமைக்கப்பட்ட குறைந்தது பத்து பழங்கற்கால கருவிகளின் வடிவங்கள் இருக்கின்றன. இவையே பின்வந்த காலங்களில் மாற்றமடைந்து வந்துள்ளன.

புதிய கற்கால தொழிற் கருவிகள் முந்திய காலகட்டத்தினை சார்ந்தவைகளைக் காட்டிலும் வேறுபட்ட பல்வேறு வகையைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்தனவாகும். புதிய கற்கால மனிதர்கள் பளபளவாக்கம் பெற்ற தங்க தொழிற் கருவிகளை எரிமலைப் பாறைகளைக் கொண்டு உருவாக்கினான். அது படிகக் கல்லை விட கடினமாகவும் விடாப்பிடியானதாகவும் நன்கு வழவழப்பாகும் தன்மையுடையதாயும் இருக்கக் கூடியது கற்கருவிகளுடன் புதிய கற்கால இடங்களில் மிகுதியான தேர்ந்தெடுக்கப் பெற்ற கருவிகள் கண்டு பிடிக்கப் பெற்றுள்ளன. பொதுவாக காணப்படும் இடத்திலிருந்து இந்த இடத்திற்கு அயலான ஆனால் மனித முகாமைகளால் ஒரு நோக்கத்தோடு சில தனிப்பட்ட கருவிகளைச் செய்வதற்கு பயன்படுத்திக் கொள்வதற்காக கொண்டு வரப்பட்டவற்றைக் தேர்ந்தெடுக்கப்பட்ட கற்கள் என்ற கலைச் சொல் குறிக்கின்றது.

கருவிகளில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களே கலைகளிலும் கலைக்கோட்பாட்டிலும், மாற்றம் ஏற்படக் காரணம் என இந்தியக் கலைக் கோட்பாட்டின் ஊடாக தெளிவாக அறிய முடியும் சிந்து வெளிக் காலத்தில் கற்கால கருவிகளைக் முற்றாக கைவிட வில்லை சிந்து வெளிக்கால கருவிகள், கத்தி முதலியவற்றின் அலகுகள் தட்டையாகவும் எளிதில் வளைவனவாகவும் இருந்தன.

காலத்திற்கு காலம் கருவிகளில் ஏற்படும் மாற்றத்துக்கு அதன் புவியியல் அமைப்பு பல்லின மக்களின் சமூக விழுமியங்களும் பண்பாடுகளும் காரணமாகின்றன. கலைப் படைப்புக்களின் பன்முகத்தன்மையில் மதங்களும் முக்கிய காரணமாகின்றன. வட இந்தியாவில் கி.பி 320-550 வரையான காலப் பகுதியில் சமயம் சார்பான கலைகள், கோட்பாடுகள் வளர்ச்சியடைந்ததற்கு மத வளர்ச்சியே காரணம் எனலாம். இக்காலத்தில் தெய்வ உருவக் கோட்பாடு நன்கு அறிந்தவனாக விளங்கினான். சாரண புத்தர் சிலை மதுரா புத்தர் சிலை சுல்தான் கஞ் புத்தர் சிலை, திருமாலின் அவதாரச் சிற்பங்கள், அஜந்தா எல்லோரா ஓவியங்கள் கற்றளிக்கோவில்கள் என்பன அதற்கென அளவுத்திட்டங்கள் உள்ளதாக அமைக்கப்பட்டுள்ளது. இக்கலைக் கோட்பாடுகள் இறைவழிபாட்டின் நம்பிக்கையில் மூழ்கி மிக நீண்ட வரலாற்றுப் பின்புலத்தினைக் கொண்டது. இவ்வாறு வளர்ந்த கலைகளை நாம் இரண்டு பரிமாணங்களைக் கொண்டு பார்க்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இந்தியக் கலைகளின் கோட்பாட்டு பரிணாமம்
2. இந்தியக் கலையின் நடைமுறைப் பரிணாமம்.

இவ்விரு நிலையிலும் இந்தியக் கலையினைப் பார்கின்ற போது இறைவழிபாட்டின் ஊடாகவும், கருவிகளில் ஏற்பட்ட மாற்றம் வழிபாட்டுத் தலங்களிலும், கடவுளின் சிலைகளிலும் அவற்றை அமைப்பது தொடர்பான கோட்பாடுகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தின. அதாவது ஆலய அமைப்பு, தூண்களின் வடிவங்கள், விக்கிரகங்கள் என நோக்கலாம்.

பௌத்த மதக் கலைக் கோட்பாடுகளைப் பார்க்கின்ற போது ஞான ஒளியைப் பரப்புபவராக புத்தர் கலைஞர்களால் உருவகிக்கப் பட்டு செதுக்கப்படுகின்றார். முதல் அறிவுரையை நிகழ்த்தும் புத்தரின் திருவுருவம் வேறெந்த இந்திய சிற்பத்திலும் மேலாக புத்த மதத்தின் உண்மைப் பொருளை உணர்த்துவது போலுள்ளது. அழகாக அணி செய்யப்பட்ட பரிவட்டமொன்று சுற்றியிருப்ப, தேவ கணத்தவரிருவர் புடைசூழ புத்த பிரான் பெருமிதத் தோற்றத்துடன் மெல்லிய உருட்சியான உடலுடையவராய் தசையமைப்பு விளக்கங்கள் தெளிவாக சாரணாத் புத்தர் சிலை அமைக்கப் பெற்றுள்ளது. அவருடைய மென்விரல்கள் பௌத்த நெறியைப் போதிப்பதாக தர்மச் சக்கர முத்திரையை காட்டுவனவாக அமைந்துள்ளன. மதுரா கலை மரபை தனிச் சிறப்பும் மூலத் தன்மையும் கொண்டு காணப்படுகின்றது. குப்தர் கால கருவிகளில் ஏற்பட்ட முன்னேற்றமே முதன் முதலாக வெண்கலத்தாலும் செம்பாலுமான படிமங்கள் பல காணப்படுகின்றன. இதில் குறிப்பிடத் தக்கது சுல்தான் கஞ்க் புத்தராகும். 7 அரை உயரமுடைய இப்புத்தர் வடிவம் முள்ளியமான மெல்லிய போர்வையணிந்து காணப்படுகின்றது உயிர்கனைத் தோற்றத்துடன் உடலில் காணப்படும் இயக்கப் பண்பில் மேலங்கியை மெல்லெனப் பிடிக்கும் நுண்ணிதாக அமைக்கப்பட்டுள்ளது. வெண்கலப் படிமங்களை வழிபாட்டிற்குப் பயன்படுத்தும் முறை இக்காலத்திலேயே பௌத்தர்களிடம் தோன்றியது. இதில் கருவிகளில் ஏற்பட்டு வந்த மாற்றங்களின் தொடர்பாகவே அவதாரக் கோட்பாட்டு என்னும் கோட்பாட்டின் அடியாகவே கலை வளர்வதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணர் பல அவதாரங்களை எடுத்து மக்களுக்கு அருள் செய்கின்றார் என்பர். தேவ கிரியில் உள்ள கோயிலில் செதுக்கப் பட்டுள்ள கோபாலனும் கோபிகைளும் கஜேந்திர மோட்சம், திருமாலின் ஆனந்த சயனம், நரநாராயணன் திருமாலுடைய அவதாரச் சிற்பங்கள் வராக அவதாரம் என்பன குறிப்பிடத்தக்கது இவ் அவதாரக் கோட்பாட்டிற்கும் கிரேக்கத்தில் கூறப்படும் கருவளச் சடங்கிற்கும் இடையில் தொடர்புகள் உண்டு என்பர். இவ் அவதாரக் கோட்பாட்டின் ஆய்விலே மனங் கொள்ள வேண்டிய இன்னுமொரு விடயம் இறையியல் வெளிப்பாட்டின் செல்வாக்கு செலுத்தும் இரண்டு வாதங்கள் காணப்படுகின்றன.

1 .
2 .
ஒருமை வாதம்
பன்மை வாதம்

ஒருமை வாதம் என்பது இறைவனை ஒரு வடிவில் காணும் முயற்சி கொண்டது. அதாவது இறைவன் ஒன்று அவனுடைய தோற்றமும் ஒரு நிலைப்பட்டதே எனக்கூறுவர். மற்றையது பன்மை வாதம் ஆகும். இது ஒரு நிலை கொண்டது. இதனால் பல சமயங்களில் வழிபாட்டுக்குரிய தெய்வங்கள் பல பல வடிவில் படைக்கப்பட்டன. இதனால் சமயம் சார்ந்த கலை கோட்பாட்டு வடிவங்கள் தோன்றின. இது கருவிகளில் ஏற்பட்ட மாற்றத்தாலேயே ஏற்பட்டன. இதனால் மேலும் பல தெய்வங்களின் உருவங்களில் சிருஷ்டிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கருவிகளில் ஏற்பட்ட மாற்றம் இறை பக்தி நிலையுடன் வளர்த்த கலைகள் இதன் துணை நின்று நாட்டார் கலைகளும், கோட்பாடுகளும் வளர்ந்தன எனலாம் நாட்டுப்புற அதாவது கிராமப்புற மக்கள் படும் துன்பங்களும் அதிலிருந்து நிம்மதி பெறும் ஊடகமாக கலைகளைக் கண்டனர். கிராமப் புறத்தின் கலையுணர்வுகள் அழகுற செதுக்கப்பட்டன. இக்காலத்தில் அழகிய உணர்வு மக்கள் மத்தியில் சீர்ப்படுத்தப்பட்டு வளர்ந்து வந்துள்ளது. ஒவ்வொரு மனிதனது உணர்வுகளை பிரதி பலிக்கும் வடிவங்களை கலைப்படைப்பாக உருவாக்குவதாகவே பிற்காலததில் கலை அம்சங்களாக விளங்கின.

இவ்வாறான கலைகளில் கருவிகளில் ஏற்பட்ட மாற்றங்கள் தொல்சீர் மனோரதியக் கோட்பாடு வளர்சியடைந்தது. தொல்சீர் கோட்பாடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கின்றபோது பழைய கலைமரபுகளைப் பாதுகாத்தல், புராதனக் கலைகளின் வாழ்வியற் கலைகளைப் படைக்கின்ற விதிமுறைகள் என்பன தொடர்பாக கட்டுப்பாடுகள் கொண்ட கோட்பாடாக காணப்படுகின்றது. கலைகளின் தொல்சீரானது பலமான ஒரு கலைப்பின்னனியினை உருவாக்கியது. இவ்வாறு கலைகளைப் படைக்கின்ற போது விதிமுறைகளைக் கூறிய தொல்சீர் கோட்பாட்டிற்கு மத்தியில் கலைகளின் மனித சுதந்திரம் பேணப்பட வேண்டியதன் அவசியத்தையும், இவ்வாறு மனிதப் பண்பை மதிக்கின்ற போது மரபுகளை மீற வேண்டியதன் அவசியத்தினையும் விளக்கும் வகையில் மனோரதியக் கோட்பாடு வளர்ந்தது.

சித்தன்ன வாயில் நடன மாதுவின் ஓவியம்
இலங்கை சிகிரியா ஓவியம்
மாமல்ல புர சிற்பம்.

உதாரணமாக கட்டுப்பாட்டுடன் வளந்த அரண்மனைக் கலைகள் பிற்காலத்தில் சமூகத்துடன் ஒன்றி படைப்புக்களாக வெளிவந்தன. கருவிப் பாவனையில் ஏற்பட்ட மாற்றங்கள் மனோரதியக் கோட்பாடனது கலையின் மனக் கவர்ச்சியின் உச்ச நிழலைக் காண முடிகின்றது தனிமனிதப் பிறப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து கலையை ஒருமனித உணர்ச்சியின் உண்மை வெளிப்பாடு கொண்டது என கூற முனைந்தது உதாரணமாக முதன் முதலாக புத்தருக்கு மனித உருவம் கொடுத்து வரைந்தவர்கள் அல்லது படைத்தவர்கள் காந்தாரக் கலைக்குரிய குஷானர்கள் இவர்களின் படைப்புத் திறனும் மன வெளிப்பும் புத்தரின் புதிய முறையைப் படைத்தது எனலாம் எனவே கலைக் கோட்பாடுகளில் பார்க்கின்றபோது மனோரதியம் தொல்சீர் என்பன அண்மைக் காலங்களில் செல்வாக்கு செலுத்துவதாகும்.

கருவிகளில் ஏற்பட்டு வந்த மாற்றங்களினால் கலை வடிவங்களிலும், கலைக் கோட்பாடுகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தின. பிரெஞ்சுப் புரட்சிக் காலத்திலும், இரண்டாம் உலகப் போருக்குப் பின்பும் கலைகளில் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தற்காலத்தின் பின்வரும் கலை மூலக்கூறுகளினுடாக பிரித்து வகுக்கப்படுவதைக் காணமுடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. நுண்மதி சார்ந்த மூலக்கூறு
2. தொழில்நுட்ப மூலக்கூறு
3. மனவெழுச்சி மூலக்கூறு

தற்காலத்தில் கலைப்படைப்பில் மனவெழுச்சி மற்றும் உணர்ச்சி என்ற மூலக்கூறுகள் மேலோங்கி நிற்கும். சிந்திப்பதற்கும், உணர்வு கொள்வதற்கும். பண்டைய பெருமைகளை நிலை நாட்டுவனவாகவும் அமைந்துள்ளன.

உதாரணம் :- கன்னியாகுமாரி திருவள்ளுவர் சிலை கருவிகளில் ஏற்பட்ட மாற்றம், தொழில்நுட்பத்திறன் என்பன இதனை உருவாக்கியது கல்லில் செதுக்கப்பட்டது போல தற்போது பளிங்குகளில் செதுக்கப்பட்டு வருகின்றது. காலப்போக்கில் பல்வேறு தொழில் நுட்ப மாற்றங்களை இனங்காண முடியும்.

**வே.செல்வகுமார்**
**அதிபர்,**
**தர்மக்கேணி அ.த.க. பாடசாலை.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் மீள்குடியேற்றத்தின் பின்னரான அபிவிருத்தி


சூழலியல் ரீதியாக என்றும் பசுமையாக விளங்கியதாலும் ஆலிலைக் கண்ணன் பள்ளி கொண்டதாலும் பச்சிலைப்பள்ளி என்ற காரணப்பெயரைக் கொண்ட இப்பிரதேசம் புவியியல் ரீதியாக யாழ்ப்பாண குடாநாட்டையும், வன்னிப் பெருநிலப் பரப்பையும் இணைக்கின்ற ஒடுங்கிய நிலப்பரப்பாகும். வடக்கே தொண்டமனாறு கடல் நீரேரியையும் தெற்கே மேற்குப்புறமாக யாழ்ப்பாண கடல் நீரேரியையும் கிழக்குப் புறமாக ஆனையிறவு கடல் நீரேரியையும் மேற்கெல்லையாக தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவையும் வடக்கு கிழக்கு எல்லைகளாக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவையும் கொண்டுள்ள இப்பிரதேசம் 642 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவான நிலப்பரப்பைக் கொண்டுள்ளது.


புவியியல் ரீதியாக இதன் இட அமைவின் காரணமாக, பண்டைய அரசர்களாலும் குடியேற்றவாத ஆட்சியாளர்களாலும், யுத்த தந்திரோபாயங்களுக்கேற்ற இடமாக பயன்படுத்தப்பட்டு வந்ததை இக் கிராமங்களின் பெயர்களும், ஒல்லாந்தரால் கட்டப்பட்ட பஸ்சுட்டர், ஆனையிறவு எனும் கோட்டைகளின் சிதிலங்களும் உணர்த்துகின்றன. நிர்வாக ரீதியாக பதினெட்டுக் கிராம அலுவலகப் பிரிவுகளைக் கொண்ட இப்பிரதேசம் 3886 குடும்பங்களையும் 12,584 மக்களையும் கொண்டுள்ளது. உப்புவிளையக் கூடிய குறிஞ்சாத் தீவு உப்பளத்தையும் தென்னைக்கு உகந்த மண் வளத்தையும் 150 க்கும் அதிகமான சிறிய குளங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

942 ஹெக்டயர் வயல் நிலங்களையும் 23.8km நீளமான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வீதிகளையும் 36km நீளமான மாகாண சபை வீதிகளையும் 533.5km நீளமான பிரதேச சபைக்குச் சொந்தமான வீதிகளையும் இப்பிரதேசம் கொண்டுள்ளது.




1983ம் ஆண்டில் ஆரம்பமான ஆயுதப் போராட்டத்தினாலும் நீண்டகால இடப் பெயர்வினாலும் இங்கு வாழ்ந்திருந்த மக்களினுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்துக்கள், தொழில் முயற்சிகள் அனைத்தும் மோசமாக பாதிக்கப்பட்டன. யுத்தத்தின் காரணமாக மக்கள் முற்றாக இடம் பெயர்ந்ததுடன் வீடுகள், கிணறுகள் முற்றாக அழிக்கப்பட்டதுடன், சில பகுதிகளில் மிதிவெடிகளின் அபாயத்தினால் மீள்குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்ட போது பொதுமக்களும், அரசாங்க அதிகாரிகளும், தொண்டு நிறுவனப் பணியாளர்களும் பெரிதும் சிரமங்களை எதிர் நோக்கினர். பொதுத்துறை நிறுவனங்கள், பாடசாலைகள், வங்கி மற்றும் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் கட்டட வசதியை இழந்த நிலையில் பெரும் சிரமத்தின் மத்தியிலே மீள் குடியேற்றப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அனர்த்தம் அபிவிருத்தியை ஊக்குவிக்கும் என்பதற்கமைய அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் நிதி உதவியுடன் மீள்குடியேற்றத்துக்கான கொடுப்பனவு தற்காலிக வீடுகள், மலசலகூட வசதிகள், உணவு மற்றும் உணவு அல்லாத பொருட்கள் உபகரணங்கள் வாழ்வாதாரத்துக்கான கொடுப்பனவுகள் என்பவை மூலம் மக்களின் அவலங்களை தணிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அடுத்த கட்டமாக விஷேட திட்டங்களின் மூலம் வீதிகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், பொதுச் சேவை நிறுவனங்கள் மற்றும் அடிப்படையான உட்கட்டுமானங்கள், நிரந்தர வீடுகள், மின்சார வசதிகள் ஆகியன ஏற்படுத்தப்பட்டன. போக்குவரத்துச் சேவைகளில் புதிய பஸ்சேவைகள் அதிகரித்ததுடன், புகையிரத சேவையையும் இப்பிரதேசம் பெற்றுக்கொண்டது.

பச்சிலைப்பள்ளி பிரதேசம் இவ் அபிவிருத்தியின் மூலம் பெற்றுக் கொண்ட நன்மைகள்

1. 19கி.மீ நீளமான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வீதிகள் புனரமைக்கப்பட்டமை.

2. 121.9கி.மீ நீளமான பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு சொந்தமான வீதிகள் புனரமைக்கப்பட்டமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. 1990ம் ஆண்டின் பின் புகையிரதச் சேவை கிடைக்கப் பெற்றமை.

4. 2707 நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டமை

5. 18 கிராம அலுவலர் பிரவுகளும் மின்சார வசதியைப் பெற்றுக்கொண்டமை

6. பளை இந்து ஆரம்பப் பாடசாலையைத் தவிர ஏனைய பன்னிரண்டு பாடசாலைகளும் மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கேற்றவாறு கட்டட வசதிகளைப் பெற்றுக்கொண்டமை.

7. 25 படுக்கை வசதிகளுடன் பளைப் பிரதேச வைத்தியசாலை அபிவிருத்தி செய்யப்பட்டமை

8. நவீன வங்கிச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டமை.

9. நகரங்களுக்கிடையிலான போக்குவரத்து இலகு படுத்தப்பட்டமை

10. பொதுச் சேவை நிறுவனங்கள் புதிதாக வடிவமைக்கப்பட்ட கட்டட வசதிகளுடன் மக்களுக்காக கூடிய சேவையை வழங்கி வருகின்றமை.

11. கிளாலி இறங்கு துறை புனரமைக்கப்பட்டமை

12. பால் சேகரிப்பு நிலையம் உருவாக்கப்பட்டமை

13. 20 மெகாவாற்று மின்சாரத்தை உற்பத்தி செய்யும் காற்றாலைகள் உருவாக்கப்பட்டமை

14. காணி ஆவணங்கள் அற்றவர்களுக்கு ஆவணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டமை

15. 416 தொழில் முயற்சிகள் மீள் ஆரம்பிக்கப்பட்டமை.

16. தென்னை மீள்நடுகை ஆரம்பிக்கப்பட்டமை. இந்த அபிவிருத்தியின் பின்னால் உள்ள பாதகமான விடயங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. சூரியன் உதிக்கும் போதும், மறையும் போதும் பணம் கைகளுக்கு கிடைக்க வேண்டும் என்ற மனப்பாங்கு மக்களிடம் ஏற்பட்டமை.

18. தென்னிலங்கையைப் போலன்றி மிகவும் வறிய குடும்பங்கள். வறிய குடும்பங்கள் நிரந்தர வீடுகளினுள் மின்சார வசதியுடன் வசித்தல்

20. உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் வகையும் எண்ணிக்கையும் குறைந்தளவில் காணப்படல்

21. வர்த்தகப் போட்டிக்கு உள்ளூர் உற்பத்தியாளர்கள் முகங்கொடுக்க முடியாத நிலை காணப்படல்

22. 414கி.மீ நீளமான பிரதேச சபைவீதிகள் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் இருத்தல்

23. கைவிடப்பட்ட நிலையில் பலகுளங்களும் கால்வாய்களும் இருத்தல்

24. 25கி.மீ நீளமான மாகாணசபை வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட வேண்டியிருத்தல்

25. 942 ஹெக்டயர் வயல் நிலப்பரப்பில் 460 ஹெக்டயர் மாத்திரமே பயிர் செய்கைக்கு உட்படுத்தப்படல்.

இவற்றின் காரணமாக 5000 ரூபாய்க்கு குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வீதம் அதிகமாக காணப்படுகின்றது. இவற்றினுள் பெண் தலைமைத்துவ குடும்பங்கள், நலிவுற்ற குடும்பங்களும் உள்ளடங்குகின்றன. இதன் காரணமாக சமூகப் பிரச்சினைகள் பல காணப்படுகின்றன.

1. சிறுவர்களிடம் காணப்படும் மந்த போஷாக்கு


2. கர்ப்பிணித் தாய்மார்களின் உடற்திணிவுச் சுட்டெண் 18.5 ஐ விட குறைவாக உள்ளோரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களில் சித்தி பெறாத மாணவர்களின் எண்ணிக்கை அதிகம். இதன் காரணமாக துறைசார் நிபுணத்துவம் வாய்ந்தவர்களுக்காக அடுத்த 10, 20 ஆண்டுகளுக்கு அயல் பிரதேசங்களில் இருந்து பெறவேண்டிய நிலைமை ஏற்பட்டு உள்ளது.

4. சமூக விரோதச் செயல்கள், இளவயதுத் திருமணம் அதிகரித்துக் காணப்படல்.




| | Below 3000 | 3001-5000 | 5,001-10,000 | 10001-25000 | 25001-50000 | 500001-100000 | above100000 |
|---|---|---|---|---|---|---|---|
| 2013 | 36 | 26 | 24 | 10 | 4 | 0 | 0 |
| 2014 | 35 | 23 | 24 | 12 | 7 | 0 | 0 |
| 2015 | 27 | 21.25 | 25.40 | 20.08 | 5.73 | 0.49 | 0.05 |

## தென்னை

16230 ஹெக்டயர் நிலப்பரப்பில் தென்னை பயிரிடப்படுவதுடன் 163 பெரிய தென்னந்தோட்டங்களைக் கொண்டதால் இலங்கையிலுள்ள மூன்றாவது பெரிய பிரதேச செயலாளர் பிரிவாக தென்னந்தோட்டங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. யுத்தத்தின் காரணமாக அழிந்த தென்னைவளம் மீளக்குடியமர்வின் பின் மீள் நடுகை ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் வடமாகாணத்தின் முக்கிய தென்னை பயிரிடப்படும் பிரதேசமாக உள்ளதால் பிராந்திய அலுவலகமும் தென்னை ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகூட வசதிகளும் இப்பிரிவில் உருவாக்கப்படல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் தென்னைச் செய்கையாளர்கள் 1 ஏக்கர் நிலத்தில் 64 தென்னைகள் இருப்பதை உறுதி செய்வதுடன் ஊடுபயிர்ச் செய்கை. தென்னையின் கீழான மரக்கறி உற்பத்தி, ஆடு மாடு கோழி என்பவற்றின் வளர்ப்பையும் ஒருங்கிணைத்து அந்நிலத்திலிருந்து உச்ச பயனைப் பெறுவதற்கு ஒருங்கிணைந்த பண்ணையாக மாற்ற வேண்டும்.

## உப்பளம்

குறிஞ்சாத்தீவு உப்பளம் புனரமைக்கப்பட்டு உப்பு உற்பத்தி ஆரம்பிக்கப்படும் சந்தர்ப்பத்தில் பிரதேசத்தை சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதுடன் இதன் பக்க விளைவுகளை கொண்டு பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மீள ஆரம்பிக்கவும் வாய்ப்பு ஏற்படும்.

## பிரதேச சபையின் வீதிகள்

414km நீளமான பிரதேச சபையின் வீதிகள் கிராம மக்களின் நேரடி வாழ்க்கையுடன் தொடர்புபட்டுள்ளன. இவ்வீதிகள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் உள்ளதனால் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தவும் மூலப்பொருட்களை இலகுவில் பெற்றுக் கொள்ளவும் சிரமப்படுவதுடன், கர்ப்பிணிகள், சிறுவர்கள், வயோதிபர்கள் போக்குவரத்துச் செய்வதில் காலதாமதமும் ஏற்படுகிறது. மேலும் அக்கிராமத்துக்குக் கிடைக்க வேண்டிய விரிவாக்கற் சேவைகளும் தாமதமாகவே சென்றடைகின்றன.

## மிதிவெடியுள்ள இடங்கள்

முகமாலை, இத்தாவில், வேம்பொடுகேணி ஆகிய கிராம அலுவலகப் பிரிவுகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் இடம்பெற்றுவருவதால் 200 குடும்பங்களுக்கு மேல் வேறு இடங்களில் வசித்து வருகின்றனர். இக் கண்ணிவெடி அகற்றும் பிரதேசங்களில் பாரிய தென்னந்தோட்டங்கள், விவசாய நிலங்கள் உள்ளதுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவிடப்பட்ட குளங்கள், கால்வாய்கள் மூலம் மாரிகாலங்களில் வெள்ளமும் கோடைகாலங்களில் வரட்சியும் ஏற்படுகின்றன. இப்பிரதேசம் விடுவிக்கப்பட இன்னும் 4 வருடங்கள் தேவைப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## கால்வாய்களும், குளங்களும்

நீண்டகாலமாக புனரமைக்கப்படாத குளங்களும், வாய்க்கால்களும் வெள்ளத்தையும் வரட்சியையும் ஏற்படுத்துவதுன் பயிரழிவையும் ஏற்படுத்துகிறது. அத்துடன் அனர்த்த நிவாரணமாக பெருந்தொகைப் பணம் செலவிடப்படுகிறது.

இவை முன்னுரிமை அடிப்படையில் அனர்த்த தவிர்ப்பு ஏற்பாட்டு புனரமைக்கப்பட வேண்டும்.

## வயல் நிலங்கள்

942 ஹெக்டயர் வயல் நிலங்கள் இருந்த போதும் 460 ஹெக்டயர் நிலமே தற்போது பயிரிடப்பட்டு வருபவை. ஏனைய நிலங்கள் உவர் நிலங்களாக இருப்பதுன் குறிப்பிட்டளவு நிலம் பற்றைகள், மரங்களுடன் காணப்படுகின்றன. உவர் நிலங்களை உமியைப் பயன்படுத்தியும் உவர்நிலங்களுக்கு ஏற்றதென சிபாரிசு செய்யப்பட்ட நெல்லினங்களை விதைப்பதன் மூலமும் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தலாம். மரங்கள் பற்றைகளை அகற்றுவதன் மூலம் எஞ்சிய நிலங்களையும் பயன்படுத்திக் கொள்ள முடியும். மேலும் பெறுமதி சேர் பொருட்களாக சந்தைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## மேட்டுநிலப் பயிர்செய்கை

500 ஹெக்டயர் நிலம் மேட்டுநிலப் பயிர்ச் செய்கைக்கு உகந்ததாகக் காணப்பட்ட போதிலும் பயிரிடப்படும் நிலப்பரப்பின் அளவை சரியான புள்ளி விபரங்கள் இல்லாததனால் உறுதியாக கூறமுடியவில்லை. எனினும் மண் பரிசோதனை செய்வதன் மூலமும் பயிர்செய்யப்படக் கூடிய பயிர்வகைகளை இனங்காண்பதன் மூலமும் அப்பயிர்களுக்குத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையான பசளையை சிபாரிசு செய்யப்பட்ட அளவில் பயன்படுத்துவதன் மூலம் இலாபத்தை அதிகரித்துக் கொள்வதுடன் நீர்மாசுறுதலைக் கட்டுப்படுத்தவும் முடியும்.

## குடும்பங்களின் வருமானத்தை அதிகரித்தல்

சூரியன் உதிக்கும் போதும் மறையும் போதும் தனது கைகளுக்கு காசு கிடைக்க வேண்டும் என நினைக்கின்ற குடும்பங்களில் பலர் குறைந்த வருமானம் பெறுகின்றவர்களாக உள்ளனர். இம் மனப்பாங்கை தவறு என கூறமுடியாவிட்டாலும் இவ்வாறான நிலையை அடைவதற்கு தேவையான அடிப்படையான விடயங்களை செய்வதற்கு முன்வராமையே மிகப் பெரும் சவாலாக உள்ள விடயம். தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு தயார் நிலையில் வைத்திருக்க வேண்டியதுடன் வேலை தேடி வெளியிடங்களுக்கு சென்று வருவதில் விருப்பமின்மையுடன் உரிய தொழிற்பயிற்சியைப் பெறுவதிலும் ஆர்வம் காட்டாதுள்ளமை இக் குடும்பங்களின் வருமானத்தை உயர்த்துவதில் பெரும் சவாலாக உள்ளது. யுத்தத்தின் காரணமாகவும் இடம் பெயர்வின் காரணமாகவும் பொருளாதாரச் சுமையுடன் இருந்த மக்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்களில் மக்கள் பங்களிப்பாக ஒரு தொகையினை பயன்படுத்தி வீட்டினை பூர்த்தி செய்தமையால் ஏற்பட்ட கடன் சுமையும் சேர்ந்து நிதி நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளனர். இம் மக்கள் ஒரு முதலீட்டைச் செய்து அதனூடாக வரும் வருமானத்தைப் பெற எடுக்கும் கால தாமதத்தை சகித்துக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

இதன் காரணமாக உடனடியாக பணம் பெறக் கூடிய வழிகளை மட்டுமே நாடுவதால் அவ்வாறான வழிகள் எல்லோருக்கும் கிடைக்கும் சந்தர்ப்பம் அரிதாக உள்ள நிலையில் இவர்களுடைய நிலையை மேம்படுத்துவதற்கு அம் மக்களினுடைய ஒத்துழைப்பை பெறுவது மிகவும் அவசியமாக உள்ளது.

இதில் பின்வரும் விடயங்கள் முக்கிய கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது.

1. அவர்களது உடனடித்தேவையைப் பூர்த்தி செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இக் குடும்ப அங்கத்தவருடைய போஷாக்கு மேம்பாடு

3. தேவையான தொழிற்பயிற்சிகளை வழங்கல்

4. பொருத்தமான உள்ளீடுகளை வழங்கல்

5. சந்தைப்படுத்தல் வசதிகளை ஏற்படுத்தல்

6. குடும்ப வருமானத்தை பலவழிகளிலும் அதிகரித்தல்.

இதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

1. ஒவ்வொரு பயனாளிக்கும் அவரது நிலை, தகுதி தராதரம் என்பவற்றுக்கமைய பொருத்தமான தொழிற்பயிற்சியை வழங்குதல்

2. குடும்ப வரவு செலவுத் திட்டத்தைப் பேணவும் நடைமுறைப்படுத்தவும் ஊக்கமளித்தல்

3. குறைந்த செலவில் நிறையுணவைப் பெறும் வழிகளை நடைமுறைப்படுத்தல்

4. தற்போது மேற்கொள்ளும் குடும்ப உற்பத்திப் பொருட்களின் வகைகளையும் எண்ணிக்கைகளையும் அதிகரிப்பதுடன் தரக் கட்டுப்பாட்டுக்குட்படுத்தி சந்தைப் படுத்தலையும் ஊக்குவித்தல்

5. நிலம் அற்ற குடும்பங்களுக்கு நிலம் வழங்குதல்

6. வீடு அமைந்துள்ள நிலத்தையும் மற்றைய நிலங்களையும் திட்டமிட்ட ரீதியில் உச்சப் பயன் பாட்டுக்கு உட்படுத்தல்

1. தற்போது செய்யப்பட்டு வரும் விவசாயம் கால்நடை வளர்ப்பு மற்றும் உற்பத்திகளுக்கு தேவையான விஸ்தரிப்பை ஏற்படுத்தல்.

2. அக் குடும்ப உறுப்பினர்களால் மேற்கொள்ள கூடிய தொழில் முயற்சிகளை ஆரம்பித்து ஊக்குவித்தல்

3. தேனீ வளர்ப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. வியாபார நோக்கத்துக்காக பறவைகள் விலங்குகள் வளர்த்தல்

5. உணவுத் தேவையை பூர்த்தி செய்தவற்கான விவசாய மற்றும் கால்நடை வளர்ப்பு

6. வியாபார முகாமைத்துவம் மற்றும் சந்தைப் படுத்தல் பயிற்சிகள் வழங்கல்

7. சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தல்

8. நீண்ட கால முதலீடுகளை மேற்கொள்ளல்

1. தென்னை, மரமுந்திரிகை பயிரிடுதல்
2. பழமரக் கன்றுகளைப் பயிரிடுதல்
3. ஒவ்வொரு குடும்பத்துக்கும் 10 பர்மா தேக்கு மரக் கன்றுகளை வழங்கல். இவை 7 வருடங்களின் பின் பலகைத் தேவைக்காக வெட்டி விற்கப்படும் போது அக் குடும்பம் பெரும் தொகைப் பணத்தைப் பெற்றுக் கொள்வதுடன் இக் குடும்பங்கள் இதனை சுழற்சி முறையில் நடும் போது சூழல் பாதுகாப்புக்கும் உதவும்.

7. நல்லின கறவைப் பசுக்களை வளர்த்தல் ஏற்கனவே வளர்க்கின்ற உள்ளூர் மாடுகளை பாலுற்பத்தி அதிகரிக்கும் வகையில் தரமுயர்த்தும் நடவடிக்கைகளை கால் நடை உற்பத்தி திணைக்களத்தின் மூலமாக மேற்கொள்ளல். இதன் மூலம் நெய், தயிர் போன்ற உற்பத்திகளின் அளவை அதிகரிப்பதன் மூலம் மேலதிக வருமானத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

8. தற்போது மேற்கொள்ளப்படும் உற்பத்திப் பொருட்களின் தரத்தை மேம்படுத்துவதற்கான புதிய இயந்திர வசதிகளையும் தொழினுட்ப அறிவையும் பெற்றுக் கொடுத்தல்.

சமூக அபிவிருத்தி

1.மகளிர் சிறுவர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.போதைப் பொருள் மதுப்பாவனையை கட்டுப்படுத்தல்

மேற்குறிப்பிட்ட விடயங்களை ஒருங்கிணைத்து செயற்படுத்துவதன் மூலம் வரலாற்று ரீதியாகவும் சூழலியல் ரீதியாகவும் முக்கியம் பெறும் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தை அபிவிருத்தி செய்து மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முடியும்.

**சி.அருட்செல்வன்**
உதவித் திட்டமிடல் பணிப்பாளர்.
பிரதேச செயலகம்.
பச்சிலைப்பள்ளி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கையில் அரசாங்க அதிபர் வில்லியம் துவைனம் காலம் ஒரு வரலாற்று பார்வை

வட இலங்கையிலே பிரித்தானியருடைய ஆட்சி எவ்வாறாக அமைந்திருந்தது என மேலோட்டமாக நம்மில் பலர் அறிந்த வைத்திருக்கின்ற போதும், ஆழமாக அறிந்து வைத்திருப்போர் எம்மில் சிலராகவே இருப்பர். அதிலும் குறிப்பாக அரசாங்க அதிபர் வில்லியம் துவைனம் என்பவர் யார் என்பது எம்மில் பலருக்கு புரியாத புதிராகவே அமைந்திருக்கின்றது.

அதாவது இந்து சமுத்திரத்தின் முத்து என சிறப்பிக்கப்படும் இலங்கைத்தீவின் வரலாற்றில் பிரித்தானியருடைய ஆட்சிக்காலம் மிக முக்கியத்துவமானதாகும். அந்த வகையில் 1796ம் ஆண்டு தொடக்கம் 1948ம் ஆண்டு வரை பிரித்தானியர் இலங்கையில் தமது ஆதிக்கத்தினை நிலைநாட்டியிருந்தனர். அக்கால கட்ட வரலாற்றில் வட இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட நிர்வாக செயற்றிட்டத்தில் 1869-1896ம் ஆண்டு வரை கவர்னராக இருந்த வில்லியம் துவைனம் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட நிர்வாகச் செயற்றிட்டங்கள் மறக்கப்பட முடியாததாகும். அந்த வகையில் இக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் நிர்வாகம், திணைக்களங்களின் வளர்ச்சி, உள்ளூராட்சி முறைகள், பொருளாதார நிர்வாகம், சுகாதார அபிவிருத்தி செயற்றிட்டங்கள், கல்வி செயற்றிட்டங்கள், சமயம், குடித்தொகை மதிப்பீட்டு, பட்டின அபிவிருத்தி, நீதி நிர்வாகம், போக்குவரத்து அபிவிருத்தி என பல்வேறு செயற்றிட்டங்கள் வாயிலாக துவைனம் தன்னை தமிழ் மக்களின் மனங்களில் நிலைநாட்டிக் கொண்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் பிரித்தானியர் கைப்பற்றிய இலங்கையின் கரையோரப் பகுதி முழுவதையும் 1796-1798 வரை ஆங்கில கிழக்கிந்திய வர்த்தக கம்பனியின் ஆட்சி இடம்பெற்றது. பின்னர் 1798-1802வரை இரட்டை ஆட்சி முறை இடம்பெற்றதைத் தொடர்ந்து 1802 முதல் முடியாட்சி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது ஆகும்.

இவ்வாறாக பிரித்தானியருடைய ஆட்சிக்காலத்தில் வட பகுதிக்கு அரசாங்க அதிபராக கடமையாற்றிய வில்லியம் துவைனம் அவர்கள் 1869ம் ஆண்டு புரட்டாசி மாதம் 15ம் திகதி அரசாங்க அதிபராக பதவி ஏற்றுக்கொண்டார். எனினும் 1848ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1ம் திகதியில் இருந்து உதவி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டு டைக்குடன் இணைந்து தனது பணிகளை ஆற்றத் தொடங்கியமை சுட்டிக்காட்டத்தக்கது ஆகும். இவர் தனது காலகட்டத்தில் அரசியல், சமய, சமூக, பொருளாதார, கல்வி சார் நிர்வாக நடவடிக்கைகளை சிறப்பாக மேற் கொண்டார். துவைனம் தனது காலகட்டத்திலே யாழ்ப்பாணக் கச்சேரியில் தலைமை முதலியாராகப் பதவி வகித்த சந்திரசேகர முதலியாரை தனது வழிகாட்டியாகவும், தத்துவாசிரியனாகவும் கொண்டு செயற்பட்டார். துவைனத்தின் சிறப்பான செயலைப் பாராட்டி 1884ம் ஆண்டு ஆடி மாதம் 21ம் திகதி C.M.W பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை இவரது வரலாற்றில் முக்கிய விடயமாகும்.

அது மட்டுமல்லாது 1895.11.09ம் திகதி அரசாங்க அதிபர் துவைனம் சேவையில் இணைந்து ஐம்பது ஆண்டுகள் பூர்த்தியானதை முன்னிட்டு அவரது பொன் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்தக்காலத்தில் பிரிட்டனின் குடியேற்ற நாடுகளில் கடமையாற்றிய குடியியல் உத்தியோகத்தர்கள் எவரும் இவ்வாறு பொன் விழா கொண்டாடவில்லை என இந்து சாதனம் பத்திரிகை தெரிவித்துள்ளது. இதனை தொடர்ந்து 01.01.1896ம் ஆண்டு அரசாங்க அதிபர் வில்லியம் துவைனத்திற்கு பிரிட்டிஸ் அரசு சேர் பட்டம் வழங்கி கௌரவித்தது. அன்று முதல் அரசாங்க அதிபர் சேர் வில்லியம் துவைனம் என அழைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு யாழ்ப்பாண சமூகத்திற்கு என்று பல்வேறு பணியாற்றிய துவைனம் 1896ம் ஆண்டு ஜனவரி 16ம் திகதி ஓய்வு பெற்றார். இவர் இருபத்தி ஏழு ஆண்டுகள் அரசாங்க அதிபராக பதவி வகித்தவர். 12 ஆளுனர்களின் கீழ் பணியாற்றியுள்ளார். யாழ்ப்பாணத்தை பற்றி நன்கு அறிந்து வைத்திருந்த துவைனம் சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள், ஏழைகள் அனைவருக்கும் பாரபட்சம் இன்றி சேவையாற்றியதாக குறிப்புக்கள் கூறுகின்றன. துவைனம் துரையின் பங்களிப்பு ஓய்வு பெற்றதுடன் நின்றுவிடாது அதன் பின் இவர் யாழ்ப்பாண Y.M.C.A தலைவராக இருந்தார். மற்றும் 1848ம் ஆண்டு யாழ்ப்பாணம் பொது நூலாக் குழுவின் தலைவராகவும் இருந்ததுடன். ஆளுநர் பியோக்கினால் ஆரம்பிக்கப்பட்ட விவசாய அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும் இருந்து பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது ஆகும்.

தனது 18 ஆவது வயதில் சேவையில் இணைந்து கொண்ட துவைனம் ஆரம்பத்தில் 12000 ரூபாவையும் ஓய்வு பெறும் போது 18000 ரூபாவையும் வருடாந்த சம்பளமாக பெற்றமையும் குறிப்பிடத்தக்கது ஆகும். ஓய்வு பெற்ற பின் இவர் 12.333 ரூபாவை ஓய்வூதியமாகவும் சேர் துவைனம் பெற்றார். இவர் ஓய்வு பெற்ற பின்னர் கடற்கரை வீதியிலிருந்த ஆல்பேர்ட் வில்லாவில் தனது ஓய்வுக்காலத்தை கழித்து வந்தார். துவைனம் குடியேற்ற நாடுகளின் செயலாளர் உட்பட பலராலும் பாராட்டப்பட்ட இவர் சிறந்த நிர்வாகியாக விளங்கினார்.

இதில் துவைனத்தின் காலப்பகுதியாகிய 1869-1896 வரையாக இடம்பெற்ற முக்கிய விடயங்கள் பற்றி பார்க்கும் போது, காலப்போக்கில் துவைனம் காலத்தில் இடம்பெற்ற அரச நிர்வாக செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டன, அதாவது நிர்வாகப் பொறுப்புக்கள் அரசாங்க அதிகாரிகளின் கீழ்விடப்பட்டது. அவர் ஆள்பதியின் பிரதிநிதியைப் போலிருந்து ஆட்சிப் பொறுப்பை வகித்தார். அவர் முன்னர் திசாவைகள் செய்த கடமைகளைச் செய்தார் எனலாம். அவரது அலுவலகம் மாகாணத்தலைநகரங்களில் அமைந்திருக்கின்றது. அவர் இறைவரி, பயிர்ச்செய்கை முடிசார் நிலம் முதலிய பற்றிய விடயங்களைக் கவனித்ததோடு அரசாங்கத்தின் கோரிக்கைகளை மக்களுக்கும் மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைகளையும் கோரிக்கைகளையும் அரசாங்கத்திற்கும் தெரிவிக்கும் கடமைகளையும் உடையவராயிருந்தார். காலகதியில் பாலனவேலைகள் அதிகரித்ததைத் தொடர்ந்து ஒவ்வொரு மாகாணமும் சில மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு உதவி அரசாங்க அதிகாரிகளின் கீழ் விடப்பட்டன. இவ்விதமாக முன்னர் 19மாவட்டப் பிரிவுகள் காணப்பட்டன. மாவட்டங்களின் உட்பிரிவுகளான கோறளைப்பற்று முதலியன றட்டேமகாத்மயா முதலியார் முதலிய கிராமத் தலைமைக்காரர்களின் கீழ் (தமிழ்ப்பகுதியில் மணியகாரன் உடையார். விதானை வன்னியர்) விடப்பட்டன.

அத்துடன் நாட்டின் அபிவிருத்தி வேலைகளைத் துரிதப்படுத்துவதற்கும் ஒவ்வொரு வகையான வேலையிலும் அதிக கவனம் செலுத்துவதற்குமாகப் பல புதிய திணைக்களங்கள் நிறுவப்படலாயின. முன்பிருந்த திணைக்களங்களும் புனரமைக்கப்பட்டன. இவ்வாறு பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் புதிதாக நிறுவப்பட்ட திணைக்களங்கள் பொதுக் கல்வித்திணைக்களம். அளவையாளர் நாயகத்தின் திணைக்களம் குடியியல் மருத்துவத் திணைக்களம் தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களம் புகையிரதத் திணைக்களம் துறைமுகத் திணைக்களம், சுங்கத்திணைக்களம் காட்டுத்திணைக்களம், நிலக்குடியேற்றத் திணைக்களம்' ஆகியனவாகும். இக்காலத்தில் புனரமைக்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்ட திணைக்களங்கள் பொதுவேலைத் திணைக்களம் தாவர ஆராய்ச்சித் திணைக்களம் (இது பின்னர் பயிர்ச்செய்கைத் திணைக்களமாகியது) நில அளவீட்டுத் திணைக்களம் பொலிஸ் திணைக்களம் ஆகியனவாகும்.

இவற்றுடன் நின்றுவிடாது மேற்குறிப்பிட்ட முறையில் மத்திய அரசாங்க ஆட்சிவிருத்தியடைந்த அதேசமயம் அரசாங்கம் உள்ளூராட்சித் துறையின் விருத்தியில் அரசாங்கம் முதல்முதல் எடுத்த நடவடிக்கை வீதிக்குழுக்களை அமைத்ததாகும். ஆள்பதி ரொறிங்ரனின் காலத்தில் (1848இல்) வீதிச்சட்டம் நிறைவேற்றப்பட்டததைத் தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட சிலரைக் கொண்ட வீதிக்குழுக்கள் நாடெங்கிலும் நிறுவப்பட்டன. இதற்குப் பின்னர் ஆள்பதி வாட் காலத்தில் கம்சபாக்கள் புனரமைக்கப்பட்டதும் றொபின்சன் காலத்தில் (1871இல்) அவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிபாலன அதிகாரங்களைப் பெற்று முழுப்பொலிவுடன் சேவையாற்றத் தொடங்கியதும் நீர்ப்பாசன வேலைகளைக் கவனிக்கவும் கிராம வாழ்க்கையைச் சீர்ப்படுத்தவும் பட்டினங்களில் உள்ள நீதிமன்றுகளில் தொடரப்பட்ட பல்லாயிரக்கணக்கான வழக்குகளை நிறுத்தவும் பிரதானிகள் தலைமைக்காரர்கள் முதலியோரின் அனுசரணையுடன் கிராமத்தில் உள்ளூராட்சித் துறை அமைதியை ஏற்படுத்தவும் கம்சபாக்களின் புனருத்தரணம் உதவியது. மேலும் அவற்றின் புனரமைப்பு பண்டைக்காலம் முதல் கிராம பாலனத்துடன் ஒன்றியிருந்த ஒரு உள்ளூராட்சி முறையை மீண்டும் உறுதிப்படுத்துவதாயிற்று.

மற்றும் இக்கால நிர்வாகச் செயற்றிட்டத்தில் ஓவ்வொரு பகுதிக்கும் என நியமிக்கப்பட்ட கவர்னர்கள் ஆகியோர் நாட்டின் ஆட்சிப்பொறுப்பை ஏற்று அதை நல்வழியில் நடத்தினர். அந்த வகையில் கவர்னர் வில்லியம் துவைனம் அவர்களின் ஆட்சிக்காலம் அமைதிக்கும், முன்னேற்றத்திற்கும், நாட்டின் பொது அபிவிருத்திக்கும் பெயர் பெற்றது. குறிப்பாக குடியானவர்களின் நலன்களைப் பேணுவதிலும், நீர்ப்பாசனம் பயிர்ச்செய்கை முதலியவற்றை விருத்தி செய்வதிலும் கிராம ஆட்சிமுறைகளைப் புனருத்தானம் செய்வதிலும் மற்றும் போக்குவரத்து சுகாதார கல்வி வசதிகளைப் பெருக்குவதிலும் அவர்கள் அரும்பணியாற்றினார். இதன் விளைவாகக் குடியானவர்களின் நிலைமை சீரடையவும் ஆட்சி பலமடையவும் நாடு விருத்தியடையவும் வழி பிறந்தது என்றால் யாரும் மறுத்து விட முடியாது.

இக் காலப்பகுதியில் பொருளாதார நிர்வாக செயற்றிட்டத்தில் இடம் பெற்ற நீர்ப்பாசன அபிவிருத்திகள் பற்றி நோக்கும் போது துவைனம் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன் சற்று மந்த நிலை காணப்பட்டது. அதாவது 1848 ஆண்டுக் கலகத்திற்கு விவசாயிகளின் வீழ்ச்சியும் ஒரு காரணம் என்பதை அரசாங்கம் அறிவதற்கு அதிக காலம் செல்லவில்லை. எனவே ஆள்பதி வாட் பதவியேற்றவுடன் நாட்டைச் சுற்றிப் பார்த்து அதன் நிலைமையையும் தேவைகளையும் நேரடியாகக் கண்டறிந்தார். அத்துடன் நாட்டின் முதுகெலும்பைப் போலமைந்த விவசாயிகளின் நன்மைக்காக நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கவும் தூர்ந்துபோன குளங்களைப் புதுப்பிக்கவும் வேண்டிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவர் காலத்தில் நாட்டின் நிதி நிலைமையும் சீராயிருந்தபடியால் அவர் தமது திட்டங்களை நிறைவேற்றக் கூடியதாயிருந்தது.

அதன் விளைவாக பொருளாதார நிர்வாகச் செயற்றிட்டத்தில் கோடனுக்குப் பின் ஆள்பதியாகி லவ்லொக் அவர்கள் 1892இல் தானியவரியை நீக்கிவிட்டு அதை ஈடுசெய்யுமுகமாக ஆண்டுதோறும் 20,000 ரூபாயை நீர்ப்பாசனத்திற்காக ஒதுக்கீடு செய்தார். அவரைத் தொடர்ந்து றிட்ஜ்வே காலத்தில் நீர்ப்பாசன வேலைகள் மீண்டும் அதிக கவனத்தைப் பெற்றன. இவ்வாறு 1850க்கும் 1910க்குமிடையில் நாடெங்கிலும் பல்லாயிரக்கணக்கான சிறு நீர்ப்பாசனத் திட்டங்களும் 20க்கு மேற்பட்ட பெரிய திட்டங்களும் திருத்தியமைக்கப்பட்டதனால் விவசாயம் மீண்டும் எழுச்சி பெற்றதில் வியப்பில்லை. விடப்பட்டது. இவ்வாறு கிராம சபைகளும் கிராம நீதிமன்றங்களும் புனரமைக்கப்பட்டதைத் தொடர்ந்து கிராமிய வாழ்வு புத்துயிர் பெற்றது. குற்றச்செயல்கள் குறைந்தன. பயிர்ச்செய்கை விருத்தியடைந்தது. மக்களின் வாழ்க்கையில் மீண்டும் மலர்ச்சி ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது ஆகும்.

துவைனம் கால சமயம் பற்றிப் பார்த்தால் போர்த்துக்கீசர் காலம் முதலாகப் பௌத்த இந்து சமயங்கள் நலிவுற்று வந்திருக்கின்றன. போர்த்துக்கீசர் பல இந்த பௌத்த கோவில்களை இடித்தழித்ததோடு அவற்றின் சொத்துக்களையும் அபகரித்தனர். ஒல்லாந்தர் பகிரங்கமான மத வழிபாடுகளுக்கு தடை செய்தனர். ஆனால் பிரித்தானியர் அனைவரும் வழிபாட்டுச் சுதந்திரம் வழங்கியிருந்தனர். ஆயினும் அவர்கள் காலத்தில் இங்கு வந்த வெஸ்லியன், பப்ரிஸ்ற், அங்கிலிக்கன், முதலிய பல வகையான மிஸன்கள் பாடசாலைகள் மூலமும் துண்டுப்பிரசுரங்கள் சஞ்சிகைகள் மூலமும் மத பிரசாரம் செய்து பெருந்தொகையானோரை (குறிப்பாக கரையோரப் பகுதிகளில்) மதமாற்றம் செய்து வந்தனர். அக்காலத்தில் பௌத்த சமயம் இந்து சமயம் ஆகியவற்றை பின்பற்றுதல் மதிப்பு குறைவானதாக கருதப்பட்டது. இந்நிலைமை பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை நிலவியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது பிரித்தானியர் காலத்தின் முற்பகுதியில் சைவசமயமும் மங்கியிருந்தது. அக்காலத்தில் ஆங்கிலக்கல்வியைப் பெறுவதற்காக பலர் கிறிஸ்தவர்களாக மாறினர். இவர்களிற் சிலர் கல்விகற்ற பின்னர் மீண்டும் சைவர்களாயினர். அதேசமயம் பலர் கிறிஸ்தவ மத குருமாரின் போதனைகளினால் மதம் மாறியிருந்தனர். அக்காலத்தில் 'கிறிஸ்தவர் எனின் மதிப்பும், சைவர் எனின் இழுக்கும் நிலவியது. பல்வேறு ஆலயங்கள் செமினறிகள் அமைக்கப்பட்டு சமயம் பரப்பப்பட்டது. அதற்கென குருமார்களிடையே தனியான ஒரு நிர்வாக கட்டமைப்பு உருவாக்கப்பட்டிருந்தது.

மேற்குறிப்பிட்டவாறு பத்தொன்பதாம் நூற்றாண்டில் பொருளாதாரத் துறையிலும் கல்வித்துறையிலும் மற்றும் போக்குவரத்து வர்த்தகம் முதலியவற்றிலும் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாக இலங்கையில் புதியதொரு சமுதாயம் உருவாகியது. அதில் சாதிகளின் செல்வாக்கும் கட்டுப்பாடும் தளர்த்து செல்வம் கல்வி என்பவற்றின் அடிப்படையில் புதியவர்க்க வேறுபாடுகள் உண்டாயின. அத்துடன் தொழிலாளிகள் முதலாளிகள் மத்திய வகுப்பினர் எனும் பல்வேறு வகுப்பினர் புதியதாகத் தோன்றினார்.மேலும் இது காலவரை கிணற்றுத்தவளையைப் போல வாழ்ந்த மக்கள் போக்குவரத்து வசதிகளின் விருத்தியின் விளைவாக நாட்டின் பல பகுதிகளுக்கு செல்லவும் ஒருவரோடொருவர் தொடர்புகொள்ளவும் பிரதேச உள்ளூர் வேறுபாடுகளை மறக்கவும் நாட்டின் நலனுக்காக ஒன்றுபட்டு உழைக்கவும் போராடவும் முடிந்தது.

இவ்வாறாக சேர்வில்லியம் துவைனம் அவர்கள் வாழ்ந்து வருகின்ற காலப்பகுதியில் 1897ம் ஆண்டு 4ம் மாதம் 9ம் திகதி அவருடைய மனைவி லேடிதுவைனம் காலமானார். மனைவி காலமான செய்தி கேட்டு துவைனம் கொழும்பில் இருந்து உடனடியாக யாழ்ப்பாணம் திரும்பி மனைவியின் மரணச்சடங்கில் கலந்து கொண்டார். லேடி துவைனத்தின் இறுதி ஊர்வலத்தில் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டனர். ஒரு துயரம் முடிவதற்குள் அடுத்த துயரம் வருவதுபோல் 1898 நவம்பர் மாதம் சேர்துவைனத்தின் மூத்தமகன் பச்சிலைப்பள்ளியில் மலேரியா காய்ச்சலால் மரணமானார் என்பது வருத்தத்திற்கு உரியவிடயம் ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவைனம் அவர்கள் யாழ் குடாநாட்டிற்கு விட்டுச் சென்ற அரும்பெரும் பொருட்கள் பற்றியும் கூறுவது அவசியமானது. அதாவது ஓய்வு பெற்ற அரசாங்க அதிபர் சேர் வில்லியம் துவைனம் தான் சேகரித்த பொருட்களைப் பரியோவான் கல்லூரிக்கு அன்பளிப்பு செய்து அதைவைத்து அரும்பொருட்காட்சியாக ஒன்றை உருவாக்குமாறு கூறினார். அவரது 91 வது பிறந்ததினத்தன்று அவரது மகள் றோரா துவைனம் அரும் பொருள் காட்சியத்திற்கான அடிக்கல்லை நாட்டினார். துவைனம் ஞாபகார்த்த அரும் பொருள் காட்சியத்திலிருந்த துவைனத்தின் சேகரிப்பை தாம் யாழ்ப்பாண அரும்பொருட்காட்சியத்தின் அன்பளிப்புச் செய்து விட்டார். என்று அங்கிலிக்கன் திருச்சபையின் யாழ் மாவட்ட ஆயர் நேசகுமார் தெரிவித்தார். இன்று நாவலர் வீதியில் உள்ள யாழ் தொல் பொருட் காட்சியத்தில் வில்லியம் துவைனத்தால் சேகரித்து கொடுக்கப்பட்ட ஏராளமான பொருட்களை நாம் காணமுடிகின்றது. இதனால் துவைனம் துரைக்கு என்றும் நாம் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம்.

**திருமதி. றாஜேந்திரன் டிவ்னா**
**முது தத்துவமானி மாணவி.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தனையும் வேண்டும்

தாய் தந்தை சொல்லை மதித்திடல் வேண்டும்
தரணியில் அவரைப் போற்றிடல் வேண்டும்
வாய்தனில் மெய்யே வந்திடல் வேண்டும்
வார்த்தைகள் இதமாய் இருத்தல் வேண்டும்

கல்வியைத் தெளிவாய்க் கற்றிடல் வேண்டும்
கற்றதன் படியே ஒழுகிடல் வேண்டும்
நல்லதோர் தொழிலைப் பெற்றிடல் வேண்டும்
நாளும் அதனில் உயர்ந்திடல் வேண்டும்

திறமைக்கு ஏற்பவே பதவிகள் வேண்டும்
பதவிக்கு ஏற்பக் கடமைகள் வேண்டும்
உறவுக்கு ஏற்பவே உரிமைகள் வேண்டும்
ஊடலும் அதனில் இருத்தல் வேண்டும்

கடமையைச் சரியாய் செய்திடல் வேண்டும்
காண்போர் மனதைக் கவரல் வேண்டும்
மடைமை இன்றியே இருத்தல் வேண்டும்
மாண்பினை என்றும் காத்திடல் வேண்டும

பணியிடந் தன்னில் பணிகள் வேண்டும்
பாங்குடன் அதனைச் செய்திடல் வேண்டும்
பணித்திடத் தகவோர் அமர்ந்திடல் வேண்டும்
பலதும் அவர்க்குத் தெரிந்திடல் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மையாய் பணியை செய்திடல் வேண்டும்
நெஞ்சம் தன்னிற் தூய்மை வேண்டும்
வேர்வை சிந்தியே உழைத்திடல் வேண்டும்
வேற்றுமை தன்னை மறந்திடல் வேண்டும்

கணக்கைச் சரியாய்க் காட்டிடல் வேண்டும்
கலக்கம் தன்னைத் தவிர்த்தல் வேண்டும்
பிணக்குகள் உடனே முடித்தல் வேண்டும்
பிழைகள் தன்னைத் தவிர்த்தல் வேண்டும்

மற்றவர் திறமை மதித்திடல் வேண்டும்
மாண்புடன் அவரை நடாத்த வேண்டும்
ஒற்றுமைப் பலனை உணர்த்திடல் வேண்டும்
ஒளிர்வை விளைவாய் பெற்றிடல் வேண்டும்

அடுத்தவன் திறமை மதித்திடல் வேண்டும்
ஆணவம் தன்னைத் தவிர்த்தல் வேண்டும்
வெடுக்கெனும் பேச்சைத் தவிர்த்தல் வேண்டும்
வெறுப்பை விலக்கப் பழகிடல் வேண்டும்

இத்தனை செயலும் இடம் பெறல் வேண்டும்
ஈங்கதன் பலனை அடைதல் வேண்டும்
சத்தியம் செயலில் இருத்தல் வேண்டும்
சகத்தில் நன்மை பெற்றிடல் வேண்டும்.

- **வயலூரான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்வில் மகத்தான விழுமியங்கள்

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது அதிலும் அரிது கூன், குருடு, செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது என்ற ஔவையாரின் கூற்றுக்கிணங்க எந்தவித குறைகளுமின்றி அவனியில் மானிடராக அவதரித்த ஒவ்வொருவரும் மனித வாழ்வில் விழுமியப் பண்புகளை கடைப்பிடித்து ஒழுக வேண்டியது முக்கியமானதொன்றாகும்.

மனிதனை மனிதத்தன்மை நிறைந்த மனிதனாக்கும் பெறுமதி மிக்க வாழ்க்கைப் பண்புகளே விழுமியப் பண்பாகும். அந்த வகையில் மனித விழுமியப் பண்புகளாக உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல், பெரியோரைக் கனம் பண்ணுதல், உண்மை பேசுதல், நேர்மை ஒற்றுமையாக இருத்தல், பொறுமை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

வாய்மை, உண்மை பேசுதலை எடுத்துக் கொண்டால் தன் நாட்டை இழந்து தன் மனைவி மக்களைக் கூட சுடுகாட்டில் நிற்கும் போது கூட அரிச்சந்திரன் உண்மை பேசத் தவறவில்லை. அது போல் புறாவுக்காக உயிரைக் கொடுக்க துணிந்த சிபிச்சக்கரவர்த்தியை எடுத்துக் கொண்டால் உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவதன் மகத்துவம் உணரப்படுகின்றது.

பொறுமைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக கிரிஷாம்பாளைக் குறிப்பிடலாம். இவர் சிறு வயதிலேயே பொறுமையைக் கடைப்பிடிக்க பழகியதால் இவரது பொறுமைக்கு பரிசாக பொற்காசு கிடைத்தது. நாம் ஒருவருக்கு நன்றி செய்யும் பொழுது அதை எவ்வித பிரதிபலனும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பாராது செய்ய வேண்டும் என்பதும் நாம் பிறருக்கு உதவி செய்யும் போது காலம், நேரம், தகுதி நோக்காது ஆற்றவேண்டுமென்பதும், ஒருவர் காலத்தால் செய்த உதவி அது அளவில் சிறியதாயினும் பெரிதாக மதித்து பாராட்டுதல் வேண்டுமென்பது மக்கட் பண்பில் உயர்ந்த நாகரீமாகும்.

ஒருவர் கல்வியினாலோ பதவியினாலோ, அதிகாரத்தினாலோ பெரும் பொருளினாலோ ஈட்ட முடியாத பெருஞ் செல்வம் ஒழுக்கம் ஆகும். எனவே தான் ஒழுக்கமில்லாதவனை உயிரிழந்தவனாக கருதப்படுகின்றது. நாம் ஒருவருக்கு ஒரு பொருளை கொடுப்பதை விட முகமலர்ச்சியோடு மன நிறைவுடன் கூறும் இனிய சொற்களே சிறந்ததாகும்.

முல்லைக் கொடிக்காக தனது தேரையே கொடுத்தான் பாரி அது போல் கர்ணனை எடுத்துக் கொண்டால் கொடைத்தன்மைக்கே பெருமை சேர்த்தவன் எனக் கூறலாம்.

எனவே இத்தகைய பல விழுமியப் பண்புகளை நாம் கடைப்பிடித்து வாழும் போது நல்லதோர் சமூகத்தை கட்டியெழுப்பலாம் 'நல்லதோர் வீணை செய்து அதனை நலங் கெட புழுதியில் எறிவதுண்டோ'' என்பதற்கிணங்க மண்ணில் பிறந்த நாம்'' தோன்றில் புகழோடு தோன்றுக அகதிலர் தோன்றாமை நன்று'' என்றபடி சமூகத்தில் விழுமியத்தின் தேவையானது இன்றைய உலகில் அவசியமானதொன்றாக காணப்படுகின்றது.

இத்தகைய தார்மீகப் பண்புகளை நாம் கட்டியெழுப்பி குடும்பம், பாடசாலை சமூகம் என நல்லதோர் சமூகத்தை கட்டியெழுப்பில் வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வோமாக.

**க.இசைவாணி**
**இராஜகணபதி அறநெறிப் பாடசாலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலுவலக கலாசாரம்

இப்புவிதனில் மானிடப் பிறப்பெடுத்த ஒவ்வொரு ஜீவனுக்கும், கலாசாரமானது நன்னெறி மிக்கவர்களாகவும் பண்புள்ளவர்களாகவும் ஒழுக்கசீலர்களாகவும் பக்குவப்படுத்தி நீதி நெறி பிறழாது வாழ வழிப்படுத்துவதற்கு எவ்வளவு அவசியமானதோ அதனை விடவும் அவசியமானது அலுவலக கலாசாரமாகும். இது அலுவலர்களைப் பக்குவப்படுத்தி அவர்கள் மகிழ்வுடனும், உற்சாகத்துடனும், கடமையாற்றவும், வினைதிறனும் பயனுறுதியும் கொண்டதுமான மக்கள் சேவையினை வழங்குவதற்கு உறுதுணையாகின்றது.

பல்வேறு குணாதிசயங்கள், வேறுபட்ட குடும்பப் பின்னணிகள், வளர்ப்பு முறைகள் என்பவற்றைக் கொண்டவர்களின் சங்கமமே அலுவலகம் ஆகும். அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது விருப்பு வெறுப்புக்களுக்கேற்ப அலுவலகம் இயங்க வேண்டுமென விரும்புவார்களேயானால் அலுவலகம் தனது இலக்கினை அடையாது ஈற்றில் ஒரு குழப்ப நிலையே உருவாகும். எனவே தான் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய பொதுவான முறைமை ஒன்று இருக்க வேண்டியது அவசியமாகின்றது. அனைத்து அலுவலகங்களிலும் பொதுவான விதிகளும் நடைமுறைகளும் பின்பற்றப்படுகின்ற போதிலும் அலுவலக கலாசாரம் என்பது அலுவலகத்திற்கு அலுவலகம் வேறுபட்டே காணப்படும் ஒவ்வொரு அலுவலகமும் ஒவ்வொரு கலாசாரத்தை தன்னகத்தே கொண்டு விளங்கும்.

அலுவலக கலாசாரம் என்பது உள்ளக ஒருமைப்படுத்தல், வெளியகப் பிரச்சினைகளை எதிர்த்து சமாளிக்கக்கூடிய விதத்தில் ஒரு குழுவினால் உருவாக்கப்பட்ட, கண்டறியப்பட்ட அபிவிருத்தி செய்யப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்கள் என்பவற்றை புதிதாக வருபவர் சரியான முறையில் கூர்ந்து கவனிப்பதற்கும் நினைப்பதற்கும், உணர்வதற்கும், பெறுமதியானதும் போதுமானதுமான ஒரு நியமம் என்கிறார் Edgar Schein என்பவர். அதாவது ஒரு அலுவலகத்தில் ஏற்கனவே உள்ள வழமையான நடைமுறைகள் விதிகள், நிறுவன நடத்தை வடிவங்கள், விழா நிகழ்வுகள், பகிடிகள்,வரலாற்று பதிவுகள், கதைகள், உடையலங்காரங்கள் என்பவற்றை அந்நிறுவனத்தின் உள் அங்கத்தவர்களே விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கும். விடயங்கள் ஒரு அலுவலகத்தில் காணப்படுவது போல் வேறு ஒரு அலுவலகத்தில் காணப்படமாட்டாது.

வேலை செய்வதற்கேற்ற ஒரு சிறந்த அலுவலக கலாசாரம் பின்பற்றப்படுகின்ற அலுவலகம் ஒன்றிலே கடமையாற்றுவதற்கு எல்லோரும் விரும்புவார்கள். இவ்வாறான அலுவலகத்திற்கு வருகை தரும் சேவை நாடிகளும் திருப்தியுறுவர். அலுவலக நோக்கமும் இலகுவாக அடையப் பெற்று அலுவலக நன்மதிப்பு உயர்வடையும்.

ஒருவர் புதிய நியமனம் அல்லது இடமாற்றம் ஒன்றின் மூலம் ஒரு நிறுவனத்தில் இணையும் போது தம்முடன் தான் கற்றுக் கொண்ட நம்பிக்கைகள், தான் வளர்க்கப்பட்ட சூழலின் விழுமியங்கள் என்பவற்றுடன் வருகிறார். அதே நேரம் அலுவலகமானது ஏற்கனவே ஒரு அலுவலக கலாசாரத்துடன் இயங்கிக் கொண்டிருக்கும். இந்நிலையில் புதிதாக வருகை தந்த அலுவலர் தாம் வெற்றி பெறுவதற்கு நிறுவனத்தின் நியமங்கள், மரபுகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை கூர்ந்து கவனித்து கற்க வேண்டிய அவசியமேற்படுகின்றது.

எல்லோராலும் விரும்பத்தக்க சிறந்த அலுவலக கலாசாரத்தினை ஒரு அலுவலகத்தில் கட்டியெழுப்புவது என்பது இலகுவான காரியமன்று ஏற்கனவே பலவீனமான அலுவலக கலாசாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அலுவலகத்திற்குப் புதிதாக வரும் அதிகாரி ஒரு பலமான அலுவலக கலாசாரத்தினை கட்டியெழுப்புவதில் சவாலினை சந்திக்க நேரிடலாம் அதோடு தெளிந்த மன நிலையுடன் புதிதாக வரும் அலுவலர்களால் மன உளைச்சலுக்கு ஆளாகும் ஆபத்து நிலை கூட உருவாகலாம். எனவே ஒவ்வொரு அலுவலகமும் சிறந்த அலுவலக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாரத்தினை உருவாக்கி பின்பற்றுவது அவசியமாகின்றது. இதனை சிறந்த தாக்குவதில் ஒரு தனிமனிதரது சிந்தனை, அமைவிடம், கிடைக்கப் பெறும் வளங்கள் என்பன செல்வாக்கு செலுத்தும் காரணிகளாகின்றன. இத்தகைய உத்திகளைப் பின்பற்றி அநேக அரச அலுவலகங்களில் அலுவலக கலாசாரம் அபிவிருத்தியடைந்து வலுப்பெற்று மிளிர்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

அலுவலகங்களில் பலமான அலுவலக கலாசாரத்தினை மேம்படுத்துவதற்கான பயனுள்ள விடயங்கள் சிலவற்றை நோக்குவோமேயானால்,

01. அலுவலகங்களில் பின்பற்றப்படும் விதிமுறைகளை கிரமமாக கடைப்பிடித்தல்.

02. அலுவலர்கள் மத்தியில் நன் மதிப்பு ஏற்படுவதற்காக சக ஊழியர்களுக்கு வேலைகளில் வழிகாட்டுதல், குழுவாக சேர்ந்து வேலைகளை நிறைவேற்றுதல்,

03. தமது கடமைகளுக்குரிய விடயங்கள் அனைத்தையும் அறிந்து வைத்திருத்தலும் இற்றைவரைப்படுத்தலும்.

04. அடிக்கடி காலதாமதமாக வருவது, காலதாமதத்திற்கு காரணம் சொல்வது, அடிக்கடி விடுமுறை எடுப்பது, இவைகள் அலுவலர் மீது அவநம்பிக்கை ஏற்படுத்துமாதலால் இவற்றினை தவிர்த்து நடத்தல். கூடுமானவரை முற்கூட்டியே விடுமுறை அனுமதி பெற்றுக் கொள்ளல்.

05. சிறுசிறு நல விசாரிப்புக்கள், நகைச்சுவைப்பரிமாற்றம் இவைகளும் அவசியமே.

06. எல்லாம் தெரிந்தவர் என்று ஒருவரோ எதுவும் தெரியாதவர் என்று ஒருவரோ இல்லை. குறைவாகத் தெரிந்தவர், கூடுதலாகத் தெரிந்தவர் என்று மட்டுமே உண்டு ஆதலால் தெரிந்தவர்கள் தெரியாதவர்களுக்காக சொல்லிக் கொடுத்து வழிநடாத்துதல், தெரியாதவர்கள் தெரிந்தவர்களிடம் தயக்கமின்றி கேட்டுத் தெரிந்துகொள்ளுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. எந்த நேரத்திலும் எந்த தகவலாக இருந்தாலும் இவரை அணுகினால் பெற்றுக் கொள்ளலாம் என்ற அபிப்பிராயத்தை நிர்வாகத்திற்கு ஏற்படும் படி நடந்து கொள்ளல்.

08. அலுவலகத்திற்கு எல்லோரும் ஒரே சீரான திறமை, அனுபவம் பெற்றிருக்க வாய்ப்பில்லை. சிறு சிறு குறைகளுக்கெல்லாம் சத்தம் போட்டு பெரிதுபடுத்தாமல் அமைதியான முறையில் நீங்கள் செய்தவற்றில் சிலசில தவறுகள் உள்ளன என்று விளங்கப்படுத்துங்கள் என்றுமே அவர் உங்களை மறக்க மாட்டார்.

09. இணையத்தள பயன்பாடு இன்றியமையாதது இருப்பினும் தனிப்பட்ட பயன்பாட்டுக்கு அதிக நேரத்தை எடுத்துக் கொள்வது தவிர்க்கப்படுதல்.

10. மேலதிகாரிகளின் மேற்பார்வையின்றியே தமக்குரிய கடமைகளை தாமாக உணர்ந்து அர்ப்பணிப்புடன் கடமையாற்றுதல். ஒருவருக்கொருவர் உதவி செய்யும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளல். சகபணியாளர்களை குறை கூறுதல், விமர்சித்தல் ஆகியவற்றை தவிர்த்தல், ஒவ்வொருவரையும் மனிதராக மதித்து நடக்கும் பண்பினை வளர்த்துக் கொள்ளல்.

11. பொதுமக்களது வரிப்பணத்திலிருந்தே எமக்குரிய சம்பளம் வழங்கப்படுகிறது என்பதை நன்குணர்ந்து அவர்களுக்கான சேவையினை விருப்புடனும் முனைப்புடனும் விரைந்து வழங்குதல். ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

எனவே வேற்றுமையிலும் ஒற்றுமை காத்து சிறந்ததோர் அலுவலக கலாசாரம் பேணி அலுவலகத்தினை வெறும் வேலைபார்க்கும் இடமாக மட்டும் கருதாது தினம் தினம் புதிது புனையும் பல்கலைக்கழகமாக மாற்றி அமைதியானதும் மகிழ்வானதுமான வேலைச் சூழலினை ஏற்படுத்தி வாழ்வினிலே வெற்றி பெற்று உயர்வோமாக.

**மா.அருந்தவராணி**
நிர்வாக அலுவலர்.
பிரதேச செயலகம்.
பச்சிலைப்பள்ளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி என்றும் ஆனந்தமே

மார்கழி மாதக் குளிரில் அதிகாலை கண் விழித்த தூரிகா வெண்பனியை மறையச் செய்த வண்ணம் ஒவ்வொரு இருளுக்குப் பின்னும் ஒவ்வொரு விடியல் உள்ளது என்பதனை எடுத்துக் கூறுவது போன்ற ஆதவன் மெல்ல மெல்லதனது செவ்வொளிக்கதிர்களை பூமித்தாய் மீது பரவுவதைப் பார்த்துக் கொண்டிருந்தபோது அவளது நினைவுகள் கடந்த காலத்தை நோக்கிச் சென்றன.

சந்தோஷம் என்ற சொல்லிற்கு பொருள் என்னவென்று யாரும் கேட்டுத் தெரிந்து கொள்ளாமலே பார்த்த உடனேயே தெரிந்து கொள்ளக் கூடியவாறு தான் தூரிகாவின் குடும்பமும் தாத்தா, பாட்டி, பெரியம்மா. பெரியப்பா, சித்தி, சித்தப்பா, மாமா, அத்தை, அவர்களுடைய பிள்ளைகள் என்று ஒட்டு மொத்த சொந்தங்களுடனும் ஒரே வீட்டில் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார்கள் எப்போதும் அவ் வீட்டில் கலகலப்பிற்கு பஞ்சமில்லை. அன்றும் அது போலவே எல்லோரும் சேர்ந்து சுற்றுலா செல்வது தொடர்பாக கலந்தாலோசித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது தூரிகா க.பொ.த உயர்தரத்தில் கல்வி கற்றுக் கொண்டிந்தாள்.அவளுக்கு உயர்தர பரீட்சைக்கான முன்னோடி பரீட்சைகள் இருப்பதனால் அச்சுற்றுலாவிற்கு வரமுடியாது என்றும் அவர்கள் எல்லோரையும் சந்தோஷமாக சென்று வரும்படி கூறினாள். ஆனால் அவர்கள் அனைவரும் அவளும் வந்தால் தான் நாங்களும் செல்வோம் என்ற கூறினார்கள். தூரிகாவோ தான் ஏற்கனவே பாடசாலை மூலம் சென்ற கல்விச் சுற்றுலாவில் அவ்விடங்களை பார்வையிட்டு விட்டேன். மறுபடியும் நான் வருவதிலும் பார்க்க இங்கிருந்து உயர்தர பரீட்சைக்குத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயர் செய்கிறேன் என்று கூறினாள். அவளது கருத்தை ஏற்று அனைவரும் மகிழ்ச்சியுடனும் அவளை தங்களது தூரத்து உறவினரான பெரியம்மாவுடன் விட்டு விட்டு தங்களது இறுதிப் பயணம் என்பதை அறியாமலேயே புறப்பட்டுச் சென்றார்கள்.

அவர்கள் அனைவரையும் சந்தோஷமாக வழியனுப்பி விட்டு வந்த தூரிகா தனது பாடங்களில் மூழ்கிப் போனாள். அவ்வாறு ஒருவாரம் உருண்டோடிச் சென்றது. அன்று அவளது சொந்தங்கள் எல்லாம் சுற்றுலாவில் இருந்து திரும்பி வந்து விடுவார்கள் என்று ஆவலுடனும் சந்தோஷத்துடனும் தொலைக்காட்சியில் செய்திகளைப் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு சுற்றுலாவிற்குச் சென்று கொண்டிருந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் ஒருவிபத்தில் இறந்து விட்டார்கள் என்று அவர்கள் பயணித்த வாகனத்தையும் காட்டினார்கள். அச் செய்தியை பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு தலையில் இடி விழுந்ததைப் போன்ற உணர்வு ஏற்பட்டது. யாருக்காக ஆவலாக காத்துக் கொண்டிருந்தாளோ அவர்கள் யாரும் திரும்பி வரமுடியாத இடத்திற்குச் சென்று விட்டார்கள். அவளுக்கு என்ன செய்வது? ஏது செய்வது? என்று தெரியவில்லை. எல்லாமே இருட்டாகவே காட்சியளித்தது. அப்படியே தரையில் மயங்கிச் சரிந்தாள். அவள் கண் விழித்துப் பார்த்த போது அவளது உறவினர்கள், அயலவர்கள், தெரிந்தவர்கள் என்று எல்லோரும் வந்திருந்தார்கள். அவளுக்கு ஆறுதல் கூறினார்கள், தேற்றினார்கள். இறந்தவர்களுக்கான காரியங்களும் நிறைவேற்றப்பட்டன. தூரிகா எல்லாவற்றையும் ஒரு இயந்திரத்தனத்துடன் செய்து முடித்தாள். இறுதிச் சடங்கிற்கு வந்தவர்களில் ஒரு சிலரை தவிர மற்றைய அனைவரும் கிளம்பிச் சென்றார்கள். இனி எனக்காக இந்த உலகத்தில் யாரிருக்கிறார்கள் நான் அனாதை ஆகிவிட்டேன். எல்லோருடனும் சேர்ந்து நானும் சென்றிருந்தால் இந் நிலை ஏற்பட்டிருக்காது அவர்களுடன் சேர்ந்து நானும் இறந்திருப்பேன் இனி நான் என்ன செய்வது என் வாழ்க்கையே இருள் சூழ்ந்து விட்டதே யாராவது ஒருவராவது இருந்திருக்கலாமே எல்லோரும் என்னை தனியாக தவிக்க விட்டுச் சென்று விட்டார்களே என்று கதறி அழுது கொண்டே இருந்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவளது இந்நிலையினைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல் அவளது ஏனைய உறவினர்கள் சிலர் தங்களுக்கும் அவளது குடும்பத்தினரின் சொத்தில் பங்குள்ளது என்று தமக்கிடையே சண்டையிட்டுக் கொண்டார்கள். தூரிகாவிற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. சொந்தங்கள் யாரும் இல்லை. இப்போது சொத்திற்கும் சண்டை பிடிக்கிறார்கள். எனது எதிர்காலம் என்னவாகுமோ என்று தெரியாமல் திகைத்து நின்றாள்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அவளது தூரத்து உறவினரான பெரியம்மா அப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு கண்டு தன்னோடு இவளை அழைத்துச் சென்று அவரது வீட்டில் வைத்திருந்தார்கள். அவளுக்கு ஆறுதல் கூறி அவளை உயர்தரப் பரீட்சை எழுத வைத்தார். சிறந்த முறையில் தேர்ச்சி பெற்ற தூரிகா பல்கலைக்கழகம் சென்று அவளது குடும்பத்தினரின் ஆசைப்படி பட்டப்படிப்பை படித்து முடித்தாள். அதன் பின்னர் அவளது படிப்பிற்கேற்ப நல்ல வேலையில் சேர்ந்தாள்.

அப்பொழுது தான் அவள் வேலை செய்யும் பிரிவில் அவளுக்கு அர்ஜீன் அறிமுகமானான். எல்லோருடனும் பழகுவதைப் போலவே தூரிகா அவனுடனும் இயல்பாகப் பழகினாள். இவ்வாறு சில மாதங்கள் சென்றதும் திடீரென ஒரு நாள் அர்ஜீன் தூரிகாவை திருமணம் செய்ய விரும்புவதாக கூறினான். இதைக் கேட்ட தூரிகா என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் குழம்பி நின்றாள். ஒரு குடும்பத்தால் ஏற்பட்ட வலி போதும் மறுபடியும் அதே வலியை அனுபவிக்க முடியாது என்று அவள் தனக்காக ஒரு குடும்பத்தை அமைத்துக் கொள்வதையே மறந்து விட்டிருந்தாள்.

அவள் மற்றவர்களுடைய அனுதாபத்திற்கு ஆளாகி விடுவோம் என்று வேலை செய்யும் இடத்தில் தன்னைப் பற்றி எதையுமே கூறவில்லை. அதனால் அர்ஜீனுக்கும் தன்னைப் பற்றி தெரிந்து கொள்ள வாய்ப்பிருக்காது. நான் யாருமில்லாதவள் என்று தெரிந்து கொண்டால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தன்னை திருமணம் செய்து கொள்வானா என பல யோசனைகளுடன் வீட்டிற்கு சென்றாள்.

அவளது யோசனை படிந்த முகத்தைப் பார்த்து அவளது பெரியம்மா என்ன நடந்தது என்று விசாரித்தார். அவளும் தன்னோடு வேலைபார்க்கும் அர்ஜீன் என்பவர் தன்னை திருமணம் செய்து கொள்ள விரும்புவதாக கூறியதாக சொன்னாள்.அதைக் கேட்ட அவளது பெரியம்மா மகிழ்ச்சியடைந்தார். எனக்குப் பிறகு உன்னை யார் கவனித்துக் கொள்வார்கள், உனக்காக ஒரு குடும்பம் இருந்தால் தான் நல்லதென்று கூறினார். தூரிகா பயந்தவாறு தான் யோசித்தவற்றை கூறினாள். அவளது பெரியம்மா அப்படியெதுவும் நடக்காது. அர்ஜீனை அவளது பெற்றோருடன் வந்து தன்னைப் பார்க்கும்படி அவளிடம் கூறினாள்.அதன்படி அர்ஜீன் தனது தாயாருடன் வந்து தூரிகாவின் பெரியம்மாவைச் சந்தித்து திருமணத்திற்கு சம்மதம் வாங்கினான்.

தூரிகாவின் விருப்பப்படி அவர்களது திருமணம் மிகவும் எளிமையாக நடைபெற்றது. மாதங்கள் பல சென்றன. அவர்களுக்கு அழகான ஆண்குழந்தை ஒன்று பிறந்தது. அக்குழந்தைக்கு தான் இழந்த சந்தோசம் அனைத்தையும் மீட்டுத் தந்ததால் சந்தோஸ் என்று பெயரிட்டாள். தூரிகாவிற்கு தான் இழந்த குடும்பம் மறுபடியும் கிடைத்து விட்டது என்று மிகவும் சந்தோசமாக இருந்தாள். அச் சந்தோசம் தொடர்ந்து நீடிக்காது என்று அவள் அறியவில்லை.

திடீரென அவளது கணவனினதும் மாமியாரினதும் நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்பட்டது.எதற்கெடுத்தாலும் பேசுவதும் அடிப்பதும் என்று அவளை மிகவும் துன்புறுத்தினார்கள். அன்பாக தானே இருந்தார்கள் ஏன் இப்போது இப்படி செய்கின்றார்கள் என்று எதுவுமே தெரியவில்லை. நான் ஏதாவது தவறு செய்து விட்டேனா என்று அவர்களிடம் கேட்டாள். அவர்களோ அவளது மகனை நம்மிடம் விட்டு விட்டு எங்காவது சென்று விடு என்று இரக்கமில்லாமல் சொன்னார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் இப்படி சொல்கின்றார்கள் என்று கேட்டவளுக்கு அவர்கள் கூறிய பதில் இடியாக இறங்கியது.

அவளது கணவனும் அவரது தாயாரும் தனது தூரத்து உறவினர்கள் என்றும் அவர்கள் அவளுடைய சொத்திற்காகவே திருமணம் செய்து கொண்டதாகவும் அச் சொத்து முழுவதும் தூரிகாவிற்கு பிறக்கப்போகும் குழந்தைக்கே சட்டப்படி உரிமை என அவளுடைய பெரியம்மா எழுதியிருந்தார் என்றும் அதனால் தான் அவளை திருமணம் செய்ததாகவும் கூறினார்கள். அர்ஜீனுக்கு ஏற்கனவே திருமணமாகி இரண்டு குழந்தைகள் இருப்பதாகவும் அவளது மகனையும் சொத்துக்களையும் எடுத்துக் கொண்டு சென்று விட்டார்கள். இதையெல்லாம் கேட்ட தூரிகா துடி துடித்துப் போய் விட்டாள்.

எல்லாமே சொத்துக்காக நடத்திய நாடகமா? நான் இழந்த சந்தோசம் கிடைக்கும் என்று எவ்வளவு பெரிய பிழையை செய்து விட்டேன் இதற்கு நான் திருமணம் செய்யாமலே இருந்திருக்கலாம் என்று அழுதாள். அவள் வேதனைப்படுவதைப் பார்த்து இரக்கமில்லாமல் அவர்களிருவரும் சிரித்துக் கொண்டிருந்தார்கள். அவளுக்கு தான் ஏமாற்றப்படுவதைப் நினைத்து என்ன செய்வதென்று புரியாமல் யாரிடமும் பேசுவதை நிறுத்தி விட்டாள். இயல்பாக செய்ய வேண்டிய அனைத்தையும் மறந்து விட்டாள்.

இதனைக் காரணம் காட்டி அவளுக்கு மனநிலை சரியில்லையென்று வைத்தியசாலையில் சேர்த்தார்கள்.அங்கே அவள் கர்ப்பமாக இருப்பதாக கூறினார்கள். இதைக் கேட்ட அவளது கணவனும், மாமியாரும் அவள் நடத்தை சரியில்லாதவள் என்றும் இக்குழந்தை தங்களுடைய குழந்தை இல்லையென்றும் கூறினார்கள் இதைக்கேட்ட தூரிகா அனலிட்ட புழுப் போலத் துடித்தாள். தான் அப்படிப்பட்ட பெண் இல்லையென்று அழுது கெஞ்சி மன்றாடினாள். ஆனால் அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கு செல்வது என்ன செய்வது என்று அறியாமல் திகைத்து நின்றவளை அரவணைத்து ஏற்றுக் கொண்டது அன்னை இல்லம். அங்கிருந்தவர்கள் எல்லோரும் அவளுடன் அன்பாகப் பழகினார்கள். படிப்படியாக அவளும் எல்லோருடனும் இயல்பாகப் பழகினாள். சில மாதங்களில் அவளுக்கு ஒரு அழகிய பெண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு துளசி என்று பெயரிட்டாள். இல்லத்தில் இருப்பவர்களின் அன்பான அரவணைப்பால் தான் இழந்த அனைத்தையும் மீண்டும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற மன உறுதியை அடைந்தாள். அதன்படி சட்டத்தின் உதவியுடன் தனது மகனையும் சொத்துக்களையும் பெற்றுக் கொண்டதுடன் தனது பெண்குழந்தையும், அவளும் பரிசுத்தமானவர்கள் என்பதையும் நிரூபித்து அவளை ஏமாற்றியவர்களுக்கும் தண்டனையும் வாங்கிக் கொடுத்தாள்.

அதன் பின்னர் தன்னுடைய அனைத்துச் சொத்துக்களையும் தன்னைப் போலவே கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், கணவனை இழந்த பெண்களுக்காக ஒரு இல்லத்தை உருவாக்குவதற்காகவும் அவர்களுக்காக வேலை வழங்குவதற்காக ஒரு நிறுவனத்தை உருவாக்குவதற்காகவும் பயன்படுத்தினாள். தனது இரு குழந்தைகளுடனும் அங்கேயே வசித்து வந்தாள். அவளது முயற்சியின் விளைவால் அவளால் உருவாக்கப்பட்ட அன்பு இல்லமும் ஆடைகளில் அலங்கார வேலை செய்து கொடுக்கும் நிறுவனமும் உயர்ந்து நிற்கின்றது.

அன்று தனது குடும்பத்தினருடன் இருக்கும் போது அடைந்த மகிழ்ச்சியை விட இன்று மற்றவர்களுக்காக எந்த வித பலனையும் எதிர்பார்க்காமல் செய்யும் உதவியும், அதேபோன்று அவர்கள் அனைவரும் தன்மீது வைத்திருக்கும் அன்பும் எவ்வளவு சந்தோசத்தைக் கொடுக்கின்றது என்று ஆச்சரியப்பட்டாள். இப்படியொரு சந்தோசத்தைக் கொடுப்பதற்காகவே இறைவன் அத்தகைய கசப்பான நிகழ்வுகளை என் வாழ்க்கையில் நிகழ்த்தியிருக்கின்றார் என்று யோசித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தவளைப் பார்த்து அவளது இரு குழந்தைகளும் அவளது கைகளைப் பற்றி காலையில் விழித்துக் கொண்டே கனவு காண்கிறீர்களே என கல கலவென சிரித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சிரிப்பதையே இமைக்காமல் ஆசையுடன் பார்த்த வண்ணம் ஒவ்வொரு இருளுக்குப் பின்னும் ஒவ்வொரு விடியல் உள்ளது போல எல்லாத் துன்பத்திற்குப் பின்னாடியும் ஒரு இன்பம் இருக்கும். அது போலவே என் வாழ்க்கையிலும் இத்தனை நிகழ்வுகள் நிகழ்ந்திருக்கின்றன. என்னுடைய மலை போன்ற துயரங்களெல்லாம் பனி போல விலகிவிட்டன. இனி எப்போதும் என்வாழ்வில் ஆனந்தமே என்று தூரிகாவும் அவர்களுடன் சேர்ந்து சிரிக்க ஆரம்பித்தாள்.

இ.அனுஷா
முருகந்தநகர்.
பளை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றாட வாழ்க்கையில் தொழில்நுட்பம் ஏற்படுத்தும் தாக்கங்கள்

தொழில்நுட்பம் என்பது அறிவியல் முறையையும் பொறியியல் கருவிகளையும் பயன்படுத்தி நுணுக்கமான வேலைகள் மூலம் திட்டமிடல்களையும், வரையீடுகளையும் செயற்படுத்துவதாகும் அதாவது விஞ்ஞான அறிவு முறைமைகளையும் பொறியியல் ரீதியான இயந்திரங்களையும் கொண்டு நுணுக்கமான வேலைகளை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்படும் செயற்பாடுகளை உள்ளடக்கியதாகும். இவை தொழிற்சாலைகளின் செய்முறைகளில் முழுமையாக அறிவாற்றலை பயன்படுத்தும் செயற்பாடுகளை கொண்டதாகும். தொழில்நுட்பமானது அறிவியல் துறைகளினும், பொறியியல் துறைகளினுடாக மிக நெருங்கிய தொடர்பினை கொண்டு காணப்படுகின்றது.

தொழில்நுட்பமானது வளங்களினதும், விழுமியங்களினதும் பாவனை தொடர்பான ஓர் வடிவமாகவே உள்ளது. அனைத்து மனித சமூகத்திலும் காணப்படுகின்றது அதாவது ஆரம்பகால சமூகத்தில் அவர்களது அறிவு திறன் முதலானவற்றைப் பயன்படுத்துவதன் மூலமாகத் தொழில்நுட்ப ரீதியான சிந்தனைகள் உருவாக்கம் பெற்றன. அவை ஆரம்பகால சமூகம் முதற் கொண்டு தற்கால சமூகமான நவீன சமூகம் வரையும் பரந்தளவில் சேவையை நல்குவதாக காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் தொழில்நுட்பமானது மனிதர்களினுடைய அன்றாட வாழ்கையில் ஏற்படுத்துகின்ற சாதகமான தாக்கங்கள் பற்றி நோக்குகின்ற போது தொழில்நுட்பங்கள் மனிதர்களுடைய வேலைப் பழுவைக் குறைத்து விட்ட நிலையை அவதானிக்க முடிகின்றது. உதாரணமாக விவசாயத்துறையை எடுத்துக் கொண்டால் பசுமைப் புரட்சியின் விளைவினால் இயந்திர வலு பயன்படுத்தப்பட்டு மக்களுக்கு தேவையான உற்பத்திப் பொருட்ளை குறைந்த நேரத்தில் அதிகளவாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. இதனால் மனிதர்களினுடைய தேவைகள் உடனுக்குடன் நிறைவேற காரணமாயிருந்தன. அத்துடன் நவீனத்துவத்தின் தோற்றத்தினால் பாரம்பரிய தொழில்களில் இருந்து விடுபட்டு இலத்திரனியல் சார் தொழில்களில் மனிதர்கள் ஈடுபடுவதானால் உயர் ஊதியம் கிடைக்கின்றது. அதனால் அவர்களது வாழ்க்கைத்தரம் உயர்வடைகின்றது. அத்துடன் நேர விரயங்கள் தொழிநுட்ப விருத்தியினால் குறைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான விடயங்கள் சமூகத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்தக் காரணமாக உள்ளன. ஆகவே தான் தொழிநுட்பமானது மனிதர்களுடைய அன்றாட வாழ்க்கையில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது . என்பதை ஏற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

அது மட்டுமல்லாமல் தொழிநுட்பங்களினால் தகவல் தொடர்பு சாதனங்கள் அதிகரித்துள்ளன. உலகமயமாதல் செய்முறை மூலமாக உலகம் சுருங்கி விட்ட நிலைமை காணப்படுகின்றது. உடனுக்குடன் தகவல் பரிமாற்றங்கள் ஏற்படவும் இலகுவாக அமைகின்றது அதுமட்டுமல்லாமல் மின் வணிகம் மூலமாக உடனுக்குடன் தேவையான பொருட்களை பெற்றுக் கொள்வதும் இலத்திரன் அட்டைகளைப் பயன்படுத்துவதும் அதிகரித்து காணப்படுகிறது. அவைபோன்ற செயற்பாடுகள் தொழினுட்ப வளர்ச்சியின் மூலமாகவே கிடைக்கப் பெற்றன. ஆகவே மனிதர்களினுடைய அன்றாட வாழ்க்கையில் சாதகமான தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றமையை எடுத்துரைக்கின்றது. அத்துடன் தொழினுட்ப ரீதியாக ஏற்பட்டு வருகின்ற காரணமாக சமூக நலத்திட்டங்களில் வளர்ச்சி நிலை காணப்படுகின்றது. அதாவது கல்வியை எடுத்துக் கொண்டால் இலத்திரனியல் கல்விக்கு முக்கிய இடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்பட்டு வருகின்றது. இதன் மூலமாக தகவல்கள் திரட்டப்படுகின்றன. இவை போன்ற பல்வேறு செயற்பாடுகள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. இதனால் மக்கள் பல்வேறு நன்மைகளை அடைய ஏதுவாக அமைகின்றது. இவை தொழினுட்பத்தினுடைய சாதகமான தாக்கங்களே ஆகும்.

இயற்கையாக ஏற்படுத்துகின்ற இயற்கை அனர்த்தங்களை எதிர்வு கூறக்கூடிய தொழிநுட்பங்கள் இன்று வளர்ச்சியடைந்துள்ளன. அதாவது புவிநடுக்கங்கள், சுனாமி, சூறாவளி மற்றும் வெள்ளப் பெருக்குகள் முதலான அனர்த்தங்களிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான வசதிகள் வளர்ச்சியடைந்துள்ளன. உதாரணமாக புவி நடுக்கங்களை அளவிடுகின்ற தொழினுட்பங்கள் மற்றும் சுனாமி எச்சரிக்கை மையங்கள் முதலானவை மக்களுக்கான சேவையை வழங்குகின்றன பசுபிக் கடற் பிராந்தியத்தில் காணப்படுகின்ற சுனாமி எச்சரிக்கை மையத்திலிருந்து அதனுடைய அங்கத்துவ நாடுகளுக்கு உடனடியாக தகவல்கள் வழங்கப்படுகின்றன இவற்றினைக் கவனத்தில் கொண்டு பாதுகாப்பான இடங்களிற்கு மக்கள் நகர ஏதுவாக அமைகின்றது. இவ்வாறான தொழில்நுட்பங்கள் மனிதர்களினுடைய அன்றாட வாழ்க்கைக்கு சாதகமான தாக்கங்களையே ஏற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அடுத்து மனிதனுடைய வாழ்க்கையில் தொழில்நுட்பத்தினால் ஏற்படுகின்ற பாதகமான தொடர்பாக நோக்குகின்றபோது தொழிநுட்பங்கள் மானிட நலனுக்காக மட்டும் உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்படவில்லை. மானுட அழிவிற்கான ஆரம்பமாகவே தொழினுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில் அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்வதில் தொழில்நுட்பத்தின் பாதிப்பு அதிகமாகவே காணப்படுகின்றது. அதாவது அடிப்டைத் தேவைகளில் ஒன்றான உணவைப் பற்றி நோக்குகின்ற போது உணவுகளின் தன்மைகளிலும் தயாரிப்பு முறைகளிலும் பல்வேறு இராசாயனப் பதார்தங்களின் சேர்க்கை காணப்படுகின்றது. மனிதருடைய அவசர கதி வாழ்க்கையில் துரித உணவு என்பதன் பங்கு அதிகமாகவே காணப்படுகின்றது. இவை மனிதனின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற அதேவேளை அதனால் பலவேறு பாதகமான விளைவுகளும் ஏற்பட ஏதுவாக அமைகின்றது. இவ் உணவுப் பொருட்களை கொள்வனவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்பவர்கள் பெரும்பாலும் அதனுள் உள்ளெடுக்கப்பட்டுள்ள பதார்த்தங்கள் தொடர்பாக கவனிக்காது பல்வேறு உடலியல் தாக்கங்களை ஏற்படுத்துகின்றது உதாரணமாக எண்ணெய் கொழுப்பு சீனி மற்றும் அமிலப் பதார்த்த சேர்க்கை , அஜின மோல்டின் சேர்க்கை போன்றவை மனித உடல் நலத்திற்கு தீங்கு விளைவிப்பவையாக இருப்பதால், மனிதர்களினுடைய அன்றாட வாழ்க்கையில் பாதிப்பு ஏற்படுத்துவதுடன் மனிதர்களை ஓர் நலிவு நிலைக்கு இட்டுச் செல்லும் செயற்பாடுகளும் இடம்பெறுகின்றது.

அடுத்து தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக தகவல் தொடர்பாடல் துறை பெருவளர்ச்சி அடைந்திருந்தாலும் அதன் மூலமாக மனிதர்களுடைய அன்றாட வாழ்க்கையில் கடுமையான பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தி வருகின்றது.

தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக மனிதர்களுடைய வாழ்க்கை முறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதாவது ஆரம்ப காலங்களில் காணப்பட்ட கூட்டுக்குடும்ப மரபுகள் மாற்றமடைந்து தனிக்குடும்ப மரபுகள் வளர்ச்சியடைந்து வருகின்றமையானது மனிதக் குடும்பக் கட்டமைப்பில் ஏற்பட்டு வருகின்றமை பாதகமான தாக்கமே ஆகும். ஆகவே தொழில்நுட்பத்தின் மூலமாக மனிதர்களுடைய அன்றாட வாழ்க்கையில் குறைந்த நேரத்தில் கூடிய நலன்களைப் பெற்றுக் கொள்ளவும், விரைவான தகவல்களைப் பரிமாற்றம் செய்யவும் உதவுவதுடன் சில பாதகமான தாக்கங்களும் ஏற்படுகின்றன.

**ம.ஷாருகா**

**மாசார்,**

**பளை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் தமிழன்

கல் மண் காண முன்பு
கண்ட மொழி தமிழன்றோ
கோடி இனம் கண்டாலும்
ஈடில்லாதவன் தழிழனன்றோ

அவனவன் பண்பாடு
அவனுக்கன்றோ அருமை - என்
மறத் தமிழ் பண்பாடு
அண்டம் சார்ந்த பெருமையன்றோ

அம்மா
தாய்மொழியின் தாரக மந்திரம்
பால் குடித்து பல்லு முளைத்து
பசி வந்த போது
அடையாளங் கண்ட அந்த மொழி
காலங் கடக்கிறது
ஆங்கிலம் அசைந்து வருகின்றது
உறவுகளில் மொழி கலக்கிறது அப்போது
அம்மா மம்மி யாகின்றது.

மண்
சேதனங்களின் சொர்க்காபுரி
நிலத்தடி நீரை சேர்க்கும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகரில்லா மூலவளம்
அகழ்கின்றீர் அளவின்றி
விளைவு
அரிப்பாம் உவர்நீராம்
ஆங்காங்கே நிலச்சரிவாம்

மரம்
அதுக்கு இதுக்கு என்று
ஆயிரம் தேவை இருக்கு
ஒத்துக் கொள்கிறேன்!
வெட்ட நினைக்கும் போது இன்னொன்று
நட்டு வைத்தால்
நட்டம் நமக்கேது
நலமன்றோ யாவர்க்கும்

மண்டபத் திருமணங்கள்
மலிந்து போயாச்சு
வாழை இலைச்சாப்பாடு
வசதிக்கு இழுக் கென்று ஆயாச்சு
வழக்கிழந்து போய் விடுமோ
வழிவழியாய் வந்த விருந்தோம்பல்

உரல் குத்தி
உப்பு மிளகு போட்டு
பக்குவம் பார்த்து சமைத்தது
பழங்கதை
அறியாதோன் ஆக்கின சோறு
அழகாய் பெட்டியில் வரும்
பசி அடங்கும் ருசி......???





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிவரும் உலகோடு
ஓடிச் செல்லலும் ஒரு சுகம்
அடுத்த நாட்டு கலாசாரம்
அறிவதும் மிக நல்லம்
தழுவுதல் நன்று ஆயினும்
தாவுதல் தகுமோ???

ஆதியில் மனிதன் இருந்தான்
அளவாய் வளம் நுகர்ந்தான்
இயற்கையை நேசித்தான்
இன்புற்றும் வாழ்ந்திருந்தான்
"சார்ஸ்" இல்லை
"சிகா" இல்லை
எபோலா எச்.ஐ .வி
எந்தவொரு வைரசும் இல்லை

நவீனம் தத்தெடுத்த
நாகரிக குழந்தைகள் நாம்
விஞ்ஞானத்தால் விந்தை காட்டி
விஞ்சப் பார்க்கிறோமே இயற்கையை
விளைவு!
துருவங்களில் எல்நினோ வாம்
தூரங்களில் என்னென்னவோ?

விஞ்ஞானம் வளர்ந்ததென்று
விறகடுப்பை மறக்கலாமோ
ஆயுள் குறைவென்று கூந்தல்
இயற்கைப் பூ தவிர்க்கலாமோ
நின்று கதைக்க நாழி இல்லையென்று
நின் சுற்றத்தானை விலக்கலாமோ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தி பரிமாறல் பழசு என்று
பண்டைத்தமிழ் பண்பாடு மறக்கலாமோ?

லௌகீகம், ஆடம்பரம்
உச்சாணிக் கொம்பில் நின்று
உனை வருந்தி அழைக்கிறது
இயைந்து போ
இழந்து போகாதே
மாற்றங்களை நேசி
மரபுகள் மறக்காதே உலகின்
கடை எல்லையில் நின்று
கத்திச் சொல்லு
எம் பரம்பரை நீளும் - தமிழ்
பண்பாடு வாழும்!!

**டிஷானி கிறிஸ்தோப்பர்**
பிரதேச செயலம்,
பச்சிலைப்பள்ளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுமை மிகு பச்சிலைப்பள்ளி தெங்குத் தோட்டம் ஓர் வரலாற்று நோக்கு

யாழ்ப்பாணத்திலிருந்து தென்பகுதிக்கோ, தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கோ கண்டி வீதி வழியாகவும் புகையிரத வழியாகவும் செல்பவர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் வரிசை, வரிசையாக மிளிரும் தென்னந்தோப்புக்களை பார்த்து மெய்சிலிர்த்துப் போவது வழமை. இவ்வாறு மெய்சிலிர்த்து இரசித்தவர்களில் நீங்களும் ஒருவராக இருக்கலாம். நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட கிளிநொச்சி மாவட்டத்திற்கு அழகும், கம்பீரமும், பசுமையும் சேர்ப்பதாக இப்பச்சிலைப்பள்ளி பிரதேச தென்னந்தோப்பு அமைந்துள்ளது. வட இலங்கையின் வரலாற்றுப் போக்கில் கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேசம் அனைத்து வரலாற்றுக் கட்டங்களிலும் தொடர்புடையதாகக் காணப்பட்டு வருகின்றது. அவ்வாறான வரலாற்று நிகழ்வுகளின் தாக்கங்களை, எச்சங்களை இன்றும் நாம் காண்கின்றோம். அந்த வகையில் இத் தென்னந் தோப்பும் ஐரோப்பியர் காலத்தில் மேற்கு நாட்டவர் ஆரம்பித்து வைத்தவையே. அதன் தொடர்ச்சியாகவே நம்மவர்களால் பேணப்பட்டு வந்து இன்று கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் மிகப் புராதன வரலாற்று குடியிருப்புக்களை கொண்ட பகுதி பச்சிலைப்பள்ளி எனலாம். யாழ்ப்பாணக் குடாநாட்டின் செறிவான குடியிருப்புக்களிலிருந்து மக்கள் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் குடியேறினர். புலோப்பளை, பெரியபளை, பேராலை, தர்மக்கேணி, முள்ளியான், முகாவில், ஊர்வணிகன்பற்று, முகமாலை, மாசார், இத்தாவில் என்பனவும் முன்னர் பச்சிலைப்பள்ளியில் உள்ளடங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது வடமராட்சி கிழக்கில் உள்ளடங்கும் தாளையடி, உடுத்துறை, வத்திராயன், செம்பியன்பற்று என்பனவும் மிகப் புராதன குடியிருப்புக்களாகும். வன்னிப் பெருநிலப்பரப்பில் குடியிருப்புக்கள் கைவிடப்பட்டு சிதிலமடைந்த வேளையில் கூட பச்சிலைப்பள்ளியில் மக்கள் நிரந்தரமாக வாழ்ந்தனர். பச்சிலைப்பள்ளியில் நிரந்தரமாக வாழ்ந்து கொண்டு ஆனையிறவுக் கடனீரேரியைக் கடந்து கரைச்சிப் பகுதியில் காடழித்துக் கமம் செய்ய முடிந்ததும் ஒரு காரணமாகும். சுண்டிக்குளம் ஊடாக நிலமார்க்கமாகவும் கடனீரேரி மற்றும் வறட்சிப் பருவத்தில் ஆனையிறவு கடனீரேரி ஊடாகவும் கரைச்சிப் பகுதிக்கும் செல்லல் சாத்தியமாயிருந்தது. இக்காரணங்களால் இங்கு குடியிருப்புக்கள் அதிகமாக வளர்ச்சியடைய ஆரம்பித்தது.

பச்சிலைப்பள்ளி தெங்குத் தோட்டம் நிலை பெற்றமையானது 1658 ஆம் ஆண்டு ஒல்லாந்தர் யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்றியவுடன் முதன் முதலாக 300 தென்னைகளை தென்னைக்கும் தேங்காய் எண்ணெய்க்கும் வரியாக விதித்ததும் அல்லாமல், தமது படை யானைகளுக்கு தென்னோலையை இலவசமாக ஊட்டிப் பராமரித்து வருமாறு பச்சிலைப்பள்ளி மக்களுக்கு ஆணையிட்டனர். இதனால் தெங்குப் பயிர்ச்செய்கை என்பது பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் வீட்டுத் தோட்டப் பொருளாதாரமாகவும் உருவெடுத்தது. நீண்ட காலமாக வீட்டுத் தோட்டங்களில் வளர்க்கப்பட்ட வந்த தென்னை பச்சிலைப்பள்ளியில் பெருந் தோட்ட பொருளாதாரமாகவும் நிலை பெற்றமை பிரித்தானியர் காலத்திலேயாகும்.

இலங்கையின் தென்னந்தோட்டங்களின் பொருளாதாரம் மிகப் பழமை வாய்ந்தவை, அதன் உற்பத்திப் பொருட்களிலிருந்து பெறப்பட்ட பல்வேறு பயன்பாடுகளும் கிராமியப் பொருளாதார வாழ்க்கையில் ஒரு பிரதான அம்சமாக மாறியது. 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையின் ஒரு சில ஐரோப்பியக் கம்பனிகள் பெருந்தோட்டங்களை நிறுவியதைத் தொடர்ந்து தென்னையை பெருந்தோட்டங்களில் முறையாகப் பயிரிடப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 19 ஆம் நூற்றாண்டில் ஆரம்ப காலப் பகுதியில் தேங்காய், கொப்பறா, எண்ணெய் என்பன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுமதிகளாக மாறின. இலங்கையின் தெங்குச் செய்கையில் நிலவிய இத்தகு நிலைமைகள் பச்சிலைப்பள்ளிப் பிரிவில் தெங்குத் தோட்டங்களை நிறுவ யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த வணிகச் செட்டியார்களை தூண்டியது.

தெங்குப் பயிர்ச்செய்கை அதிக இலாபம் தரும் இலக்காகவும் அதிக மூலதனம் தேவைப்படாமையும், குறைந்த அளவிலான தொழிலாளர் தேவைப்பட்டமையும் இப்பிரதேசத்தின் வளமும் இவ் முதலீட்டைத் தூண்டிய பிரதான காரணிகளாகும். தெங்குப்பயிர்ச் செய்கையின் தொழிநுட்பங்கள் ஒப்பீட்டடிப்படையில் எளிமையானவையாயும் பராமரிப்பு இலகுவாகவும் இருந்தால் தெங்குப்பயிச்செய்கை இங்கே வெற்றி பெற்றது. மனிதன் முறைப்படி பராமரிக்காமல் விட்டால் கூட தென்னை 60 வருடங்களுக்கு பயனளிக்கும் ஆற்றல் கொண்டது. இவை பச்சிலைப்பள்ளிப் பிரிவில் தென்னந்தோட்டங்களை ஆரம்பிக்க செட்டிமார்களைத் தூண்டியது. வர்த்தகர்களான அவர்களுக்கு தெங்குச் செய்கை இரண்டாம் கட்டத் தொழிலாக விளங்கியது. இவர்களைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்து உயர் வகுப்பு மக்கள் பலரும் பச்சிலைப்பள்ளியில் தெங்குச் செய்கையில் ஈடுபடத்தொடங்கினர்.

1900 ஆம் ஆண்டிற்குப் பின் பிரித்தானியர் காலத்தில் தொடர்ந்து வந்த முப்பது ஆண்டுகளுக்கு பச்சிலைப்பள்ளிப் பிரிவில் தென்னந்தோட்டங்கள் தொடர்ச்சியாக ஆரம்பிக்கப்பட்டன. 1901ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட குடிசனமதிப்பீட்டின்படி பச்சிலைப்பள்ளிப் பிரிவில் 436 பெருந்தோட்ட மக்கள் இருந்துள்ளனர். இவற்றிலிருந்து இக்காலத்தில் பச்சிலைப்பள்ளிப்பிரிவில் தெங்குப் பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டது புலனாகின்றது.

பச்சிலைப்பள்ளி பிரிவிலுள்ள கிராம மக்களின் பிழைப்புக்குரிய வருவாயாக தென்னை விளங்கியதால் அக்காலத்தில் புராதன கிராமங்களாக விளங்கிய கிளாலி, வேம்படுகேணி, முகமாலை, இத்தாவில், புலோப்பளை தம்பகாமம், பெரியபளை, தர்மக்கேணி, மாசார், கோவில்வயல் என்பனவற்றில் வீட்டுக் காணிகளில் தென்னைகள் வளர்க்கப்பட்டிருந்தன. இப்புராதன கிராமங்களையடுத்து பரந்த நிலப்பரப்பு மலிவாக கிடைக்கக் கூடியதாகவிருந்தது. 1901 ஆம் ஆண்டு பச்சிலைப்பள்ளிப் பிரிவில் 21480


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹெக்ரேயர் நிலப்பரப்பும் 6119 மக்களும் இருந்தனர். பரந்த நிலப்பரப்பும் குறைந்த மக்கட்தொகையும் தெங்குத் தோட்டங்களின் விருத்திக்குதவின. மேலும் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் புகையிரதங்களை இயக்குவதற்கு நிலக்கரிக்கு பதிலாக இவ்விறகு பயன் படுத்தப்பட்டமையால் இவ்விறகுகளைப் பெறுவதற்காக பச்சிலைப்பள்ளிப் பிரிவில் காணப்பட்ட காட்டு நிலங்களை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பலருக்கு குத்தகைக்குக் கொடுத்தார்கள். விறகுக்காக வெட்டப்பட்ட காணிகளில் பல தென்னந் தோட்டங்களை ஆரம்பித்தனர். மாசார் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட பல தென்னந் தோட்டங்கள் இவ்வகையினவாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டை சேர்ந்தவர்களுக்கு இன்று பச்சிலைப்பள்ளியில் தென்னந் தோட்டங்களிருக்கின்றன. உயர்தர செல்வந்தர்கள், மத்தியதர வகுப்பினர் பலருக்கும் இப்பிரதேசத்தில் தென்னந்தோட்டங்கள் உள்ளன.

பச்சிலைப்பள்ளியில் தென்னந்தோட்டங்கள் வேகமாக வளர்ச்சியடைந்தமைக்கு பல சமூக பொருளாதாரக் காரணிகள் காரணமாக இருந்தன. தென்னந்தோட்டங்களை ஆரம்பிக்க பெருமளவு மூலதனம் தேவைப்படாமையும், யாழ்ப்பாண வணிகரின் முதலீட்டை தூண்டிய முதன்மையான காரணிகளாகும். பராமரிப்பு செலவுக்கு 10 ஏக்கர் தென்னந் தோட்டத்தைப் பராமரிக்க 2 நபர்கள் போதுமானதாகும் தற்போது 14 பேருக்கு 4 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். வேறு எந்தவொரு பயிர்ச்செய்கையிலும் இவ்வளவு குறைவான தொழிலாளர் இல்லை. இதனால் பச்சிலைப்பள்ளிப் பிரிவில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல்வேறு மட்டத்தினரும் தென்னந்தோட்டங்களை ஆரம்பித்தனர். யாழ்ப்பாண பணக்காரர்களினதும் வர்த்தகர்களினதும் வருமானமீட்டும் தொழிலாகவும் விடுமுறை காலத் தங்கலிற்காகவும் ஒருவித கௌரவத்திற்காகவும் கூட பச்சிலைப்பள்ளிப் பிரிவில் தென்னந் தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. யாழ்ப்பாணத்திற்கு அண்மையாக பச்சிலைப்பள்ளி அமைந்திருப்பதும் போக்குவரத்து வசதி உள்ளதும் சாதகமான நிலைமையாகும். யாழ்ப்பாண மக்களுக்கு தேங்காய் எப்போதும் உடனடித் தேவையாக இருப்பதும் தெங்குச் செய்கையை ஊக்குவித்த காரணியாகும். வடபகுதி மக்களின் அன்றாட உணவில் அரிசிக்கு அடுத்த படியாக தேங்காய் முக்கியத்துவம் பெறுவதும் இச்செய்கையை ஊக்குவித்த காரணியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காரணங்களால் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் நிலம் முழுவதும் ஒரு கால் நூற்றாண்டுக்குள் தென்னந் தோட்டங்களாக உருமாறி நிற்கின்றன. யாழ்ப்பாணம்-கண்டி வீதியின் இருமருங்கும் தெங்குச் செய்கை மிகச் சிறப்பாகவும்,வீதிக்கு தென்பக்க நிலப்பரப்பிலும் மிக நல்ல முறையில் அமைந்திருக்கின்றன. கிளாலி, புதுக்காடு, புலோப்பளை, கரந்தாய், இயக்கச்சி, சோரன்பற்று, மாசார் பகுதிகளில் தென்னந்தோட்டங்கள் சிறப்பாக அமைந்துள்ளன. தற்போது புதுக்காடு, இயக்கச்சி, சோரன்பற்று, மாசார் பகுதிகளில் புதிய தோட்டங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. கிளிநொச்சி மாவட்டத்தின் பெருமளவான தென்னைகள் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தினுள் உள்ளடங்குகின்றன.

இவ்வாறாக வரலாற்றின் உயிர்த்துடிப்பாக இன்னும் ஓங்கி வளர்ந்து நிற்கும் பச்சிலைப்பள்ளியின் தென்னந்தோப்புக்கள் இன்னும் பல நூற்றாண்டுகள் தொடரப்போகும் எச்சங்கள். இவை எமது வரலாற்றினதும், மேல் நாட்டவர் விட்டுச் சென்றதுமான எச்சங்களாக இன்றும் நாம் காண்பவற்றில் உயிர்ப்புள்ள எச்சங்களாகக் காணப்படுகின்றன.

**அ.அன்பரசி**
பிரதேச செயலகம்,
பச்சிலைப்பள்ளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கைகள், ஆசாரத் தொடர்புகள் தொடர்பான விஞ்ஞான தெளிவு

## 01.விரத நாட்களில் ஏன் எண்ணெய் தேய்த்துக் குளிக்கக் கூடாது.

விரத நாட்களிலும் நோன்பு நாட்களிலும் எண்ணைய் பூசிக் குளிக்கலாகாது. எண்ணை தேய்த்துக் குளிப்பதை மிக முக்கிய மானதாகக் கருதியிருக்கும் நாம் இப்படி ஒரு விதி விலக்கைக் கொண்டாடுவது வெறும் மூட நம்பிக்கை என்று கூறி வந்தனர். ஆனால் இதன் விஞ்ஞான அங்கீகாரம் இப்போது வெளியிடப்பட்டுள்ளது

சனி கிரகத்தின் சக்தியிலிருந்து உருவானதாக கருதி வரும் எண்ணை தலைக்கு சுற்றிலும் ஓர் புகை வளையத்தை உருவாகின்றது. இவ்வளையம் இருப்பதால் கிரகங்களில் வரும் காந்த அலைகள் உடலுக்குள் நுழைய இயலாமல் போகின்றது விரத நாட்களில் உடல் மற்றும் மனதுக்கு தூய்மைமிக முக்கியமானதால் கிரகங்களினின்றும் நட்சத்திரங்களின்றும் பூமிக்கு வரும் காந்த சக்தி அலைகள் உடலுக்கு மிக அவசியம் இவ்வலைகள் உடலுக்குள் நுழைய எண்ணை தடையாக இருப்பதால் தான் விரத நாட்களில் எண்ணை தேய்த்துக் குளிப்பதற்கு விதிவிலக்கு ஏற்பட்டுள்ளது.

## 02.மாதவிடாய் காலத்தில் பெண்கள் கோயிலுக்குள் நுழையலாமா?

மாதவிடாய் காலத்தில் பெண்கள் கோயிலில் பிரவேசிக்கவோ தரிசனம் செய்யவோ கூடாதென்று கூறுவதற்கும் சில காரணங்கள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாட்களில் பெண்களுக்கு தனியறையும் படுக்கையும் அளித்திருந்த முன் தலைமுறை அந்த நாட்களை அசுத்தத்தின் நாட்களாகக் கருதியிருந்தனர். இந்நாட்களில் பெண்கள் கோயில் தரிசனம் வீட்டின் முன்பக்கம் வருவதும் கூட தடை செய்யப்பட்டு வந்தன. மாதவிடாய் காலத்தில் பெண்களின் உடல் வெப்பம் மாற்றமடைகின்றது. இந் நேரங்களில் கோயில் தரிசனம் செய்தால் இந்த வெப்ப மாற்றம் காரணமாக தேவ பிம்பத்தையும் பாதிக்கும் ஜீவ சக்தி நிறைந்த தெய்வீகத்திலும் இந்த மாற்றம் நிகழாமலிருக்கவே மாதவிடாய் காலத்தில் பெண்கள் கோயிலுக்குள் நுழையலாகாது என்று கூறுவர் .

பட்டுப் பூச்சிகளை வளர்க்குமிடத்தில் மாதவிடாய் கொண்ட பெண்கள் சென்றால் அதன் புழுக்கள் மாண்டு போவதாக விஞ்ஞானம் நிரூபித்திருக்கிறது. அதாவது சிறு வெப்ப பட்டு நூலை உருவாக்கி வலைகள் உண்டாக்கி அதனுள் சமாதியிருக்கும் புழுக்களைப் போலவே கோயிலைப் பொறுத்தவரை இறையின் நிலையும் அவ்வாறு திவ்ய ஜீவ சக்தியை பாதிக்காமலிருக்கவே இத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

## 03. தாழம்பூவை பூவை பூஜைக்கு எடுக்காதது ஏன்?

தாழம்பூவை பூசைக்கு எடுக்க வேண்டாம் என்று யாராவது கூறினால் சந்தேகக் கண்ணுடன் பார்ப்போம் ஏனென்றால் அதன் தூய்மையும் அழகும் நறுமணமும் மிகுந்ததோர் மலரே தாழம்பூ இதைப் பூஜைக்கு எடுக்கக் கூடாதென்பதன் பின்னால் சில காரணங்கள் உண்டு ஒரு பழைய கதையில் தாழம்பூ பொயச்சாட்சி கூறியதாகவும் அதற்கான தண்டனை அனுபவிக்கிறது என்றும் கூறுவது வழக்கம் தாழம்பூவை விரிவாக சோதனை செய்ததில் அதில் எதிர்மறை விசைகள் செயல்படுவதாகத் தெரிய வந்தது. இந்த அழகான பூவை பூஜைக்கு எடுக்காததன் காரணம் இதுவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04. தியானம் வாழ்க்கைக்கு பயனளிப்பது எப்படி?

தியானம் வாழ்க்கைக்கு பயனளிக்கும் என்று பழைய தலைமுறை நம்மை கற்பித்திருக்கிறது சாதகமாயிருந்து. ஒரே சிந்தனையுடன் தன்னிலும் தன்னைச் சுற்றியுள்ள எல்லாவற்றிலும் குடி கொள்ளும் ஜீவ சக்தி இறைவன் அருளும் சக்தி என்று மனதில் கொண்டுள்ள ஆராதனையே தியானம். யுகங்கள் கழியும் போது நிகழவிருக்கும் மனத்தின் சுத்திகரிப்பு இந்த ஜென்மத்திலேயே பரிணமிக்கும் சாதனையென்று தியானத்தை சிறப்பிக்கலாம்.

தியானத்தின் பயன்களை நவீன அறிவியல் அங்கீகரித்துள்ளது. மனதுக்கும் புத்திக்கும் சக்தி பெற ஓருபாதை மட்டுமே நவீன விஞ்ஞானம் உபதேசிக்கின்றது. அது தியானத்தின் பாதை மட்டுமே நவீன விஞ்ஞானம் உபதேசிக்கின்றது. தியானத்தின் பாதை மனதை ஒரு நிலைப் படுத்தி ஓர் தனிப்பட்ட புள்ளியில் மையப்படுத்தி தியானம் செய்தால் மனதை அலட்டும் எல்லா சிந்தனைகளிலிருந்தும் விடுதலை பெறலாம் தியானத்தின் ஆழமான நிலையில் செல்லும் போது மூளையிலுள்ள பீடா அலைகள் ஆல்பா, காமா, டெல்டா என்ற அலைகளாக மாறுதலைகின்றது என்று அறிவியல் கற்பிக்கின்றது. இவ்வலைகட்கு மூளையை அதிக மடங்கு விருத்தியடைந்து செயல்படச் செய்யும் என்று ஈ.சி.ஜி ஆராய்ச்சி வாயிலாக நிரூபிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் தங்கள் மருத்துவ நூல்களில் தியானத்திற்கு தகுந்த இடமளித்துள்ளன.

## 05. குத்து விளக்கில் எத்தனை திரிகள் பொருத்தி பற்ற வைக்க வேண்டும்.

மாலை நேரம் இறைவனுக்கு அர்ப்பணம் செய்வதற்காகப் பற்ற வைக்கும் குத்து விளக்கின் திரியைப் பற்றி பல்வேறு கருத்துக்கள் கூறப்படுகின்றன. விளக்கில் எத்தனை திரிகள் இருந்தால் என்னவென்ற புதிய தலைமுறை வினாவலாம். ஆனால் இதற்குப் பதில் கூறு முன் பல விஷயங்களை விரிவாக்க வேண்டியதாயிருக்கும். ஒரு திரி மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தி விளக்கேற்றினால் வயதானவர்கள் கோபப்படுவார்கள். மூன்று திரியில் விளக்கேற்றினால் அது அலட்சியத்தின் லட்சணம் என்றும் இரண்டு திரியைப் பொருத்தி விளக்கேற்றினால் தரித்திரம் என்றும் அறிவுள்ளவர்கள் கூறுவார்கள். இரண்டு திரியைப் பொருத்தி விளக்கேற்றினால் மிக நன்று கிழக்கு நோக்கியும் மேற்கு நோக்கியுமானால் உத்தமம். இதை விட ஐந்து திரிகள் இடுவதும் உசிதமானது என்றெல்லாம் ஆசாரியர்கள் விதித்துள்ளனர். திரிகள் எத்தனையானாலும் ஒளியில் வேறுபாடுண்டாகும் என்பதல்லாமல் வேறேன்ன உண்டு என்ற கேள்விக்குப் பதில் கூறுவது மிகவும் சிக்கலானது. டெசிங்ராட் என்ற சிறு கருவியால் சோதனைகள் செய்து இது சம்பந்தமான சில உண்மைகள் விஞ்ஞானம் வெளிப்படுத்தியுள்ளது ஒருதிரி மட்டும் பொருத்தி எரியவிட்ட விளக்கிலிருந்து எதிர் மறை சக்தி பரவுகின்றது என்று தெரிகின்றது இரு திரிகளால் எரியும் விளக்கில் கண்ட அனு கூலமான சக்தி மூன்று நான்கு திரிகளால் எரியும் விளக்கிலும் அனுகூல சக்தி காணப்பட்டது இந்த விஞ்ஞான இரகசியத்தை புரிந்து கொண்டுதான் இரண்டு அல்லது ஐந்து திரிகளிட்டு விளக்கேற்ற வேண்டும் என்று ஆசாரியார்கள் விதித்தனர்

## 06. அரிசி வேகும் முன்பு பாயசத்தில் வெல்லம் போடக் கூடாதென்பது ஏன்?

பாயாசம் தாயாரிக்கும் போது கடைப்பிடிக்கும் ஒருபாடமாகும். அரிசி வேகுவதற்கு முன் வெல்லம் சேர்க்க கூடாதென்பது அரிசி நன்றாக வேக வேண்டுமானால் கொதிக்கும் நீர் அரிசிக்குள் நுழைய வேண்டும் கொதிக்கும் நீரினுள் சில வேதியல் பரிணாமங்கள் நிகழ்கின்றன. இதனால் அரிசி பருவமடைந்து மிருதுவாகின்றது அரிசி பாயாசம் தயாரிக்கும் போது அரிசி வேகும் முன்பாக வெல்லம் சேர்த்தால் வெல்லம் நீரிலே கரைந்து அரிசிக்கு சுற்றம் சூழ்ந்திருக்கும் இந்த கரைசலுக்கு அடர்த்தி அதிகமானதால் விஞ்ஞானம் கூறுகின்றது. நீர் அரிசிக்குள் நுழைவதைத் தடை செய்கின்றது மேலும் அரிசியின் கோச திரவங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியேறுகின்றன. இதனால் அரிசி சுருங்கி விடும் நீர் உள்ளே நுழைய இயலாததால் அரிசி நன்றாக வேகாமலே இருக்கின்றது.

## 7) தண்ணீர் குடிக்கும் போது ஒரு துளியாவது சுண்டி விடுவது ஏன்?

தண்ணீர் குடிக்கும் முன் ஒரு துளியாவது விரலில் எடுத்து தெளித்து விட வேண்டும் என்று நம்பிக்கை உண்டு அதாவது சுற்றும் வசிக்கும் பூத கணங்களுக்காக அப்படி செய்வது என்ற நம்பிக்கை இதுவானாலும் இரண்டு துளியாவது சுண்டி விட்ட பின் நீர் குடிப்பது நல்லது என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். ஏனெனில் விஞ்ஞானம் கூறுகின்றது கோப்பையினாலும் கிண்ணத்திலானாலும் குடி நீர் எடுக்கும் போது ஏதாவது துகள் படிந்திருக்க வாய்ப்புண்டு இது அனேகமாக மிதந்து கிடக்கும் இரு துளி நீரைச் சுண்டி விடும் போது இது போன்ற அசுத்தங்கள் விலகி சுத்தமான நீர் கிடைக்கும்.

## 8) ஆடிமாதம் திருமணம் நடத்தலாமா?

பொதுவாக ஆடிமாதம் திருமணம் நடத்துவதில்லை என்ற சூழ்நிலையிலும் ஆடிமாதத்தில திருமணம் செய்வது முன்னோர்கள் ஆமோதிப்பதில்லை. தமிழ் மாதங்களில் நான்காவது மாதமான ஆடி மாதத்தை ராசியில்லாத மாதமாகவே கருதி வந்தனர். அதிலிருந்து ஏதோ ஒரு விஷயம் இதன் பின்னால் உள்ளதை உணரலாம். ஆடிமாதத்திற்குப் பின்னரும் ஆவணி மாதம் நிலவின் குளிர்மை நிறைந்த மாதம் என்று அதனால் ஆவணியிலே திருமணம் செய்யலாம் என்று சொல்வது வழக்கம். திருமணம் என்ற எந்த முக்கிய சடங்குகளும் ஆடிமாதம் நிகழ்வதைத் தவிர்த்து வருகின்றோம். ஆடிமாதக் கஞ்சி என்ற நம்பிக்கையும் சில மக்கள் ஆசாரித்து வருகின்றனர். சில மருந்து மூலிகைளைக் கலந்து கஞ்சி குடிப்பதே ஆசாரம். இதை அந்த மருந்துகள் பெயர் சொல்லிக் குறிப்பிடலாம். இதை விஞ்ஞானம் ஆடி மாதம் பொதுவாக உடல் நலத்திற்குப் பிரதி கூலமாக இருக்கும். அதனால் உடல் நலத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் கவனம் செலுத்த வேண்டிய மாதம் இது. இந்த காரணத்தாலேயே ஆடி மாதத்தில் திருமணம் போன்ற சடங்குகள் நிகழ்த்துவதில் தடை விதிக்கப்பட்டு வந்தது.

## 09) இருபத்தைந்து வயதுக்கு முன்பு திருமணம் செய்ய வேண்டுமா?

கல்வியை முடித்த பிரம்மசார நிலையிலிருந்து திரும்பும் நபர் தனக்கு இருபத்தைந்து வயது முடியும் முன் இல்லற வாழ்க்கையில் பிரவேசிக்க வேண்டும் என்பது திருமணக் கலாசாரம் கூறுகின்றது. இந்த வயதில் திருமணம் செய்து கொண்டு வாழ்க்கை நடத்தும் போது சந்ததிகட்கு பல நன்மைகள் உண்டு என்று விஞ்ஞானம் ஆராய்ந்து நவீன மருத்துவ துறை அங்கீகரிக்கின்றது பண்பு, பழக்கம், உருவம் என்பவையால் தனக்கு பொருத்தமானது என்று தோன்றும் கன்னியை மட்டுமே திருமணம் செய்து கொள்வது உசிதமாயிருக்கும் என்று நம் கலாசாரம் உறுதியாகக் கூறுகின்றது. இதை பலரும் பெரிதாக எடுப்பதில்லை. என்றாலும் மனநிலை மருத்துவமும் இதையே தான் ஆமோதிக்கின்றது. பண்பு, பழக்கம் பருவம் என்பவை பொருந்தாத பல தம்பதிகளும் அடிக்கடி மனநிலை மருத்துவரின் ஆலோசனை பெற வருவதைக் காணலாம். ஆலோசித்து கவனமாக உறுதி செய்யும் திருமண வாழ்க்கையில் நல்ல சந்ததிகளும் நிலையான இன்பமும் கிடைக்கப் பெறும்.

## 10) அரணை கடித்தால் மரணம் நிகழுமா?

அரணை கடித்தால் உடன் மரணம் என்று ஒரு நம்பிக்கை பண்டைய காலத்தில் இருந்து வந்தது. வளையில் இருந்து தலையை மட்டும் நீட்டும் அரணையின் கழுத்து வரையுள்ள பாகம் மட்டுமே வெளியிலே தெரியும் என்பதால் ஏதாவது விஷப் பாம்பாக இருக்கும் என்று தவறாகப் புரிந்து கொள்வதுண்டு. விஷம் நீண்டு வருவதால் வரும் மரணங்களில் பெரும்பான்மையானதும் பயத்தினால் நிகழ்கின்றன என்பது நிஜம் அரணை கடித்தால் மரணம் என்ற நம்பிக்கையிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரவது அதிக பயத்தினால் வந்த இருதய நோயினால் இறந்து போயிருக்கலாம். இது போன்ற நிகழ்வுகள் இந்த நம்பிக்கையை உறுதி செய்யுமாறு அமைந்திருக்கலாம் ஒரு விஷ நிபுணர் கூறியிருக்கின்றார் இந்த தகவல் பலர் கையில் வந்து சேர்ந்து நாளடைவில் அரணையை ஒரு விஷப் பிராணியாகக் காணத் தொடங்கினர் என்று நம்புவதில் தவறில்லை. எப்படியும் அரணை எப்போதாவது தான் கடிக்கும் என்றும், கடிக்க நினைத்து வந்தாலும் ஆளுக்கருகில் வரும் போது மறந்து திரும்பி விடும் என்று கருதுகின்றனர். கடிக்க உத்தேசித்த நபர் அல்ல என்று புரிந்து கொண்டு தான் திரும்பிச் செல்கின்றது என்றும் ஓர் நம்பிக்கை உண்டு இந்த மறதியின் கதையை வைத்து சில நபர்களை அரணை புத்தியுடையவன் என்று கூறுவதுண்டு. இருபக்கங்களிலும் காணும் ஆனால் அரணை விஷமில்லாத ஓர் சாதுவான பிராணி என்பதை தெரிந்து கொள்ளுங்கள் அரணையின் இரு பக்கங்களில் காணப்படும் சிவப்பு கலந்த மஞ்சள் நிறம் இன விருத்தியின் காலத்தில் ஆண் அரணையில் மட்டுமே காணப்படும் என்று விஞ்ஞானம் கூறுகின்றது இதற்கும் விஷத்துக்கும் சம்பந்தமில்லை.

**பொன்.கார்த்தி**

தம்பகாமம் .பளை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீட்சை

சைவசமயத்தில் தீட்சை என்பது பிரதான இடத்தினைப் பெறுகிறது தீட்சை என்ற சொல்லை தீ + ஷை எனப் பிரிப்பின் தீ என்பது கொடுத்தல் எனவும் ஷை என்பது கெடுத்தல் எனவும் பொருள் தரும் எனவே தீட்சை என்றால் ஆன்மாக்களுக்கு மலத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பது என்பதாகும் தீட்சை பெற்றவர்களே உண்மையான சைவசமயிகள் சைவசமயிகள் தீட்சை பெறுதல் மிகவும் பிரதானமானது. தீட்சை பெறாதவர்கள் அருட்பாக்களை ஓதுவதற்கும் புராணங்களைப் படிப்பதற்கும் ஞான சாத்திரங்களைக் கேட்டல் படித்தலுக்கும் பிரதட்டை, விவாகம் அந்தியேட்டி சிரார்த்தம் போன்ற சமயக்கிரியைகளை செய்வதற்கும் செய்விப்பதற்கும் தகுதி உடையவராகார்.

எமது உடம்பில் புற அழுக்கை நீரினால் சுத்தம் செய்வது போல் உள்ளிருக்கும் உடம்பினையும் அதில் உள்ள தீய அழுக்கினையும் ஆசமனம், மந்திர செபம் முதலான அனுட்டானக் கிரியைகளினாலேயே போக்க முடியும். இவற்றினைச் செய்வதற்கு வேண்டிய பயிற்சியும் முயற்சியும் தேவை அதனை உணர்ந்தே எமது சமயத்தில் ஏழுவயதில் தீட்சை பெறவேண்டும் என்ற விதி ஏற்பட்டுள்ளது. ஏனெனில் கால் கைகளை அடக்கி ஆளும் பக்குவமும் மனதில் இச்சைகள் தோன்றி விருத்தியாகக் கூடிய காலமும் அப்பருவ காலத்திலிருந்து தான் தோன்றுகிறது. என்பதனால் இவ் வயதில் தீட்சை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வயதில் தீட்சை பெற்றிருந்தால் அனுட்டான சாதனங்களினால் தேகத்தையும் மனத்தையும் அடக்கி நம்வசப்படுத்தலும் தீச் செயல்கள் தோன்றாமலும் தடுக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயி ஒருவர் பெற வேண்டிய தீட்சைகள் மூன்று வகைப்படும் அவையாவன!

1. சமய தீட்சை :- ஆசரிய அபிஷேகம் பெற்ற கிரியா குரு ஒருவரிடம் முதலில் பெறும் தீட்சையாகும். அனுட்டானம், பஞ்சாட்சர செபம், சமயத் தொண்டுகள் மற்றும் கிரியைகள் யாவற்றையும் செய்யவும் செய்விக்கவும் தகுதி நல்குவதாகும்.இத்தீட்சை பெற்றவரே சைவசமயி ஆவார் இத்தீட்சை சரியை நெறியைக் கடைப்பிடிப்போர்க்கு உகந்தது.

2. விசேட தீட்சை :- சமய தீட்சை பெற்று சாதனம் செய்து பக்குவம் முதிர்ந்த பின் ஆசாரியரிடத்தில் இரண்டாவதாக பெறும் தீட்சையாகும் இது பெற்றவர்கள் ஆன்மார்த்த பூசை செய்து புறமும் உள்ளும் இறைவனின் அருவுருவத் திருமேனியை வணங்கலாம் இவர்களே சிவ பூசைக்காரர்கள் என்று அழைக்கப்படுவார்கள். இத்தீட்சை கிரியை நெறியைக் கடைப்பிடிப்போர்க்கு உகந்தது.

3. நிர்வாண தீட்சை : - முதல் இரண்டு தீட்சைகளும் பெற்ற பக்குவம் முதிர்ந்தவர்கள் ஆசாரியிடம் இத்தீட்சை பெறுவர் இத்தீட்சை அசத்தியோ நிர்வாணம், சத்தியோ நிர்வாணம் என இருவகைப்படும் சத்தியோ நிர்வாண தீட்சை முற்றாகவே பற்றற்ற நிலையில் இருப்பவர்க்கு உடனே தேகத்தோடு முத்தியைக் கொடுப்பது. சத்தியோ நிர்வாண தீட்சை ஆன்மாக்கள் பிரார்த்த வினைப்பயன் அனுபவித்து முடிந்த பின் முத்தியைப் கொடுப்பது இது பெற்றவர்கள் அருவத் திருமேனியாய் சிவத்தை அகத்திலே வழிபாடு செய்வார்கள். இத்தீட்சை ஞான நெறியைக் கடைப்பிடிப்போர்க்கு உகந்தது.

நிர்வாண தீட்சை பெறுவோர்களுள் அபரமுத்தி முதலிய போகங்களை விரும்புவோர்க்குச் செய்யப்படுவது லோகதர்மினி. மற்றவர்களுக்குச் செய்யப்படுவது சிவதர்மினி. பெறுவோருள் உடனே முத்தி அடைவோர் அசத்தியோ நிர்வாணத்தையும் பெறுவர்.

மேற்கூறிய மூவகைத் தீட்சைகளையும் கிரியா குரு அளிக்கும் போது ஏழுவகையில் ஏதாவதொருவகையில் சீடனின் பக்குவ நிலைக்கேற்ப வழங்குவார். அவையாவன!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மீன் தனது முட்டைகளைப் பார்வையினால் பொரிக்கச் செய்து அவற்றின் பசியையும் போக்குவது போல் குருநாதர் தம் சீடனை அருள் பார்வையால் ஞானமீந்து அருளல் நயன தீட்சையாகும்.

2. பறவை தனது முட்டையைச் சிறகினால் அணைப்பது போல சீடனை தன் திருக்கரத்தால் பரிசிப்பது பரிச தீட்சையாகும்

3. பட்டாடை போட்டு மறைத்துச் சீடனின் வலக்காதில் திருவைந்தெழுத்தை உபதேசிப்பது வாசக தீட்சையாகும்.

4. ஆமை கரையிலிருந்தவாறே தனது முட்டையை தனது மனதில் நினைக்க ஆமைக்குஞ்சு வெளிப்படுவது போல தம் சீடனை அருள் உருவாய் பாவிப்பது மானச தீட்சையாகும்

.5. பதி, பசு, பாசம் ஆகிய முப் பொருளின் உண்மையினையும் இயல்பினையும் உணர்ந்து மும் மலங்களும் நீங்கி முத்திப்பேறடைய சிவாலயங்கள் வழியில் நின்று தெளிய போதிப்பது சாத்திர தீட்சையாகும்.

6. சிவயோகம் பயில உபதேசிப்பது யோக தீட்சையாகும்.

7. குண்ட மண்டலமிட்டு அக் காரியம் செய்து பாசத்தைப் போக்குவது சவுத்திரி தீட்சையாகும்.

**கை.கோகுலரமணி**
பிரதேச செயலகம்.
பச்சிலைப்பள்ளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பண்பாட்டை சிதைக்கலாமோ...

பாரினிலே பண்பாடு பல இருந்தாலும்
நமக்கும் உண்டு
நல்ல தமிழ்ப் பண்பாடு
தனித்துவம் பெற்று தன்வழி நகர்ந்து
இலக்கியத்திலே இன்றும் வாழ்கிறது.

தாய்மொழியும் மறக்கிறது இன்று
தன்னிலையும் மறக்கிறது
போதையின் பாதையில்
குருத்தோலைகள் வளர
காவோலைகள் காய்ந்து போகின்றன.

உலக மொழியாம் ஆங்கிலம்
கை கொடுக்கும் இம் மொழியை
கற்றுக் கொள்ள தவறில்லை
பாதி தமிழ் மீதி ஆங்கிலம்
கொச்சைப்படுகிறது இன்தமிழ்
மதவாதம் இனவாதம் தீவிரவாதமென
தலைவிரித்தாடுகிறது அதர்மம்
காமவேட்டைதனில் அசிங்கமாய்
குதறப்படுகின்றன பெண்மான்கள்
நீள்கிறது கொலை கொள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகு நிலையம் அதிகரிக்க
குறைந்து கொண்டு செல்கிறது
ஆடைகளின் அளவுகள் ஏனோ
அந்நிய கலாசாரத்தின் வாழ்வியலில்
நம்மை அடகு வைக்கிறது நாகரீகம்
சிலமணி நேர தித்திப்பில் மது கிண்ணங்கள்
துடுப்பில்லாத படகாய் நிலை தடுமாறுகிறது வாழ்வு
இனிய பொழுது இணையத்திலே இளையோட
சிந்தையை சீரழிவுக்கு சீதனமாக்கி
மனிதப் போர்வைகளாய் இன்றைய சமுதாயம்
வாய்ச்சொல்லில் வீரர்களாய்
வார்த்தைகளை கோர்த்து விட்டால்
வண்ணம் கொண்டு திண்ணம் கொள்ளாது வண்ண தமிழ்
நம் பண்பாடு எனும் ஓசோனில் கீறல்கள் போல்
கிழிசல்கள் வேண்டாமே..............................

**செல்வி.வ. சர்மிலா**
**பிரதேச செயலகம்.**
**பச்சிலைப்பள்ளி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோயில் பண்பாட்டில் மருத்துவம்

இந்துக்களின் தினசரி வாழ்க்கை முறைகள் பருவ காலங்களிற்கேற்ப அவர்கள் பின்பற்றும் நடைமுறைகள் உணவுப் பழக்க வழககங்கள் ஆலய வழிபாட்டு முறைகள் திருமண நடைமுறைகள் பிதிர்க்கடன்கள் என அனைத்து செயற்பாடுகளிலும் மருத்துவமானது பின்னிப் பிணைந்துள்ளது.

பொதுவாக இந்து ஆலயங்களானவை கிராமங்கள் நகரங்களின் மையப்பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும். அதனைச் சூழவே குடியிருப்புக்கள் காணப்படும். இவற்றுடன் சில ஆலயங்கள் கடற்கரை ஆற்றோரம் மலையுச்சி போன்ற இடங்களிலும் அமைந்துள்ளன. ஆலய அமைப்பு முறையானது உடல் தத்துவங்களுடன் ஒன்று பட்டதாகவே காணப்படுகின்றது. ஒருவர் மல்லாக்கப் படுத்துறங்கும் போது அவருடைய பாதங்களே உயரமாகத் தோன்றும் அவ்வித அமைப்பே மூலஸ்தானத்திலிருந்து கோபுரம் வரை காணப்படுகிறது.

ஆலயத்தில் விக்கிரகங்களானவை பிரதிஸ்டை செய்யும் போது அதனடியில் மந்திரத்தகட்டினை வைத்து விடுவார்கள். இத்தகடுகள் ஆலயத்திலோதப்படும் மந்திரங்களை கிரகித்து அதனை வெளிப்படுத்தும் தன்மை கொண்டவை இதன் காரணமாகவே ஆலயத்திற்குச் செல்வோர்க்கு மன அமைதி அல்லது மனச்சாந்தி கிடைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலவிக்கிரகங்கள் பல நவபாஷானங்களால் ஆனவை விக்கிரகங்களுக்கு அபிடேகம் செய்யப்படும் பஞ்சாமிர்தம், பால், தயிர், இளநீர் முதலியன விக்கிரகங்களிற்கடியிலுள்ள அஷ்ட பஞ்சனச்சரக்குளில் தெறித்து வருவதனால் இவை மருத்து குணமுடையனவாகவும் நோய் நீக்க வல்லனவாகவும் அமைகின்றன.

ஆலயக்கிரியைகளின் போது ஹோமத்தில் பலவித மூலிகைச் சமித்துக்கள் எரிக்கப்படுகின்றமை (அரசு, ஆல். எருக்கு,மா, வன்னி, பலாசு, நாயுரி, கருங்காலி, அறுகு) இப்புகை சுற்றாடலை தூய்மை ஆக்குவதுடன் சுவாசநோய்கள், சிரநோய்கள், நாசிநோய்கள் என்பன நீக்கம் பெறுகின்றன.

ஆலயத்திற்கு செல்வோர் வெறுங்காலுடன் செல்ல வேண்டுமெனக் கூறப்படுவது ஓர் மருத்துவச் சிந்தனை செய்தியாகும் பாதத்தின் உட்புறத்தில் உடலின் பல பாகங்களையும் இயங்கும் நரம்புகளின் முடிவிடங்களானவை காணப்படுகின்றன. வெறுங்கால் தரையில் பட நடந்து செல்வதனால் கரடுமுரடான தரையானது இந்த நரம்பின் முடிவிடங்களைத் துாண்டும் செயல்களை செய்கிறது இதன் காரணமாக உடலுறுப்புக்களானவை நல்ல முறையில் தொழிற்பட வாய்புக்களேற்படுகின்றது.

தோப்புக்கரணம் போடுதல் மூலம் நாரிப்பிடிப்பு நோய் நீங்குவதுடன் சிரசிலுள்ள கபச்சுரப்பியின் தொழிற்பாடு சீராக நடைபெறவும் உதவும். அட்டாங்க நமஸ்காரம் இடகலை, பிங்கலை செயற்பாடுகள் சீராக நடைபெறவும் பஞ்சாங்க நமஸ்காரம் பெண்களின் இடுப்பு மூட்டுக்களின் அசைவுகள் சீராகப் பேணப்பட்டு உறுதிப்படுத்தப்படுவதனால் மாதவிடாய்க்காலப் பிரச்சினைகள் பல நீங்குவதுடன் பிரசவகாலத்தில் சுகப்பிரசவம் ஏற்படவும் வழியேற்படுகிறது.

கற்பூரச்சட்டி, தீ மிதித்தல், பால்குடம் எடுத்தல் முள் பாதணியில் நடத்தல், காவடி எடுத்தல் போன்ற நேர்த்திக்கடன்களை நிறைவேற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது பாதங்களின் முடிவிடங்கள் தூண்டப்படுகின்றன. நரம்புகள் தூண்டுதல் அடைகின்றன இதன்முலம் மின்காந்த ஓட்டம் சீரடையும். இது சித்த மருத்துவத்தில் வர்ம மருத்துவ முறையை ஒத்ததாக காணப்படுகிறது. இதனால் குதிவாதம் போன்ற நோய்களானவை நீக்கம் பெறுகின்றன.

ஆலய வழிபாட்டில் வேம்பு, அரசு போன்ற மரங்கள் வழிபடப்படுகின்றன. இதற்குக் காரணம் அம் மரங்களிலிருந்து வெளிவரும் காற்று உடல் ஆரோக்கியத்தைப் பேணுகின்றமையினாலாகும். இவற்றுடன் ஆலயத்தில் வழங்கப்படும் பிரசாதங்கள் (விபூதி, சந்தனம், குங்குமம்) ஒரு சித்த மருத்துவ ஔடதமாகும். இறைவனுக்கு படைக்கப்படும் நைவேத்தியங்கள் மருத்துவ குணமுடையனவாகவும் போசாக்குடையனவாகவும் விளங்குகின்றன.

விரதங்கள் இருப்பது உடலுக்கு மிகவும் ஆரோக்கியத்தினை ஏற்படுத்தும் விரதம் இருப்பதன் மூலம் உடலில் கொழுப்பு, இரத்த அழுத்தம் இதய வியாதி, மந்தம் என்பன ஏற்படுவது தவிர்க்கப்படும் அத்துடன் மனக்கட்டுப்பாடும் இங்கு முக்கியமான ஒரு விடயமாக அமைகின்றது.

இந்து ஆலயங்களில் மருத்துவ மூலிகைகள் வளர்ப்பதிலும் பாதுகாப்பதிலும் அனைவரும் பெரும் பங்காற்றி வருகின்றனர். ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு தலவிருட்சமானது காணப்படுகிறது. இவை உடல் உள ஆரோக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றி நிற்கின்றன.

இறைவனுக்கு சில பூக்கள் அர்ச்சிக்கப்பட்டு பின்னர் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படும். அப்பூக்களை சூடிக் கொள்வதன் மூலம் உடலுக்கும் மனத்துக்கும் நன்மை கிடைப்பதுடன் நோய்களையும் நீக்கி உதவுகின்றன. உதாரணமாக பெண்கள் தலையில் மல்லிகைப் பூவினை சூடும் போது அதனை நாசியினால் நுகர்வதன் மூலம் ஈஸ்ரரோசன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் ஓமோனின் சுரப்பு தூண்டப்படுவதாகவும் அதன் அனுகூலம் ஏற்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இவ்வாறாக ஆலயக்கிரிகைகளின் ஒவ்வொரு செயலிலும் மருத்துவத்தினுடைய பயில் நிலையினை நாம் கண்டு கொள்ளக் கூடியதாக உள்ளது. இவை உடல் உள ஆரோக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றி நிற்கின்றன.

**சர்மிளா தம்பிப்பிள்ளை**
பிரதேச செயலகம்,
பச்சிலைப்பள்ளி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் ஆதிகாலச் சிறப்புக்கள்

## குறிஞ்சாத்தீவு

இப்பிரதேசம் ஆனையிறவு உப்பளத்தின் ஓர் பகுதியாகிய குறிஞ்சாத்தீவு உப்பளப் பிரதேசமாக காணப்படுகின்றது. தற்போது இங்கு உப்பு உற்பத்திக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு உப்பு உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது. கடந்த கால யுத்த சூழ்நிலையால் இப்பிரதேசம் கடுமையான பாதிப்புக்கு உட்பட்டுள்ளது. இங்கு யுத்த காலத்திற்கு முன் சுமார் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வந்தனர். அவர்களின் தொழிலாக மீன் பிடித் தொழிலும், உப்பளத்தில் உற்பத்தியிலும் ஈடுபட்டனர். அத்துடன் அப்பிரதேசத்தை அண்டிய பகுதியில் நெற்செய்கையிலும், பயிர்ச்செய்கையிலும் ஈடுபட்டனர். இப்பிரதேசத்தில் இருந்து வந்து வாழ்ந்தவர்கள் யுத்த சூழ்நிலையால் இங்கு வாழ்ந்த மக்கள் இடம் பெயர்ந்து செல்ல நேரிட்டுள்ளது. இன்று வரை இடம் பெயர்ந்த மக்களில் பலர் சொந்த இடம் திரும்பவில்லை. தற்போழுது புதிய தொழிலாளர்களே உப்பு உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் வேறு பகுதியில் இருந்து வந்து தொழில் செய்கின்றனர்.

உப்பள வேலைகள் படிப்படியாக விஸ்தரிக்கப்படும் போது வாழ்ந்த மக்கள் மீள்குடியேற்றக் கூடிய சூழ்நிலை ஏற்படும். இங்கு நன்னீர் முன்னர் குழாய் மூலம் இயக்கச்சிப் பகுதியில் இருந்து அனுப்பப்பட்டு வந்தது. தற்பொழுது அவ்வமைப்பு யுத்தத்தால் பழுதடைந்தமையால் (முற்றாக இல்லாமையால்) நீர்தாங்கி மூலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்னீர் அனுப்பப்படுகின்றது. நீர் விநியோகம் சீராக்கப்படும் போது மக்களின் மீள் குடியேற்றமும் துரிதமாக நடைபெறக்கூடிய சூழ்நிலை ஏற்படும் இங்கு வாழும் மக்களின் போக்குவரத்தும் சீராக்கப்பட வேண்டியுள்ளது.

வாழ்ந்த மக்களுக்கு மீள்குடியேற்றமும் விரைவாக நடைபெறுவது சாத்தியமற்ற ஒன்றாகவே காணப்படும். இப்பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் காணப்படும் பற்றைக்காடுகளில் பற்றி வளரும் குறிஞ்சா செடிகள் இங்கு கூடுதலாக காணப்படுவதால் இப்பிரதேசம் குறிஞ்சாத்தீவு எனப்பெயர் வழக்கத்திற்கு வந்ததாக அறியமுடிகின்றது. இக்கிராமம் தற்பொழுது முகாவில் கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு உட்பட்டது. ஏ9 வீதியில் இருந்து ஆனையிறவுக்கு மேற்கே கிலோ மீற்றருக்கு அப்பால் காணப்படுகின்றது.

## கோவானம்

இப்பிரதேசம் முகமாலைப் பிரதெசத்தில் காணப்படும் ஓர் பழைய கிராமமாகும் ஏ9 வீதிக்கு தெற்காக கிளாலிக்கும் முகமாலைக்கும் இடையில் காணப்படுகிறது. இங்கு கோவணவயல் வெளிப்பிரதேசமும் குடியிருப்புக்களும் கடந்த கால யுத்தத்தின் பின்னர் தற்பொழுதே மீள்குடியேற்றம் இடம் பெற்றுள்ளது.

நீண்ட கால இடப்பெயர்வுக்கு உட்பட்ட கிராமமாக இக்கிராமம் காணப்படுவதால் புனரமைப்பானது காடுகளை அகற்றியே மேற்கொள்ள வேண்டியள்ளது. இங்கு இடப்பெயர்வுக்கு முன் 45 குடும்பங்களிற்கு மேல் வகித்ததாக அறிய முடிகின்றது. இங்கு ஆரம்பகால மக்களின் குடியிருப்புக்கள் காணப்பட்ட பிரதேசமாக இருப்பதால் சுமார் இருதலை முறைக்கு மேல் இப்பகுதி மக்களின் சிலர் பளைப் பகுதியின் பிற கிராமங்களில் குடியமர்ந்து வாழ்ந்ததை விசாரித்து அறிந்ததில் இருந்து அறிய முடிகின்றது இக்கிராமம் பளைப்பகுதியின் பளை கிராமங்களில் ஒன்றாக உள்ளதால் இங்கிருந்து மக்களின் வாழ்விடம் பளையின் பல பகுதிக்கும் பரவியுள்ளதைக் காணலாம் அவர்களின் பயிர்ச்செய்கை நிமிர்த்தமோ திருமணமாகியோ சென்றுள்ளதை அவதானிக்க முடிகின்றது. இங்கு காணப்படும் கோவானம் குளம் பயிர்ச்செய்கை மேற்கொள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதுவாக இருந்துள்ளதை அறியலாம். இங்கு ஆரம்பத்தில் வாழ்ந்த மக்கள் கல்வி நிமிர்த்ததால் ஆரம்ப காலத்தில் இருந்து கல்வி கற்பதற்காக யாழ்நகர் பகுதிக்கு சென்று வந்துள்ளனர். பல்வகையிலும் சிறந்து விளங்கிய இப்பிரதேசம் மீண்டும் பழைய நிலையை அடைய கடும் முயற்சி மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றது.

## சங்கத்தார் வயல்

இக்கிராமம் பழைய கிராமங்களில் ஒன்றாகும். இங்கு வாழ்ந்த மக்கள் கடந்த கால யுத்த சூழ்நிலையில் 1990ம் ஆண்டு முதல் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வாழ்ந்து வந்தனர். 2010ம் ஆண்டின் பின்பே மீள் குடியேறியுள்ளனர். தற்பொழுது இக்கிராமம் மீண்டும் அபிவிருத்தி அடைந்து வருவதைக் காணலாம் இங்கு யுத்தத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டு பழைய நிலைக்கு அபிவிருத்தியடைய கூடியதாக செயற்பாடுகள் நடைபெறுகின்றது.

இப்பிரதேசம் வயல்சார்ந்த பிரதேசமாகும். மக்களின் பிரதான தொழிலாக நெற்செய்கையும் மேட்டு நிலப் பயிற்செய்கையும் காணப்படுகின்றது. மேட்டுப் பயிற்செய்கையில் கத்தரிச் செய்கையில் இப்பிரதேசம் அன்றும் இன்றும் முன்னிலை பெற்று உள்ளது. அத்துடன் முருங்கைச் செய்கையிலும் பெயர் பெற்றது. இங்கு காணப்படும் நன்னீர இச்செய்கைக்கு பெரிதும் உதவியாக உள்ளது.

இங்கு நீர்மட்டம் அதிகளவு ஆழத்தில் இல்லாது மேலாக உள்ளதால் பயிற்செய்கைக்கு ஏற்புடையதாகவுள்ளது. இங்கு மேட்டுப்பயிற்செய்கை சிறப்புற நடைபெறுவதற்கு நீர்வளமே பிரதான காரணமாகும். 11ற்கு மேற்பட்ட குளங்கள் காணப்படுவதால் நீர் உள்ளது. மணல் பாங்கான பிரதேசமாக காணப்படுவதால் நீர் ஊற்று வற்றாது உள்ளது. தென்னைச் செய்கையும் இப்பிரதேசத்தில் சிறப்புற்றுள்ளது பளைப் பிரதேசத்தின் வயல் நிலம் கூடுதலாக உள்ள பிரதேசங்களில் அப்பிரதேசமும் ஒன்று. நில நீர்மட்டம் மேலாக உள்ளதாலும், வயல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாங்கான பிரதேசம் கூடுதலாக உள்ளதாலும், கால்நடைவளர்ப்பும் இங்கு விருத்தியுற்று உள்ளது. கோடை காலத்தில் கால்நடைகளுக்கு தேவையான புல்குளத்தை அண்டிய பிரதேசங்களிலும் வயல்களிலும் காணப்படுவதால் கால்நடை வளர்ப்புக்கு ஏற்றதாகவுள்ளது. தற்பொழுது சுமார் 163 குடும்பத்தினர் வசிக்கின்றனர். இப்பிரதேசம் கோவில் வயல் கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு உட்பட்ட கிராமமாகும். A9 வீதியில் இருந்து இயக்கச்சி கிராமத்திற்கு இப் பெயர் வரக் காரணமாக இங்கு ஆரம்பத்தில் வாழ்ந்த மக்கள் தாங்கள் ஓர் குழுவாக சங்கம் அமைத்து செயற்பட்டு வாழ்ந்தமையாலும் சங்கத்தார் வயல் எனப் பெயர் வந்ததாக இப்பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

## மன்னவிண்டான்

இக்கிராமம் சோறன்பற்று கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு உட்பட்ட ஓர் கிராமமாகும். இங்கு இடப்பெயர்வுக்கு முன் சுமார் 45 குடும்பத்திற்கு மேற்பட்டோர் வசித்தனர். இவர்கள் பயிற்செய்கையில் ஈடுபட்டு வந்தனர். இங்கு மேட்டுப் பயிற்செய்கை சிறப்புற நடைபெற்றது. கடந்த கால யுத்த சூழ்நிலையால் முற்றாக சேதமடைந்தள்ளது. மீள் குடியேற்றத்தின் பின் மீண்டும் அபிவிருத்தி அடைந்து வருகின்ற ஓர் கிராமமாக உள்ளது.

தற்பொழுது மேட்டுப் பயிற்செய்கை மீண்டும் சிறப்புற்று வருகின்றதைக் காணலாம். இப்பிரதேசம் பாகற்செய்கையில் முன்னிலை வகிக்கின்றது. இதற்கு இங்கு காணப்படும் நிலவளமும் நீர்வளமுமே காரணமாகும். இங்கு மக்கள் மீள்குடியேற முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் அப்பகுதி மக்களின் மீள் குடியேற்றம் தாமதமடைகின்றது. இப் பகுதியில் மேட்டுப் பயிற்செய்கையுடன் தென்னைச் செய்கையும் மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன் தனியார் தோட்டமும் உள்ளது. இக் கிராமத்தின் பெயர் இங்கு காணப்படும் குளத்தின் பெயரை ஒட்டியே அமைந்துள்ளதாக இப்பகுதி மக்கள் கூறுகின்றனர். இப்பகுதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் இடப் பெயர்வின் பின் இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் மீள் குடியேறாததால் தற்பொழுது 25 குடும்பத்தை சேர்ந்தோரே மீள்குடியேறியுள்ளனர். இக்கிராமம் புதுக்காட்டு சந்திக்கு கிழக்கே ஏ9 வீதியில் இருந்து நீலாம்பிகை வீதிவரை கரந்தாய் கிராமத்திற்கு மேற்கே அமைந்த கிராமமாகும்.

இக் கிராமங்களின் வரலாறானது இப்பிரதேச மூத்த குடிமக்களிடம் தேடிப் பெற்ற கருத்துக்களின் வாயிலாகவும் வரலாற்று நூற்களை கற்ற ஆசான்களிடம் பெற்ற கலந்துரையாடல்கள் மூலமான தகவலின் அடிப்படையிலும் தொகுக்கப்பட்டு சில கிராமங்களின் விபரங்களை இங்கு உங்கள் முன்வைக்கின்றேன்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்"

**வி.எஸ் புவனராசா**
கிராம உத்தியோகத்தர் (தலைமைப் பீடம்)
பிரதேச செயலகம்.
பச்சிலைப்பள்ளி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாபூசணம் செல்லையா தனபாலசிங்கம் - அவர்களுடன் ஒரு நேர்காணல்

***1. உங்களுடைய ஆரம்பகால கலை வரலாறு பற்றியும் கலைத்துறையில் ஆர்வம் ஏற்பட்டமை பற்றியும் சிறிதளவு கூறுங்கள்***

பளை, முல்லையடியில் செல்லையா இராசமணி தம்பதிகளின் இரண்டாவது மகனாக 1947.03.01ல் பிறந்த நான் ஆரம்பக்கல்வியை பளை மத்திய கல்லூரியில் பெற்றுக்கொண்டேன். பாடசாலை மட்டக் கலை நிகழ்வுகளில் நடித்ததுடன் அதுவே உன் ஆரம்பப் புள்ளியாக அமைந்திருந்ததுடன் இன்று ஒப்பனைக் கலைஞராக உன்னை வளர்த்தது.

***2. உங்கள் கலைப்பயணத்தில் ஆர்வம் ஏற்பட்ட காலத்தில் பளையில் கலை முயற்சிகள் எப்படியிருந்தன.***

எனது தந்தையாரிடம் இருந்து ஆரம்பகால ஒப்பனை செயல்பாட்டில் ஈடுபட்ட போது பளையில் கூத்து பிரபல்யமடைந்திருந்தது. கோயில் திருவிழாக்களில் இரவு நேரங்களில் கூத்து போன்ற நாடகக் காட்சிகள் அரங்கேற்றப்பட்டன. அவற்றுக்கு மேடை ஒப்பனை என்பனவற்றை நான் மேற்கொண்டுள்ளேன்.

***3. ஒப்பனை நுணுக்கங்களை யாரிடம் கற்றுக் கொண்டீர்கள்***

எனது தந்தையிடம் ஆரம்ப நுணுக்கங்களை கற்றுக் கொண்டாலும் போதியளவு பிற ஒப்பனை தொடர்பான நுணுக்கங்களை கற்றுக் கொள்ள அளவெட்டி ஐயாத்துரை அவர்களின் கீழ் ஒப்பனைக் கலைஞராக பணியாற்றினேன். ஐயாத்துரை அவர்களிடம் நான் பெற்ற பயிற்சிகளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகச்சுருக்கங்களை நீக்கி அதனூடாக சிறப்பான ஒப்பனையை மேற் கொள்வது பற்றி நீண்ட அனுபவத்தைப் பெற்றுக் கொண்டேன்.

**4. 2016 ஆம் ஆண்டிற்கான கலாபூசணம் விருதினை பெற்றுக் கொண்டமை பற்றி என்ன கூறுகிறீர்கள்**

எனது தந்தையார் சீன் செல்லையாவும் கலாபூசணம் விருதினைப் பெற்றுக் கொண்டார். எனக்கும் கடந்த மாதம் கொழும்பில் இடம்பெற்ற விழாவில் கலாபூசணம் விருது ஒப்பனைக் கலைக்காக கிடைத்தது. கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து இருவருக்கே இவ்விருது கிடைக்கப்பெற்ற நிலையில் அதில் நானும் ஒருவன் என்ற ரீதியில் பெருமை கொள்கின்றேன்.

**5. நீங்கள் பெற்ற ஏனைய விருதுகள் பற்றிக் கூறுங்கள்**

1984 ஆம் ஆண்டு ரூபவாகினி கூட்டுத்தாபன நிகழ்ச்சி ஒன்றின் சிறந்த ஒப்பனைக் கலைஞராக தேர்வு செய்யப்பட்டேன் 2000 ஆம் ஆண்டளவில் பளைப்பிரதேச செயலகத்தால் சிறந்த ஒப்பனையாளர் எனும் பட்டமும் பெற்றதுடன், 2014 ஆம் ஆண்டு முதலமைச்சர் விருதினையும், கலைத்தென்றல் விருதினையும், 2016 ஆம் ஆண்டு கலைக்கிளி விருது, கலாபூசணம் விருது என்பவற்றையும் பெற்றுள்ளேன்.

**இ.மேகலைச்செல்வி**
கலாசார உத்தியோகத்தர்,
பச்சிலைப்பள்ளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைத்தென்றல் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்தையன் கறுப்பையா
## (புல்லாங்குழல்)



கண்டி மாவட்டத்தை பிறப்பிடமாகவும் இத்தாவில் பளையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் புல்லாங்குழல் கலைஞராக இப்பிரதேசத்தில் சிறந்து விளங்குகின்றார். 14 வயது முதல் கலைத்துறையில் ஈடுபடத் தொடங்கிய இவர் பல கலைஞர்களை உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர் கோயில் நிகழ்வுகள் கலை விழாக்கள், பாடசாலை நிகழ்வுகளான நவராத்திரி, பரிசில் நாள் போன்ற நிகழ்வுகளில், புல்லாங்குழல் இசைப்பதில் சிறந்து விளங்குகின்றார். இவரது இந்த கலைச்சேவையை பாராட்டி இவருக்கு 2016 ம் ஆண்டிற்கான கலைத்தென்றல் விருது வழங்கி கௌரவிக்கப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னன் முருகேசு
## (இசைநாடகலைஞர்)



இவர் புலோப்பளையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர் 21.10.1955ம் ஆண்டு பிறந்த இவர் நாடகத்துறையில் சிறந்து விளங்கிய ஒரு கலைஞராவார். இளம் வயதிலிருந்தே நாடகங்களை பழக்கி கலைஞர்கள் பலரை உருவாக்கியவர்.

இவர் காத்தவராயன், அரிச்சந்திரா போன்ற நாடகங்களை 28 மேடைகள் வரை மேடையேற்றியுள்ளார். ஆலயத்திருவிழாக்கள் மற்றும் வெளியூர்களிலும் இவர் தனது தந்தையின் வழியில் நின்று கலைக்கு பெரும் தொண்டாற்றியமைக்காக இவருக்கு 2016ம் ஆண்டுக்கான கலைத்தென்றல் விருது வழங்கி கௌரவிக்கப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னையா லோகேஸ்வரன்
## (இசைநாடகக் கலைஞர்)



செந்தில்நகர் பளையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இவர் ஆரம்ப காலத்தில் பாடசாலையில் இசையினை ஏரம்பமுர்த்தி என்பவரிடம் கற்றிருந்தார். இவர் 20.02.1955ம் ஆண்டு பிறந்தவர் சிறுவயதிலிருந்தே கலைத்துறையில் ஈடுபட்டு பல பரிசில்களைப் பெற்றவர்.

இவர் முதன் முதலில் தியாகமா? பாசமா? என்ற நாடகத்தில் நடித்து எல்லோருடைய பாராட்டையும் பெற்றவர் இவர் தனது மானசீக குருவாக நாடக திலகம் கே.வி நற்குணம் என்பவரை கொண்டு பல நாடகங்களை பழகி நடித்துள்ளார். அரிச்சந்திரா, சத்தியவான் சாவித்திரி பவளக்கொடி, போன்ற நாடகங்களில் நடித்துள்ளார் தற்போது ஆறுமுகம் அண்ணாவியாரின் காத்தவராயன் நாடகத்தில் தொடர்ந்து நடித்து வருகிறார். இவரது இந்தக் கலைப்பணியை பராட்டி இவருக்கு 2016 ம் ஆண்டிற்கான கலைத்தென்றல் விருது வழங்கி கௌரவிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு.மிக்கேல் பிரான்சிஸ்
## (நாடகம்)



புலோப்பளை கிழக்கு பளையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இவர் நாடகத்துறையில் தனது கலைப் பயணத்தை தொடர்ந்து வருகிறார். புலோப்பளை சென் பீற்றர் கலாமன்றத்தினூடாக தனது கலைச்சேவையை செய்து வருகின்றார். 02.07.1947 ம் ஆண்டில் பிறந்த இவர் அரசினர் வைத்தியசாலையில் பணியாற்றி தற்போது ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் கலைத்துறையை விட கிராம அபிவிருத்திச் சங்கம். கமக்காரர் அமைப்பு, ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம், ஆலயம் பணிச்சபையின் செயலாளர் ஆகிய பொது அமைப்புக்களிலும் அங்கத்தவராக திகழ்ந்து பணியாற்றி வருகிறார்.

1957ம் ஆண்டு தொடக்கம் தனது கலைத்துறையை ஆரம்பித்த இவர் கற்பகமாலா, புனிதவதி, கிறிஸ்தோபர், சங்கிலியன், மனம் போல மாங்கல்யம் போன்ற நாடகங்களில் நடித்துள்ளார். இவரின் இந்த கலைச் சேவையை பராட்டி இவருக்கு 2016ம் ஆண்டிற்கான கலைத்தென்றல் விருது வழங்கி கௌரவிக்கப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org